

# INக்LUSIVE NEWSROOMS

## பால்புது (LGBTQIA+) ஊடகக்கையேடு



# INக்LUSIVE NEWSROOMS

குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்
Queer Chennai Chronicles

The NEWS Minute

ஆதரவு:
Google News Initiative

**இன்க்ளூஸிவ் நியூஸ்ரூம்ஸ்**

© குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ் மற்றும் த நியூஸ் மினிட்

முதல் பதிப்பு: ஜூன் 2023
வெளியீடு: ‘குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்’ மற்றும் ‘த நியூஸ் மினிட்’
ஆதரவு: கூகுள் நியூஸ் இனிஷியேட்டிவ்
மின்னஞ்சல்: news.inq@gmail.com
இணையதள முகவரி: news-inq.com
அட்டைப்படம்: வை
நூல் வடிவமைப்பு: ஜீவமணி

இன்க்ளூஸிவ் நியூஸ்ரூம்ஸ் முன்னெடுப்பை
தலைமயேற்று வழிநடத்துபவர்கள்:
குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்:
கிரீஷ் – பொறுப்பாசிரியர், குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்
இன்க்ளூஸிவ் நியூஸ்ரூம்ஸ் – ஆசிரியர் – தமிழ் மற்றும் Creative Lead

மௌலி, இணை நிறுவனர், குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்
இன்க்ளூஸிவ் நியூஸ்ரூம்ஸ் – திட்ட மேலாளர்

செந்தில், திட்ட இயக்குனர், குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்
இன்க்ளூஸிவ் நியூஸ் ரூம்ஸ் – ஒருங்கிணைப்பாளர்

தி நியூஸ் மினிட்:
ராகமாலிகா கார்த்திகேயன் – மூத்த தலைவர் – வருவாய் & முன்னெடுப்புகள்,
த நியூஸ் மினிட்
இன்க்ளூஸிவ் நியூஸ்ரூம்ஸ் – திட்ட மேலாளர்

# பொருளடக்கம்


- கையேடு பற்றிய ஆறு கேள்விகள் ........ 5
- செய்திகளில் பால்புதுமை: த நியூஸ் மினிட் நிறுவனத்தின் குறிப்பு ........ 8
- மொழிகளில் பால்புதுமை: குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸின் குறிப்பு ........ 11
- அணிந்துரை ........ 14

1. முற்போக்கான சமூகத்தை உருவாக்குவதில் ஊடகவியலாளர்களின் பங்கு ........ 16
2. பால்புது (LGBTQIA+) சொற்களஞ்சியம் ........ 18
   - பகுதி 1: பால்சார் பதங்கள்
   - பகுதி 2: பாலினம்சார் பதங்கள்
   - பகுதி 3: பாலியல்புசார் பதங்கள்
   - பகுதி 4: ஒருமித்த பதங்கள்
   - பகுதி 5: சமூகம்சார் பிற பதங்கள்
3. பத்திரிக்கையாளர்களுக்கான அடிப்படைகள் ........ 27
4. ஆசிரியர்களுக்கான அடிப்படைகள் ........ 31
5. கருத்துக் கட்டுரைகளைப் பெறுவதும் எழுதுவதும் ........ 35
6. புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் ........ 39

7. பால்புது சுயமரியாதை மாத நிகழ்வுகளும், மற்றைய பால்புதுமையினர் நிகழ்வுகளும் ........ 44

8. செய்திகள் மற்றும் தற்போதைய நிகழ்வுகளை வழங்குதல் ........ 48

9. நல்வாழ்வு/உடல்நலம் பற்றிய செய்திகள் - குயர் மக்களின் ஆரோக்கியம் பற்றிய ஆபத்தான சொல்லாடல்களைத் மாற்றியமைத்தல் ........ 51

10. உடல்நலம் ........ 58

11. மனநலம் மற்றும் தற்கொலை ........ 62

12. குற்றம் மற்றும் பால்புதுமையினர் ........ 66

13. சட்டம் பற்றியச் செய்திகள் ........ 70

14. அரசியல் ........ 76

15. கல்வி ........ 83

16. அறிவியல் புலத்தில் வரலாற்று ரீதியான பால்புதுமையின வெறுப்பும் குறைவான பால்புதுமையின பிரதிநிதித்துவமும் ........ 89

17. அறிவியல் ........ 91

18. பொழுதுபோக்கு ........ 93

19. திருநர்கள் மற்றும் ஊடுபால் கொண்ட தடகள வீரர்களைப் பற்றி அறிவியல் சொல்வது என்ன? ........ 96

20. விளையாட்டு ........ 104

21. வணிகம் மற்றும் வேலைவாய்ப்பு ........ 106

22. மதம் மற்றும் ஆன்மீகம் ........ 111

□ பங்களிப்பாளர்கள் ........ 114



# கையேடு பற்றிய ஆறு கேள்விகள்

## இது **என்ன** கையேடு?

பால்புதுமையினர் (LGBTQIA+), பால்புது சமூகங்கள் மற்றும் அவர்களது பிரச்சனைகளைப் பற்றிய செய்திகளை சேகரித்து வெளியிடும் ஊடகவியலாளர்களுக்காக உருவாக்கப்பட்டதே இந்த கையேடு ஆகும். பால்புது சமூகத்தினரைக் குறிக்க பயன்படும் சொற்களஞ்சியம் இந்தக் கையேட்டில் உள்ளது. பயன்படுத்தக்கூடாத தலைப்புகள் வெவ்வேறு பிரிவுகளின் கீழுள்ள தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் செய்திகளை சேகரிக்கும் போதும் அவற்றைத் தொகுக்கும்போதும் பயன்படுத்த வேண்டிய நடைமுறைகள் பல்வேறு தலைப்புகளின் கீழ் எளிமையான முறையில் இந்தக் கையேட்டில் விளக்கப்பட்டிருக்கிறது.

குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ் மற்றும் த நியூஸ் மினிட் நிறுவனங்களின் மூலமாக கூகிள் நியூஸ் இனிஷியேட்டிவின் ஆதரவுடன் இந்த கையேடு உருவாக்கப் பட்டிருக்கிறது.

## **எதற்காக** இந்தக் கையேட்டினை நாங்கள் உருவாக்கினோம்?

தமிழ் ஊடகங்களில் பெரும்பான்மையான நேரங்களில் பால்புதுமையினரின் சித்தரிப்பு கண்ணியக் குறைவுடனும், அறியாமையுடனும் தவறான கோணத்திலுமே இருக்கின்றது. இந்தத் தவறுகளை ஊடகவியலாளர்களிடம் பால்புதுமையினர் சுட்டிக் காட்டும்போது சரியான பதம் குறித்து தங்களுக்குத் தெரியவில்லை என்பதே பொதுவான பதிலாக இருக்கிறது. சில சித்தரிப்புகள் தவறானவை என்பதைத் தாங்கள் உணரவில்லை என்றும் ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பால்புது மக்கள், சமூகங்கள் மற்றும் அவர்களின் பிரச்சினைகளை செய்தியாக்கவோ காணொளியாக்கவோ நினைக்கும் ஊடகவியலாளர்களுக்காகவே இந்தக் கையேட்டினை நாங்கள் உருவாக்கி இருக்கிறோம்.

## இது **யாருக்கு** பயன்படும்?

*பால்புதுமையினர் அல்லது அவர்களின் பிரச்சனை பற்றிய செய்தி அல்லது காணொளியை உருவாக்கத் திட்டமிடும் செய்தியாளர், எழுத்தாளர், தொகுப்பாளர், புகைப்படக் கலைஞர், காணொளி செய்தியாளர் அல்லது செய்தித் தயாரிப்பாளருக்கு இந்தக் கையேடு பயன்படும். இது கல்விப்புலம் சார்ந்த ஒரு ஆய்வறிக்கை அல்ல. இந்தக் கையேடு, ஊடகவியலாளர்களுக்கான செயல்முறைக் கையேடாக இருக்க வேண்டும் எனும் நோக்கத்துடனே எழுதப்பட்டிருக்கிறது. வாசிப்பதற்கு எளிதாக நீண்ட பத்திகளைத் தவிர்த்து கூடிய வரையில் சிறுசிறு முக்கியமான வாக்கியங்களாகவே எழுதி இருக்கிறோம்.*

## இதை **எப்போது** பயன்படுத்தலாம்?

*ஒரு போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் பால்புது நபரைப் புகைப்படம் எடுப்பதில் உள்ள அறம் பற்றி உங்களுக்குக் கேள்வி இருக்கலாம். ஆரோக்கியம் பற்றிய ஒரு செய்தித் தொகுப்பில் சிக்கலான சில கேள்விகளை எப்படிக் கேட்பது என்று உங்களுக்கு கேள்விகள் இருக்கலாம். பால்புது நபர் குற்றவாளியாக இருக்கும் ஒரு குற்றச் செய்தியை பரபரப்பானதாக அல்லாமல் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும்படி எப்படித் தொகுப்பது என நீங்கள் உறுதிப்படுத்த நினைக்கலாம். தனித்து இயங்கும் செய்தியாளர் ஒருவரிடமிருந்து வந்திருக்கும் செய்திக்கான யோசனையை ஏற்பதா வேண்டாமா என்று உங்களுக்குக் கேள்வி எழலாம்.*

*உங்களுக்காகவே இந்த கையேடு உருவாக்கப்பட்டிருக்கிறது. உங்கள் வேலை மற்றும் குழப்பங்களைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் இந்தக் கையேட்டினை, பால்புதுமையினர் பற்றிய செய்திகளை எப்படி வழங்குவது அல்லது சந்தேகங்களை யாரிடம் கேட்பது எனும் கேள்வி வரும்போதெல்லாம் பயன்படுத்தலாம்.*

## இதை உருவாக்கியவர்களின் நம்பகத்தன்மை **என்ன?**

***குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்:*** *ஒரு சுயாதீனப் பதிப்பகமாகவும் இலக்கியக் குழுவாகவும் செயல்பட்டுவரும் குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ், பால்புது எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்களை பொதுச்சமூகத்தின் கவனத்தில் கொண்டு வருவதற்காக உருவாக்கப்பட்டது. இப்போது இருக்கும் இலக்கியவெளிகள் மற்றும் ஊடகங்களைப் பால்புதுமையினரையும் உள்ளடக்கியதாக மாற்றுவதும் குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸின் முக்கிய நோக்கமாகும். பால்புது இலக்கியவாதிகள் மற்றும் பால்புது ஆதரவாளர்களை ஒருங்கிணைத்து இந்தியாவிலேயே முதல் குயர் இலக்கிய விழாவை குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ் நடத்தியது. அனைவரையும் உள்ளடக்கியச் செய்தி உருவாக்க வழிகாட்டுதல், பணிச்சூழலை அனைவரையும் உள்ளடக்கியதாக மாற்றும் வழிமுறைகள் போன்றவற்றை உருவாக்குவதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் செய்தி நிறுவனங்களுடன் இணைந்து குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ் பணியாற்றி வருகிறது.*

***த நியூஸ் மினிட்:*** *கடந்த ஒன்பது வருடங்களாக இந்தியாவின் பால்புதுமையினர் பற்றியச் செய்திகளை கண்ணியத்துடன் வழங்குவதில் ‘த நியூஸ் மினிட்’ முதன்மையானதாக*

இருக்கிறது. தலைமைப் பொறுப்பில் ஒரு பால்புதுமையினரைக் கொண்டிருக்கும் இந்த நிறுவனத்தில் பால்புதுமையினரின் வாழ்வு மற்றும் உரிமைகள் பற்றியச் செய்திகளை சிறப்பாக எப்படி எழுதுவது, தொகுப்பது என்பதுபோன்ற நடைமுறைகள் தொடர்ந்து செம்மைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே அதிக பன்முகத்தன்மை வாய்ந்த ஆசிரியர் குழுவைக் கொண்ட த நியூஸ் மினிட் நிறுவனத்தின் முக்கிய நோக்கம், சமூகம் கண்டுகொள்ளாத குரல்களுக்கான மேடையை அமைத்துக் கொடுப்பதாகும்.

***கூகிள் நியூஸ் இனிஷியேட்டிவ்:*** *ஊடகவியலாளர்கள் மற்றும் பதிப்பகங்களுடன் இணைந்து நிலையான, மாறுபட்ட மற்றும் புதுமையானச் செய்தி அமைப்பினை கூகிள் நியூஸ் இனிஷியேட்டிவ் உருவாக்கி வருகிறது. ஊடகத்துறை சந்திக்கும் அழுத்தமானப் பிரச்சினைகளை சமாளித்து மாறுபட்ட, புதுமையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தினை உருவாக்க நினைக்கும் ஊடகங்களுடன் ஒற்றைக் குறிக்கோளோடு இணைந்து செயல்பட்டு செய்திகளுக்கு வலுவான எதிர்காலத்தை உருவாக்குவதே கூகிள் இனிஷியேட்டிவின் நோக்கமாகும்.*

*இந்தக் கையேட்டை எழுதுவதில் பங்களிப்பு செய்தவர்களில் பெரும்பான்மையினர் பால்புது நபர்கள். அவர்களில் பலர் ஊடகவியலாளர்களாகவும் இருக்கின்றனர். எனவே இந்தியாவில் பால்புதுமையினருக்கு இருக்கும் பிரச்சனைகளைப் பற்றி நாங்கள் புரிந்து வைத்திருக்கிறோம். செய்தி அறைகள் எப்படி இயங்கும், அன்றாடம் ஊடகவியாளர்கள் என்னென்ன சவால்களை சந்திப்பார்கள் என்பதையும் நாங்கள் அறிந்து வைத்திருக்கிறோம்.*

## கேள்விகள் இருந்தால் **யாரை** அணுகுவது?

*மின்னஞ்சல்: news.inq@gmail.com*
*இன்ஸ்டாகிராம்: @news.inq*

# செய்திகளில் பால்புதுமை: த நியூஸ் மினிட் நிறுவனத்தின் குறிப்பு

இந்தியாவின் பெரும்பாலான ஆங்கிலச் செய்தி நிறுவனங்கள் டெல்லி அல்லது மும்பையை மையமாகக் கொண்டு இயங்கிக்கொண்டிருந்த சூழலில், தென்னிந்தியாவில் இருந்து தென்னிந்திய செய்திகளை வழங்க வேண்டும் எனும் நோக்கத்தோடு 'த நியூஸ் மினிட்' நிறுவனம் தொடங்கப்பட்டது. ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் தெலுங்கானா ஆகிய ஐந்து தென்னிந்திய மாநிலங்களில் உள்ள மக்களோடு இணைந்திருக்கக்கூடிய ஒரு குரல் தேவை என்று 'த நியூஸ் மினிட்' நிறுவனர்கள் உணர்ந்திருந்தனர். கடந்த ஒன்பது ஆண்டுகளாக, த நியூஸ் மினிட் நிறுவனம் பாலினம், பாலீர்ப்பு மற்றும் சாதி பற்றிய உணர்வுரீதியானச் செய்திகளை முன்னெடுக்கும் ஒரு பெண்ணிய ஊடக நிறுவனமாகப் பரிணமித்துள்ளது.

பலதரப்பட்ட குரல்களை உள்ளடக்கிய, அதிகாரத்திடம் உண்மை பேசும் மரபு கொண்ட ஒரு ஊடகமாக வடிவமைத்ததாலேயே இது சாத்தியமானது. தலித், இஸ்லாமிய, கிறுத்துவ மற்றும் பால்புது நபர்களாலான 'த நியூஸ் மினிட்'டின் தலைமையானது, வழமைகளை உடைக்கும் சுதந்திரமான ஊடகத்தை உருவாக்கும் நோக்கத்தோடு நிறுவனர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறது.

2014 இல் இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து பால்புதுமையினரின் பிரச்சனைகளை உணர்வுபூர்வமாக அணுகிவருகிறோம். 2016 இல், "Let's talk LGBTQIA+" என்ற தலைப்பில் ஒரு தொடரை நடத்தினோம், அதில் இந்தியப் பால்புதுமையினரின் குரல்கள் மற்றும் வாழ்வியலை மையப்படுத்தினோம். இந்தத் தொடருக்கு பாலின உணர்வுசார் தன்மைக்கான லாட்லி (Laadli) விருது கிடைத்தது. 2017 இன் தொடக்கத்தில் பால்புதுமையினரின் பிரச்சனைகளை எப்படி அணுகுவது, செய்தியாக்குவது என்பதற்கான ஒரு வழிகாட்டியை எங்களது குழுவினருக்காக உருவாக்கினோம். புதிதாகப் பணியில் இணையும் ஒவ்வொரு செய்தியாளரும் எங்களது அறத்தைப் புரிந்துகொள்ளவும் சரியான மொழி மற்றும் கோணங்களுடன் செய்திகளை எழுதவும் இந்த வழிகாட்டி உதவியது.

ஊடகக் கையேட்டிற்கான யோசனை, 2021 இல் குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ் நடத்திய குயர் இலக்கிய விழாவில் தோன்றியது. அப்போது பெருந்தொற்றுக் காலம் என்பதால்

குயர் இலக்கிய விழா இணையவழியில் நடைபெற்றது. ஊடகங்கள் பால்புதுமையினரின் பிரச்சனையை எவ்வாறு அணுகுகின்றன என்ற விவாத மேடையில் த நியூஸ் மினிட்டின் ராகமாலிகா கார்த்திகேயன் பங்கேற்றார். விவாதத்தின்போது பால்புதுமையினரின் பிரச்சனைகளை எவ்வாறு அணுகுவது என்பதற்கான த நியூஸ் மினிட்டின் வழிகாட்டி பற்றி அவர் பேசினார். ஊடகங்களுக்கான ஒரு பொது வழிகாட்டி இருக்கிறதா என்ற கேள்வி எழுந்தது, எங்களுக்குத் தெரிந்தவரை ஒரு விரிவான கையேடு இல்லை என்பதும் வெளிச்சத்துக்கு வந்தது.

குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸும் த நியூஸ் மினிட்டும் இணைந்து ஒரு கையேட்டினை உருவாக்குவதே அடுத்த கட்டமாக இருக்க வேண்டும் என்று தோன்றியது. ஊடகக் கையேட்டுக்கான முதற்கட்ட புற வடிவம் உருவாக்கப்பட்டது. அப்போதிருந்தே ஆங்கிலத்திலும் தமிழிலும் இந்தக் கையேட்டினை நாங்கள் கொண்டுவர விரும்பினோம். ஒரு பால்புது சொற்களஞ்சியத்தை உருவாக்குவதும் கையேட்டின் அத்தியாயங்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான ஒரு வடிவத்தை உருவாக்குவதுமே இந்த முன்னெடுப்பின் முதற்படியாக இருக்க வேண்டும் என நாங்கள் முடிவு செய்தோம்.

இந்தக் காலகட்டத்தில் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு விசாரணைக்கு வந்திருந்தது. குடும்பத்தினரிடமிருந்து பாதுகாப்பு கோரிய இரண்டு தன்பாலீர்ப்பு கொண்ட பெண்கள் பற்றிய இந்த வழக்கில் பால்புதுமையினருக்கு உதவக்கூடிய பல முற்போக்கான உத்தரவுகளை நீதிமன்றம் தொடர்ந்து வழங்கியது. ஊடகங்கள் பயன்படுத்தக்கூடிய கண்ணியமான சொற்களின் பட்டியல் கொண்ட சொற்களஞ்சியம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்று தமிழ்நாடு மாநில அரசுக்கும் ஒரு பரிந்துரை தரப்பட்டது. அப்போது நாங்கள் சொற்களஞ்சியத்துக்கான வேலையைத் தொடங்கி விட்டிருந்தோம். நீதிமன்றத்தின் பரிந்துரையைத் தொடர்ந்து சொற்களஞ்சிய வேலையைத் துரிதப்படுத்த முடிவெடுத்தோம். பிற பால்புது சமூக அமைப்புகள், தனி நபர்களுடன் இணைந்து ஆங்கிலம் மற்றும் தமிழ் சொற்களஞ்சியங்களை நீதிமன்றத்துக்கு அனுப்பினோம். இறுதியில் தமிழ்நாடு மாநில கெசட்டில் ஒரு பெயர் விளக்கப் பட்டியல் பிரசுரிக்கப்பட்டது. அதில் இருந்த 90% பெயர்கள் எங்களால் - பால்புது சமூகத்தினரால் உருவாக்கப்பட்டவை.

இந்தப் பயணத்தில் கூகுள் நியூஸ் இனிஷியேட்டிவ் போன்ற பிறரும் இணைந்து கொண்டதால் எங்களது கனவு இன்னும் பெருமளவில் விரிந்தது. தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமல்லாமல் தெலுங்கு, மராத்தி, இந்தி மற்றும் கன்னட ஊடகக் கையேடுகளை உருவாக்கும் திட்டம் பிறந்தது. இந்தியா முழுக்க மூன்று மொழிகளில் பயிற்சிப்பட்டறைகள் நடத்துதல், பால்புது வாழ்வைக் குறித்த சிறப்பானச் செய்திகளை எழுதுபவர்களுக்கு ஊக்கத்தொகை (fellowship) அளித்தல் போன்ற திட்டங்களை செயல்படுத்துவதோடு சிறப்பான ஊடகச் சூழலை உருவாக்குவதற்கான எல்லாவற்றையும் செய்து வருகிறோம்.

பால்புதுமையினரின் வாழ்க்கை பற்றிய செய்திகளில் தவறுகள், தவறான செய்திகள் இருப்பதை சுட்டிக்காட்டும்போது பத்திரிக்கையாளர்களும் ஊடகங்களுக்கும், "எங்களுக்குத் தெரியவில்லை" என்ற பதிலையே பால்புதுமையினரிடம் சொல்கின்றனர். சரியான மொழி என்ன, இதை இன்னும் உணர்வுப்பூர்வமாக எப்படி எழுதுவது, வேண்டுமென்றே தவறு

செய்யவில்லை, கற்றுக்கொள்ள விரும்புகிறேன் என்பது போன்றவை மற்ற பதில்களாக இருக்கின்றன.

இதோ, தவறான புரிதல்களிலிருந்து மீளவும் கற்றுக்கொள்ளவும் ஒரு கையேட்டினை வெளியிட்டிருக்கிறோம். இந்தக் கையேட்டின் நோக்கம் பத்திரிக்கையாளர்களுக்கும் ஊடகங்களுக்கும் பால்புதுமையினர் பற்றிய செய்திகளில் சரியான மொழியைப் பயன்படுத்தக் கற்றுத் தருவதே ஆகும். பத்திரிக்கைத்துறையின் பல்வேறு பிரிவுகளில் செய்திகளை வழங்கும் அனைவரின் கேள்விகளுக்கும் பதில் அளிக்கும் வகையில் இந்தக் கையேடு உருவாக்கப்பட்டிருக்கிறது. பொதுவான செய்தி வழங்கல், செய்திகளைத் தொகுத்தல், கருத்துக் கட்டுரைகள் எழுதுதல், விளையாட்டு, குற்றம், பொழுதுபோக்கு, வணிகம், அரசியல், கல்வி உள்ளிட்ட செய்திகளை எழுதுதல் என இந்தக் கையேட்டில் 20க்கும் மேற்பட்ட அத்தியாயங்கள் உள்ளன. ஒரு செய்தியை வழங்கும்போது பத்திரிக்கையாளர் விரைவாகவும் எளிதாகவும் சரிபார்த்துக்கொள்ளும் வகையில் தகவல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

கையேட்டைப் படிக்கத் தொடங்குங்கள்!

# மொழிகளில் பால்புதுமை:
# குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸின் குறிப்பு

குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ் என்பது ஒரு சுயாதீன பதிப்பகம் மற்றும் இலக்கியக் குழுமம். பால்புது எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்களை முன்னிலைப்படுத்துவதற்காகவும், இருக்கும் இலக்கியப் பரப்பையும் ஊடகத் தளங்களையும் பால்புது மக்களுக்கானதாகவும் மாற்றவும் 2017 இல் குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ் தொடங்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ் இயல்பாக வளர்ந்து வருகிறது, எங்கள் நோக்கத்தையும் லட்சியத்தையும் நோக்கி முன்னேறக்கூடிய முன்னெடுப்புகளை உருவாக்கி அதற்கு ஏற்பத் தகவமைத்துக் கொண்டிருக்கிறது. சுயாதீன பதிப்பகமாகத் தொடங்கினோம், 2018 இல் இந்தியாவின் முதல் குயர் இலக்கிய விழாவான சென்னை குயர் இலக்கிய விழாவை ஒருங்கிணைத்தோம். இது உரையாடலைத் தொடர்வதற்கு உதவியது.

குயர் சென்னை க்ரோன்னிக்கிள்ஸின் உறுப்பினர்கள் சில பத்தாண்டுகளாக பொதுவெளியில் இயங்கி வருகிறோம். எங்களது அனுபவத்தில், கருத்துக்களைக் கூறவோ உரிமை கோரியோ மக்களிடம் பேசவோ பல பால்புது மக்கள் ஊடகங்களை அணுகுவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் பல பால்புது மக்களுக்கு ஊடகங்கள் எப்படி இயங்குகின்றன என்பது தெரிவதில்லை. ஊடகங்களுடன் பால்புது மக்கள் பேசுவது தவறான முறையில் மேற்கோள் காட்டப்படுகிறது, முன்பே முடிவு செய்யப்பட்ட ஒரு செய்திக்கோணத்தில் பால்புது அனுபவங்கள் திரிக்கப்படுகின்றன. இதுபோல அணுகுவது மேலும் மன உளைச்சலைத் தருகிறது என்பதால் ஊடகங்களுடன் உரையாடுவதையே பால்புது மக்களில் சிலர் கைவிட்டிருக்கிறோம். நாம் நிறைய முயற்சி எடுத்தும்கூட ஊடகங்கள் அதேபோன்ற தவறுகளைத் தொடர்ந்து செய்கின்றன.

பொதுவாக ஊடகங்களில் பால்புது மக்கள் மற்றும் அடையாளங்களைப் பற்றிய அறியாமை நிலவுகிறது. நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் பல முன்முடிவுகளும் புரிதல்களும்கூட இருக்கின்றன. இப்போது எந்த நிலையில் இருக்கிறோம் என்றால் பால்புது மக்களைப் பற்றிய பொதுப் புரிதல்களே செய்திகளாக வெளிப்படுகின்றன, இந்த ஸ்டீரியோடைப்பான பொதுப் புரிதல்கள்கூட மிகவும் தவறானவையாக இருக்கின்றன என்பதையும் பல பால்புது மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். எங்களது சமூகங்களுக்குள்ளே இருக்கும் பன்முகத்தன்மை

அழிக்கப்படுகிறது. பத்திரிக்கையாளர்கள் செய்திக்காக எங்களிடம் பேசும்போது, “எழுத விரும்பியதை ஏற்கனவே எழுதிவிட்டார்கள், அதன் நம்பகத் தன்மையை அதிகரிக்க ஏதாவது பொருத்தமான இடத்தில் நாம் பேசியதை இட்டு நிரப்புவார்கள்” என்ற ஒரு சந்தேகம் மனதை அரிக்கிறது. ஏற்கனவே எழுதப்பட்ட கதையில் நாங்கள் கதாபாத்திரங்களாக இருக்கிறோம்.

கடந்த சில ஆண்டுகளாக பால்புது மக்களைப் பற்றி ஊடகங்கள் வழங்கும் செய்திகளில் நிச்சயமாக கவனிக்கத்தக்க மாற்றம் வந்திருக்கிறது, அதை மறுப்பதற்கில்லை. ஆனால் இப்போதைய நிலைமை இன்னும் கூட மேம்படவேண்டியிருக்கிறது. குறிப்பாக குறுகிய கவனம் கொண்ட பார்வையாளர்கள்/வாசகர்களைக் கவரவேண்டிய வணிக நிர்ப்பந்தம் மற்றும் உணர்வுசார் புரிதல் ஆகிய இரண்டு பக்கங்களையும் ஊடகவியலாளர்கள் சமநிலைக்குக் கொண்டுவரவேண்டும்.

குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸில் இலக்கியம், கலை, விளம்பரத் துறை, தொழில்நுட்பம், மேம்பாட்டுத் துறையில் இருக்கும் வல்லுநர்கள் மற்றும் பலவிதமான சமூக/பொருளாதார பின்னணி கொண்டவர்கள் தலைமை வகிக்கிறார்கள். அதை விட முக்கியமான விஷயம் என்னவென்றால், குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பால்புது சமூகத்துக்காக அடிமட்டத்திலிருந்தே பத்தாண்டுகளுக்கும் மேலாகப் வேலைசெய்த அனுபவம் கொண்டவர்கள்.

2018 இல் முதல் குயர் இலக்கிய விழாவை வடிவமைத்தபோது ஊடகங்களில் பால்புது செய்திகள் பற்றிய ஒரு கலந்துரையாடல் இருக்கவேண்டும் என்று முடிவெடுத்தோம். சமூகத்தில் பால்புது மக்களின் வாழ்வை வரையறுப்பது, சித்தரிப்பது ஆகியவற்றில் ஊடகம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதால் செய்தி மற்றும் ஊடகங்கள் பற்றிய உரையாடல் வேண்டும் என்று நினைத்தோம். கடந்த சில ஆண்டுகளாக, தொண்டு நிறுவனங்களின் அறிக்கைகள், பரபரப்பான செய்திகள், தவறான தகவல்களுக்கு அப்பாற்பட்டு பால்புது மக்களின் வாழ்வை மையப்படுத்தி வருகிறோம். 2021 ஆம் ஆண்டின் குயர் இலக்கிய விழாவில் மீண்டும் ஒரு முறை செய்தி வழங்கல் பற்றிய ஒரு கலந்துரையாடலை நடத்தினோம். அங்கிருந்து தொடங்கிய பயணத்தின் ஒரு அங்கமாக, ஊடகங்களுடன் இணைந்து இன்க்ளூசிவ் நியூஸ்ரூம்ஸ் குயர் (LGBTQIA+) ஊடகக் கையேட்டை உருவாக்கியிருக்கிறோம். paalputhumai.com என்ற எங்களுடைய இருமொழி இணைய இதழில் நாங்கள் உருவாக்கிய தமிழ் பால்புது பதங்களின் பட்டியலை இன்னும் விரிவாக வெளியிடவும் இது ஒரு வாய்ப்பாக அமைந்தது.

த நியூஸ் மினிட், பிற பால்புது குழுக்கள், தனிநபர்களுடன் இணைந்து உருவாக்கப்பட்ட குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ் சொற்களஞ்சியம் 2022 இல் எஸ். சுஷ்மா Vs காவல்துறை ஆணையர் (சுஷ்மா - சீமா வழக்கு) வழக்கின்போது சென்னை உயர்நீதிமன்றத்தால் மையப்படுத்தப்பட்டது. நாங்கள் உருவாக்கிய சொற்களஞ்சியப் பட்டியலை பரிசீலித்து பால்புது பதங்களின் பட்டியலை உருவாக்குமாறு தமிழ்நாட்டு அரசிடம் உயர்நீதிமன்றம் கேட்டுக்கொண்டது. இதை செயல்படுத்திய மாநில அரசு, 2022 ஆம் ஆண்டில் மாநில கெசட்டில் ஒரு சொற்களஞ்சியப் பட்டியலை வெளியிட்டது. இந்தப் பட்டியலில் இருந்த

90% பதங்கள் குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ் - த நியூஸ் மினிட் சொற்களஞ்சிய பட்டியலில் இருந்து எடுக்கப்பட்டவை.

பால்புது ஊடகக் கையேட்டில் மேலும் கவனம் செலுத்த இந்த நிகழ்வு உத்வேகம் கொடுத்தது. த நியூஸ் மினிட் மற்றும் குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ் இணைந்து தன்னிச்சையாக முன்னெடுத்த ஒரு செயல்பாடு இது. பால்புது நபர்கள் இதை முன்னெடுத்துச் செல்கின்றனர். குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸின் கள செயல்பாட்டு அனுபவம் மற்றும் த நியூஸ் மினிட்டின் ஊடக அனுபவம் இரண்டையும் இணைத்து இந்தியாவின் ஒட்டுமொத்த ஊடகத்துறைக்கும் உதவும் ஒரு கையேட்டை உருவாக்கியிருக்கிறோம்.

இன்க்ளூசிவ் நியூஸ்ரூம்ஸ் பால்புது ஊடகக் கையேட்டை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். அனைவருக்குமான உலகை உருவாக்குதற்கான எங்களுடைய பயணத்தில் இது மற்றுமொரு மைல்கல். ஒவ்வொரு ஊடகமாக இந்த மாற்றம் சென்று சேரும் என்று நம்புகிறோம்.

குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியைச் சேர்ந்தவர்களால் சென்னையில் நிறுவப்பட்டது. நாங்கள் இந்த தளத்தை தொடங்கியபோது, தமிழ் மற்றும் ஆங்கில இலக்கியம் மற்றும் ஊடகத்தை மையப்படுத்தியே எங்களது செயல்பாடுகள் அமைந்தன. தமிழில் எங்களது செயல்பாடுகள் காலப்போக்கில் இந்தியாவில் மட்டுமல்லாமல் தேசம் கடந்தும் வாழ்கிற தமிழ் பேசும் குயர் மக்களை சென்றடைந்துள்ளன. இந்தக் கையேட்டின் மூலம் கன்னடம், தெலுங்கு, மராத்தி மற்றும் இந்தி ஆகிய மேலும் நான்கு இந்திய மொழிகளில் எங்களது செயல்பாட்டை விரிவாக்குகிறோம்.

விரைவிலேயே மேலும் பல மொழிகளில் இந்தப் பயணம் தொடரும்.

# அணிந்துரை

மரியாதைக்கும் கண்ணியத்துக்குமான முனைப்பு

சொற்கள் முக்கியமானவை. அதைவிட சொற்களை யார் பேசுகிறார்கள் என்பது முக்கியமானது.

"குச்சிகளும் கற்களும் என் எலும்புகளை உடைக்கலாம், ஆனால் சொற்கள் என்னை ஒருபோதும் காயப்படுத்தாது" *(Sticks and stones may break my bones, but words will never hurt me)* என்ற ஒரு ஆங்கில குழந்தைப் பாடலை நாம் படித்திருப்போம். இப்போது அதை நினைத்துப் பார்த்தால் அந்தப் பாடல் உண்மைக்குப் புறம்பானது என்பது தெரிய வரும். ஆதிக்கப் பாலினத்தைச் (cisgender) சார்ந்த உயர்தட்டு வெள்ளையின ஆண் ஒருவர் எழுதியப் பாடலாக இது இருக்கலாம். சொற்களைக் கேட்கும் ஒருவரது மனது எப்படி பாதிக்கப்படும் என்பதை இந்தப் பாடல் போதுமான அளவில் பேசவில்லை. எடுத்துக்காட்டுக்கு, பள்ளிகளில் நடக்கும் பல உடல்ரீதியான துன்புறுத்தல்கள் முதலில் சொற்களாக கிண்டல்களாக அவதூறுகளாகத்தான் தொடங்குகின்றன.

பெரும்பாலும் இந்தத் துன்புறுத்தல்கள் விளையாட்டு மைதானத்திலிருந்து நிஜ உலகம் வரை நீண்டுவிடுகின்றன. சமயங்களில் அந்த துன்புறுத்தலின் வடிவமும் கூட மாறி விடலாம். செய்தி ஆசிரியர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் நல்ல நோக்கம் உடையவர்களாக இருந்தால் கூட பால்புதுமையினரைக் காயப்படுத்தக்கூடிய, அவமானப்படுத்தக்கூடிய சொற்களை அவர்கள் பயன்படுத்தலாம். இது காயப்படுத்த வேண்டும் எனும் நோக்கத்திலிருந்து வருவதாக இல்லாமல் கூட இருக்கலாம். பாலீர்ப்பு மற்றும் பாலின சிறுபான்மையினர் ஒருவரது அனுபவம் எப்படி இருக்கும் என்பது பற்றிய விழிப்புணர்வு இல்லாததால் இப்படி நடக்கலாம். வேறுபாடுகளைப் பற்றி அறியாத ஒருவருக்கு இந்த மொழி சாதாரணமானதாகத் தெரியலாம். ஆனால் இந்த மொழி மைய விவாதத்துக்குள் நுழைந்து ஏற்கனவே பலவீனமாக இருப்பவர்கள், குறிப்பாகக் குழந்தைகளுக்கு அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே ஒரு வழிகாட்டிக்கான தேவை அதிகமாக இருக்கிறது. பொதுமக்களில் யாருடைய வாழ்வையும் சிறுமைப்படுத்த விரும்பாத, பாதுகாப்பான மொழியைப் பயன்படுத்த விரும்புகிற ஊடகவியலாளருக்கு இந்த வழிகாட்டி உதவக்கூடும்.

கருத்துக் கட்டுரைகளைப் பொறுத்தவரை யார் எழுதுகிறார், அவர்களது அறிவு மற்றும் உணர்வுகளின் தன்மை ஆகியவற்றைப் பற்றி விழிப்புடன் இருப்பது அவசியம். அபாயகரமான கருத்துக்களை தொலைக்காட்சிகள் நம்மீது வேகமாகப் பொழிந்து கொண்டிருக்கும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தொலைக்காட்சி ரேட்டிங்குகளுக்கு இருவேறு துருவத்தில் இருக்கும் கருத்துகள் தேவைப்படுகின்றன. இந்தப் போட்டியில் சம்பந்தப்பட்ட துறையைச் சேர்ந்த நிதானமான ஒரு வல்லுநரின் நிபுணத்துவம் அமைதியாக்கப்பட்டு விடுகிறது. தீவிரமான சிந்தனையையும் பிரதிபலிப்பையும் தரவேண்டிய கருத்துக் கட்டுரைகள் உரத்த குரலில் கத்துகிற தொலைக்காட்சி விவாதங்களைப் போல கருத்துக் கட்டுரைகள் மாறிவிடக்கூடாது. அதை உறுதிப்படுத்திக்கொள்ள இந்தக் கையேடு உதவும். ஒரு தரப்பு கருத்தை மட்டும் முன்வைக்காமல் எந்தக் கருத்தையும் நியாயமான முறையில் முன்வைப்பதே நமது நோக்கம்.

இந்தக் கையேடு மொழியைப் பற்றியது மட்டுமல்ல, இது ஒரு மனநிலையைப் பொறுத்தது. அரசியலமைப்பு கோருகிற, சமூகத்துக்குத் தகுதியான மரியாதையையும் கண்ணியத்தையும் தரவேண்டும் என்ற முனைப்பு பற்றியது. இந்த கையேட்டினை பயன்படுத்துவது பொறுப்பான ஊடக செயல்பாட்டின் பிரதிபலிப்பாக மட்டுமல்லாமல், பேசுபவரோ எழுதுபவரோ செய்தி ஆசிரியரோ நம் எல்லாரையும் பிணைக்கும் ஒரு தங்கக் கயிறான சமத்துவத்தை நம்புகிறவராக இருப்பதையும் பிரதிபலிக்கும் என்று நம்புகிறேன்.

**சௌரப் கிர்பால்**

*வழக்கறிஞர், இந்திய உச்சநீதிமன்றம்*

# முற்போக்கான சமூகத்தை உருவாக்குவதில் ஊடகவியலாளர்களின் பங்கு

**சிந்து ராஜசேகரன்**
*எழுத்தாளர், திரைப்பட தயாரிப்பாளர்*

*ஊடகங்களுக்கான கையேட்டினைக் கொண்டுவரும் இந்த அற்புதமான புதிய முயற்சிக்காக குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ் மற்றும் த நியூஸ் மினிட் நிறுவனங்களுக்கு என் மனமார்ந்தப் பாராட்டுதல்களைத் தெரிவிப்பதுடன், ஆதரவு தெரிவிக்க முன்வந்த கூகுள் நியூஸ் இனிஷியேட்டிவ் அமைப்பிற்கு என் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். பால்புது மக்களின் கண்ணியம் காக்கப்பட வேண்டும் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். அந்த கண்ணியத்தைப் பேணுவதில், ஒருவர் நம்மைப் பற்றி பேசும்போது எத்தகைய மொழியை பயன்படுத்துகிறார் என்பது இன்றியமையாதப் பங்கை வகிக்கிறது.*

*சமூகத்துக்கும் கலாச்சாரத்திற்கும் பத்திரிக்கையாளர்களே பாதுகாவலர்களாக இருக்கின்றனர். எனவே பால்புது சமூக மக்களின் பிரச்சினைகளைப் பற்றி பேசும்போது சரியான மொழியை பயன்படுத்துவதும் சரியான கலைச் சொற்களை உபயோகப்படுத்துவதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகி விடுகிறது. சரியான மொழியை அவர்கள் உபயோகிக்கும் போதுதான் அனைவரையும் உள்ளடக்கிய முற்போக்கான ஒரு சமுதாயத்தினை உருவாக்க முடியும். அந்த லட்சியத்தை அடைய புதியதாக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ‘ஊடக வழிகாட்டி’ உதவும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.*

*இந்திய தண்டனைச் சட்டத்தின் 377 ஆவது பிரிவை அரசியலமைப்பிற்கு எதிரானது என்று உச்ச நீதிமன்றம் அறிவித்ததற்குப் பின்னர்தான் பால்புது மக்களின் உரிமைகளைப் பற்றிய உரையாடல்களில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.*

*பால்புது மக்களின் உரிமையும் மனித உரிமையே. பால்புது மக்களும் பிறரைப்போலவே தங்கள் வாழ்க்கையை கண்ணியத்தோடும் சுயமரியாதையோடும் வாழ்வதற்கு எல்லா உரிமையும் உடையவர்கள்.*

எல்லோருக்குமான வளர்ச்சியை மதிக்கும் ஒரு சமூகம், தன்னகத்தே இருக்கும் பால்புது மக்களின் தேடல்களுக்கும் பாலின வெளிப்பாடுகளுக்கும் பாலியல்புகளுக்கும் ஏதுவாக ஒரு பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்க முன்வர வேண்டும். அத்தகைய சூழலே அனைத்தும் செழிக்க அடிகோலும்.

திருமண சமத்துவ உரிமைகளைக் குறித்த சமீபகால விவாதங்கள், பால்புது மக்களின் வாழ்க்கையைப் பற்றி இந்தச் சமூகம் எவ்வளவு தவறாக புரிந்துகொண்டிருக்கிறது என்பதையும் அவர்களை எவ்வளவு பாரபட்சமாக பார்க்கிறது என்பதையும் வெளிப்படையாக தெரிவிக்கின்றன. பால்புது மக்களைப் பற்றி பேசும்போது உபயோகிக்கிற மொழியில் பேசுபவர்களின் அறியாமையும், சிலசமயம் அடிமனதிலுள்ள வெறுப்பும் வெளிப்படுகிறது. இவற்றை எல்லாம் உடனடியாக சரிசெய்யவேண்டியது தலையாய ஒன்றாகும்.

சமூக விதிமுறைகளை உருவாக்குவதில் ஊடகங்கள் மிகப்பெரிய பங்கை வகிக்கின்றன. பால்புது மக்கள் சம்பந்தப்பட்ட கலைச்சொற்களுக்கு பால்புதுமையினருக்கான இந்த ஊடகக் கையேட்டினை ஆதாரமாகக் கொள்ளும்படி ஒவ்வொரு ஊடகவியலாளரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். பால்புது மக்களைப் பற்றி குறிப்பிடும்போது சரியான சொற்களை சரியான விதத்தில் உபயோகப்படுத்தி பால்புது மக்களின் கண்ணியத்தைப் பாதுகாக்கும்படி வேண்டுகிறேன்.



# பால்புது (LGBTQIA+) சொற்களஞ்சியம்

## பகுதி 1:

## பால்சார் பதங்கள்

**பால், பால் பகுப்பு, பால் பிரிவு (Sex)**

பால் என்பது ஒரு நபரின் வெளிப்புற மற்றும் உட்புற உடல் உறுப்புகள், ஹார்மோன்கள், பால் குரோமோசோம்கள் போன்றவற்றின் அடிப்படையிலான உயிரியல் பண்பமைப்பைக் குறிக்கும்.

**பால் பண்பு (Sex characteristics)**

ஒரு நபரின் பால் அடிப்படையிலான உடல், பால் அம்சங்கள் மற்றும் இனப்பெருக்க அம்சங்கள் பால் பண்புகள் எனப்படும். பால் உறுப்புகள், பால் குரோமோசோம்கள், உடலில் ஆதிக்கம் செலுத்தும் பால் ஹார்மோன்கள், இரண்டாம் நிலைப் பால் பண்புகள் போன்றவை இதில் அடங்கும். பிறப்பின்போது வழங்கப்படும் பால் பண்புகள் அந்நபரின் பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு, பாலீர்ப்பு ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். ஆனால் இவை மட்டுமே முழுக் காரணமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

**பால் உறுப்புகள்:** பெண்ணுறுப்பு, கருப்பை, ஆணுறுப்பு, விந்தகம் போன்றவை.

**பால் குரோமோசோம்கள்:** XX, XY, XXY, XYY, XO போன்றவை.

**உடலில் ஆதிக்கம் செலுத்தும் பால் ஹார்மோன்கள்:** ஈஸ்ட்ரஜன், ப்ரோஜெஸ்ட்ரோன், டெஸ்டாஸ்டிரோன் போன்றவை.

**இரண்டாம் நிலைப் பால் பண்புகள்:** முகத்தில் வளரும் முடி, குரல், மார்பகங்கள் போன்றவை.

**ஊடுபால் (Intersex)**

ஊடுபால் (இன்டர்செக்ஸ்) என்பது ஆண்-பெண் ஈர்மறைக்கு அப்பாற்பட்ட உடல்களைக் கொண்ட நபர்களைக் குறிப்பதற்கான பொதுப்பெயர். ஊடுபால் நபர்களின் பிறவிப் பால் பண்புகளானது மருத்துவ மற்றும் சமூக ரீதியிலான ஆண் மற்றும் பெண் எனும் வரையறைக்குள் ஒத்துப்போகாது. இதனால் ஊடுபால் நபர்கள் இழிவிற்கும் ஒதுக்குதலுக்கும் ஆளாக்கப்படுகின்றனர்.

**குறிப்பு:** அனைத்து ஊடுபால் நபர்களும் திருநர்கள் என்று அனுமானிப்பது தவறு. எல்லாரையும் போலவே பல்வேறு பாலீர்ப்புகளும், பாலின அடையாளங்களும் அவற்றை தீர்மானிக்கும் உரிமையும் ஊடுபால் நபர்களுக்கும் உண்டு.

மருத்துவ மற்றும் சமூக ரீதியிலான ஆண் அல்லது பெண் எனும் வரையறைக்குள் உடலை மாற்றுவதற்காக மருத்துவர்கள் மற்றும் பெற்றோர்/காப்பாளர்கள் மூலம் ஊடுபால் குழந்தைகளுக்கு கட்டாய அறுவைசிகிச்சை நடத்தப்படுகிறது. இது தார்மீக முறைப்படி தவறானது. இந்த அறுவைசிகிச்சைகள் மன மற்றும் உடல்ரீதியில் கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். இதைக் கண்டிக்கவும் இதற்கு எதிராக குரல் எழுப்பவும் வேண்டும்.

## பகுதி 2:

## பாலினம்சார் பதங்கள்

### பாலினம் (Gender)

பிறப்பின்போது வழங்கப்படுகிற பாலினத்தைச் சார்ந்த வழமைகள், நடத்தைகள், பால் பங்களிப்பு ஆகியவற்றை வைத்து ஒரு நபரை சமூகம் பார்க்கும் விதமே “பாலினம்” எனப்படும்.

எடுத்துக்காட்டாக, பிறப்பில் “ஆண்” என்று வகைப்படுத்தப்படும் ஒருவர், ஆணாக வளர்ந்து, வலிமையானவராகவும் உறுதியுடனும் இருக்கவேண்டும் என்றும் பிறப்பில் “பெண்” என்று வகைப்படுத்தப்படும் ஒருவர், இனிமையாகவும் பிறரைப் பேணுபவராகவும் இருக்கவேண்டும் என்றும் எதிர்பார்ப்புகள் உள்ளன. இது ஒரு சமூகக் கட்டமைப்பு. இந்த எதிர்பார்ப்புகள் சமூகத்தைப் பொறுத்தும் காலத்தைப் பொறுத்தும் மாறுபடும்.

### பாலின அடையாளம் (Gender identity)

ஒரு நபர் தன் பாலினத்தை எப்படி வரையறுக்கிறார் என்பதே பாலின அடையாளம் எனப்படும். அந்த நபரின் ஆழமான பாலினம் சார்ந்த அனுபவங்களின் அடிப்படையில் அவரது பாலின அடையாளம் இருக்கும்.

பாலின அடையாளம் என்பது பிறப்பின்போது வழங்கப்படும் பாலினம் சார்ந்த வழமைகள் மற்றும் சமூகம் வைத்திருக்கும் எதிர்பார்ப்பைச் சார்ந்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

பாலின அடையாளம் என்பது அந்தந்த நபரின் தீர்மானம். அவர் மட்டுமே அதை முடிவு செய்ய முடியும். பாலின அடையளத்துக்கான மருத்துவப் பரிசோதனைகள்

இல்லை. திருநர்களோ பால் ஈர்மறைக்கு அப்பாற்பட்டவர்களோ, அவர்கள் எந்தப் பாலின அடையாளத்துடன் தன்னைப் பொருத்திக்கொள்கிறார்கள் என்பதை அவர்கள்தான் கூறவேண்டும்.

**பாலின வெளிப்பாடு (Gender expression)**

தன்னுடைய பாலினத்தை ஒரு நபர் எப்படிப் பொதுவில் வெளிப்படுத்திக் கொள்கிறார் என்பது பாலின வெளிப்பாடாகும். இது நடத்தை மற்றும் வெளித்தோற்றங்களான உடை, தலைமுடி, அலங்காரம், உடல்மொழி, குரல் போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியது.

ஒருவர் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் பெயர் அல்லது பெயர் விகுதிகளும் பாலின வெளிப்பாட்டின் வகைமைகளே. பாலின வெளிப்பாடு என்பது பாலின அடையாளத்தை அப்படியே சுட்டுவதாக இருக்கவேண்டும் என்பதில்லை.

> **எடுத்துக்காட்டு:** ஆண்களின் பாலின வெளிப்பாடாகக் கருதப்படும் பேண்ட், சட்டைகளை ஒரு பெண் அணியலாம். அவர் குட்டையாக முடி வெட்டியிருக்கலாம்.
>
> **மற்றொரு எடுத்துக்காட்டு:** பிறப்பில் ஆணாக வகைப்படுத்தப்பட்ட ஒருவர் புடவை அணிவதாலேயே அவர் திருநங்கை ஆகிவிடமாட்டார். அவர் தன்னை ஒரு ஆணாகவோ, பாலின ஈர்மறைக்கு அப்பாற்பட்டவராகவோ, வேறு பாலினத்துடனோ அடையாளப்படுத்திக்கொள்ளலாம்.

**பாலின அடையாளங்களுடன் ஒத்துப்போகாதவர் (Gender non–conforming person)**

ஆண் அல்லது பெண் என்ற இரு பாலின வரையறைக்குள் தன்னைப் பொருத்திக் கொள்ளாதவர்கள் (வயது வந்தவர்கள் மற்றும் குழந்தைகள்) மற்றும், பொதுவான பாலின வரையறைகளுக்கு அப்பாற்பட்ட பாலின வெளிப்பாடு உடைய நபர்களே பாலின அடையாளங்களுடன் ஒத்துப்போகாதவர்கள்.

சில சமயங்களில், ஒருவரது பாலின வெளிப்பாடு காரணமாக அவரை பாலின அடையாளங்களுடன் ஒத்துப்போகாதவர்கள் என்று மற்றவர்கள் வரையறுக்கலாம். ஆனால் அந்த நபர் தங்களை அவ்வாறு அடையாளப்படுத்திக் கொள்ளாதவர்களாகக் கூட இருக்கலாம்.

பாலின வெளிப்பாடு மற்றும் பாலின அடையாளங்களோடு ஒத்துப்போகாமல் இருப்பது போன்ற அம்சங்கள் தனிநபரோ சமூகமோ ஆண்தன்மை, பெண்தன்மை ஆகியவற்றை எப்படி அணுகுகிறது என்பதைப் பொறுத்து மாறுபடும்.

**திருநர் (Transgender person)**

பிறப்பில் தரப்பட்ட பால் வகைமையுடன் தங்கள் பாலின அடையாளம் ஒத்துப் போகாதவர்கள் திருநர் என்று அழைக்கப்படுகிறார்கள். பிறப்பால் ஆண் அல்லது பெண்ணாக வகைப்படுத்தப்பட்டவர்களும், ஊடுபால் நபர்களும் திருநர்களாக இருக்கலாம்.

தன்னைத் திருநராக அடையாளப்படுத்திக்கொள்ளும் நபர் ஹார்மோன் சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சை போன்ற பாலின உறுதிப்பாட்டு செயல்முறைகளை கட்டாயம் செய்திருக்க

வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்பது நால்சாவுக்கும் ஒன்றிய அரசுக்குமிடையே நடந்த வழக்கில் 2014 இல் வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலும் 2019 இல் வெளியான திருநர் உரிமை பாதுகாப்புச் சட்டத்திலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திருநர்களை அடையாளப்படுத்த மூன்றாம் பாலினத்தைச் சார்ந்தவர் எனும் பதத்தை பயன்படுத்தத் தேவையில்லை. பாலின அடையாளங்களை படிநிலைகளில் அடுக்கி வைக்க இயலாது.

**திருநங்கை (Trans woman or transgender woman)**

பிறப்பில் மற்றவர்களால் ஆணாக வகைப்படுத்தப்பட்டு தன்னைப் பெண்ணாக அடையாளப்படுத்தும் ஒரு நபர் திருநங்கை என்று அழைக்கப்படுகிறார்.

**திருநம்பி (Trans man or transgender man)**

பிறப்பில் மற்றவர்களால் பெண்ணாக வகைப்படுத்தப்பட்டு தன்னை ஆணாக அடையாளப்படுத்தும் ஒரு நபர் திருநம்பி என்று அழைக்கப்படுகிறார்.

**பாலின ஈர்மறைக்கு அப்பாற்பட்டவர் (Gender non–binary person)**

ஆண், பெண் என்ற ஈர்மறைக்கு அப்பாற்பட்டவர்கள் இவ்வாறு அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் ஆணாகவோ பெண்ணாகவோ தங்களை வகைப்படுத்திக் கொள்வதில்லை.

**பாலின முரண்பாட்டு மன உளைச்சல் (Gender dysphoria)**

பிறப்பின்போது தரப்படும் பால் வகைமைக்கும் தான் உணரும் பாலின அடையாளத்துக்கும் இடையே முரண்பாடோ வேற்றுமையோ ஏற்படும்போது வரும் மன உளைச்சலே Gender Dysphoria என்று அழைக்கப்படுகிறது. இந்த உளைச்சல் சிறுவயதிலேயோ அல்லது பருவமடைந்த பிறகோ ஏற்படலாம்.

அனைத்துத் திருநர்களுமே பாலின முரண்பாட்டு மன உளைச்சலை எதிர்கொண்டிருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை.

**பாலின முரண்பாடு (Gender incongruence)**

பிறப்பின் போது வழங்கப்படும் பால் வகைமையைப் பொறுத்து ஒரு சமூகம் ஒரு நபரிடம் எதிர்பார்க்கும் பாலினத்துக்கும், அந்த நபர் உணரும் பாலினத்துக்கும் இடையிலான அழுத்தமான தொடர் முரண்பாடு.

**பாலின உறுதிபாட்டு நடைமுறைகள் (Gender affirmation procedures)**

பாலின அடையாளத்தை உறுதிப்படுத்தும் நடைமுறைகள் மருத்துவம் சார்ந்ததாகவோ, சட்டரீதியாகவோ சமூகப்பார்வை சார்ந்ததாகவோ இருக்கலாம்.

***மருத்துவம்:*** அறுவைசிகிச்சை, ஹார்மோன், லேசர் போன்றவை.

***சட்டரீதியானவை:*** ஆவணங்களில் பெயர் அல்லது பாலினத்தை மாற்றுவது.

*சமூகரீதியானவை:* தாங்கள் அடையாளப்படுத்தும் பாலினத்துக்கு நெருக்கமான உடைகள், வாழ்க்கைமுறைகள்.

**பாலின உறுதிபாட்டு அறுவை சிகிச்சை (Gender affirmation surgery)**

ஒரு நபரின் பாலின அடையாளத்தை உறுதிப்படுத்தவும், "உள்ளுக்குள் அவர்கள் எப்படி உணர்கிறார்களோ" அதன்படியே வெளிப்புற பால் அம்சங்களையும் மாற்றியமைக்கவும் செய்யப்படும் அறுவை சிகிச்சையே பாலின உறுதி அறுவைசிகிச்சை எனப்படும். பால்மாற்று சிகிச்சை என்று முன்பு பயன்படுத்தப்பட்ட பதத்திற்கு பதிலாக 'பாலின உறுதி அறுவைசிகிச்சை' எனும் பதம் பயன்படுத்தப்படவேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

**வழங்கப்பட்ட பெயர் (Deadname)**

பிறப்பின்போது தரப்பட்ட பால் வகைமையின் அடிப்படையில் திருநருக்கு வழங்கப்பட்ட பெயர் (குடும்பத்தினரால் வழங்கப்பட்ட பெயர்) மற்றும் மற்றவர்களால் அடையாளப்படுத்தப் பட்டுக்கொண்டிருந்த பெயரே வழங்கப்பட்ட பெயர். அந்தப் பெயரால் திருநர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதில்லை. மற்றவர்கள் அடையாளப்படுத்துவதையும் விரும்புவதில்லை.

> *குறிப்பு:* செய்திகளைத் தரும்போது, "உங்கள் உண்மையான பெயர் என்ன?/பழைய பெயர் என்ன?" போன்ற கேள்விகளைத் தவிர்க்கவேண்டும். அது அவசியமில்லாத தகவல். செய்திக் குறிப்பில் திருநரின் வழங்கப்பட்ட பெயரைக் குறிப்பிடுவது அவரை இழிவுபடுத்துவதாகும். அவர் தன்னை எந்த பெயரில் வெளிப்படுத்த விரும்புகிறாரோ அந்த பெயரில் அடையாளப்படுத்துவது மட்டுமே போதுமானது.

**திரவ நிலைப் பாலின அடையாளம் (Gender fluidity, Gender-fluid person)**

தனக்கு நிலையான ஒரு பாலினம் இல்லை என்று உணர்பவர்களே திரவநிலைப்பாலின அடையாளம் கொண்டவர்கள். எல்லா பாலினங்களோடோ, சில பாலினங்களோடோ, இரு பாலினங்களோடோ அல்லது இரு பாலினங்களில் ஏதேனும் ஒன்றோடோ இவர்கள் தங்களைப் பொருத்திக்கொள்ளலாம்.

**சிஸ் பாலினம், ஆதிக்கப் பாலினம், மிகைப் பாலினம் (Cisgender)**

பிறப்பின்போது தரப்பட்ட பால் வகைமையுடன் மற்றும் பாலினத்துடன் இவர்களின் பாலின அடையாளம் பொருந்தும். திருநராக இல்லாதவர்கள் மற்றும் ஈர்மறைகளோடு ஒத்துப் போகிறவர்கள் ஆதிக்கப் பாலினத்தைச் சேர்ந்தவர்கள்.

## பகுதி 3:

## பாலியல்புசார் பதங்கள்

**பாலியல்பு (Sexuality)**

பிறருடனான உடல்ரீதியான அணுக்கம், பாலுறவு தொடர்பான விஷயங்களில் ஒருவரின் பழக்கவழக்கங்கள், விருப்பங்கள், அடையாளங்கள், அணுகுமுறை ஆகியவையே பாலியல்பு எனப்படும்.

**பாலீர்ப்பு, பாலின ஈர்ப்பு (Sexual orientation)**
*ஒரு நபர், எந்த நபர்கள் அல்லது பாலினங்களுடன் உடல் ரீதியாக, உணர்வு ரீதியாக மற்றும்/அல்லது காதலுடன் ஈர்க்கப்படுகிறார் என்பதே பாலீர்ப்பு/பாலின ஈர்ப்பு எனப்படும். எடுத்துக்காட்டாக, எதிர்பாலீர்ப்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் ஈர்ப்பு. ஒருபாலீர்ப்பு என்பது இரு ஆண்கள் அல்லது இரு பெண்களுக்கிடையே ஏற்படும் ஈர்ப்பு.*

> **குறிப்பு:** பாலீர்ப்பு என்பது பால் அடையாளத்திலிருந்து வேறுபட்டது. எடுத்துக்காட்டாக, ஒரு ஆதிக்கப் பாலினத்தைச் சார்ந்தவர், எதிர்பாலீர்ப்பு கொண்டவராகவோ ஒருபாலீர்ப்பு கொண்டவராகவோ இருபாலீர்ப்பு கொண்டவராகவோ இருக்கலாம். அதைப் போலவே ஒரு திருநருக்கும் எதிர்பாலீர்ப்பு, ஒருபாலீர்ப்பு அல்லது வேறு எந்தப் பாலீர்ப்பு வேண்டுமானாலும் இருக்கலாம்.

**எதிர்பாலீர்ப்பு, எதிர் பாலின ஈர்ப்பு (Heterosexuality, Heterosexual)**
*ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே வரும் பாலீர்ப்பு எதிர்பாலீர்ப்பு என்று பொதுவாக அழைக்கப்படுகிறது. பெண்கள் மீது பாலீர்ப்பு கொள்ளும் ஆண் எதிர்பாலீர்ப்பு கொண்ட ஆண் என்றும், ஆண்கள் மீது பாலீர்ப்பு கொள்ளும் பெண் எதிர்பாலீர்ப்பு கொண்ட பெண் என்றும் வகைப்படுத்தப்படுகிறார்கள். பாலீர்ப்புக்கு அப்பாற்பட்ட, உணர்வுரீதியான/காதல்சார் ஈர்ப்பும் உண்டு. இது ஆதிக்கப் பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கும் திருநர்களுக்கும் பொருந்தும்.*

**ஒருபாலீர்ப்பு, தன்பாலீர்ப்பு, ஒருபாலின ஈர்ப்பு, தன்பாலின ஈர்ப்பு (Homosexuality, Homosexual தன்பாலீர்ப்புடைய ஆண் (Gay), தன்பாலீர்ப்புடைய பெண் (Lesbian)**
*தங்களுடைய பாலினத்தைச் சார்ந்தவர்கள் மீது பாலீர்ப்பு கொள்ளும் தன்மை ஒருபாலீர்ப்பு என்று அழைக்கப்படுகிறது. பெண்கள் மீது பாலீர்ப்பு கொள்ளும் பெண் ஒருபாலீர்ப்பு கொண்ட பெண் என்றும், ஆண்கள் மீது பாலீர்ப்பு கொள்ளும் ஆண் ஒருபாலீர்ப்பு கொண்ட ஆண் என்றும் வகைப்படுத்தப்படுகிறார்கள். பாலீர்ப்புக்கு அப்பாற்பட்ட, உணர்வுரீதியான/காதல்சார் ஈர்ப்பும் உண்டு. அதுவும் ஒரு பாலினத்தைச் சேர்ந்தவர்களிடம் ஏற்படலாம். இது ஆதிக்க பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கும் திருநர்களுக்கும் பொருந்தும்.*

**ஹோமோரொமாண்டிக் (Homoromantic)**
*தங்களின் பாலினத்தைச் சார்ந்தவர்களிடம் காதல்சார்/உணர்வுசார் ஈர்ப்பு கொண்டவர்கள் ஹோமோரொமாண்டிக் நபர்கள் என அழைக்கப்படுவர். இது ஆதிக்கப் பாலினத்தைச் சார்ந்தவர்களுக்கோ திருநர்களுக்கோ பொருந்தும்.*

**இருபாலீர்ப்பு, இருபாலின ஈர்ப்பு (Bisexuality, Bisexual)**
*தன்னுடைய பாலினத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் பிற பாலினத்தைச் சேர்ந்தவர்களிடம் பாலீர்ப்பு கொள்ளும் தன்மை இருபாலீர்ப்பு என்று அழைக்கப்படுகிறது. கடந்த காலத்தில், ஆண் பெண் ஆகிய இருபாலினங்களின் மீதும் ஈர்ப்பு கொள்வது இருபாலீர்ப்பு என்று அழைக்கப்பட்டது. ஆனால் ஆண்-பெண் என்ற ஈர்மறைக்கு அப்பாற்பட்டு பாலினம் மற்றும் பாலின அடையாளம் சார்ந்த புரிதல் வளரும்போது, இருபாலீர்ப்பு பற்றிய வரையறையும்*

பரிணாம வளர்ச்சியடைகிறது. இருபாலீர்ப்பு என்பதற்கு இரு பாலினத்தவர்கள் மீதும் சமமான ஈர்ப்பு என்று பொருளல்ல.

**அனைத்துப்பாலீர்ப்பு, அனைத்துப்பாலின ஈர்ப்பு (Pansexuality, Pansexual)**

*அனைத்து பாலினங்கள் அல்லது பல பாலினங்களைச் சேர்ந்த நபர்கள் மீது வரும் பாலீர்ப்பு அல்லது பாலினத்துக்கு அப்பாற்பட்ட ஈர்ப்பு அனைத்துப்பாலீர்ப்பு அல்லது பல பாலீர்ப்பு என்று அழைக்கப்படுகிறது. அனைத்துப்பாலீர்ப்பு கொண்ட நபர் அனைத்து பாலினங்கள் அல்லது பல பாலினங்களைக் கொண்ட நபர்கள்மீது பாலீர்ப்பு கொண்டவர்.*

*அனைத்துப் பாலீர்ப்பு என்பது எல்லா பாலினங்களின் மீதும் சமமான ஈர்ப்பு என்பதைக் குறிப்பதல்ல.*

**அபாலீர்ப்பு, (Asexual, Aromantic (Aro–Ace))**

*எவரின் மீதும் பாலீர்ப்பு இல்லாதவர்களைக் குறிக்க ஏசெக்ஷுவல் எனும் சொல் பயன்படுத்தப்படுகிறது. எவரின் மீதும் உணர்வுரீதியான/காதல்சார் உணர்வுகளைக் கொள்ளாதவர்கள் Aromantic என்று அழைக்கப்படுகிறார்கள்.*

> **குறிப்பு:** *அபாலீர்ப்பு கொண்டவர்கள் Aromantic நபர்களாகவோ, அல்லது காதல்சார் உணர்வுகள் கொண்டவர்களாகவோ இருக்க வாய்ப்பு உண்டு. Aromantic நபர்கள் பாலீர்ப்பு கொண்டவர்களாகவும் இருக்கலாம்.*

**ரொமாண்டிக் ஓரியண்டேஷன் (Romantic orientation)**

*ரொமாண்டிக் ஓரியண்டேஷன் என்பது ஒரு நபரின் காதல் அல்லது உணர்ச்சி சார்ந்த ஈர்ப்பு. இது ஒருவரின் பாலியல் ஈர்ப்பு சார்ந்தது அல்ல. ஒருவர் 'homoromantic', 'heteroromantic', 'panromantic', 'aromantic' போன்றவர்களாக இருக்கலாம். ரொமாண்டிக் ஓரியண்டேஷன் ஒரு நபரின் பாலீர்ப்பை ஒத்திருக்க வேண்டியதில்லை.*

*எடுத்துக்காட்டாக, அனைத்துப் பாலீர்ப்பாளராக இருக்கும் ஒரு நபர் - அதாவது, அனைத்து பாலினத்தவர்களிடமும் பாலியல் ரீதியாக ஈர்க்கப்படுகிறவர் - homoromantic ஆக இருக்கலாம், அதாவது அவர்கள் தங்கள் சொந்தப் பாலினத்தவர்களுடன் மட்டுமே காதல்/ உணர்ச்சி ரீதியான உறவுகளை வைத்திருக்க விரும்பலாம்.*

## பகுதி 4:

## ஒருமித்த பதங்கள்

**பால்புது, பால்புதுமை, குயர் (Queer) பால்புதுமையினர, பால்புது நபர் (Queer person)**

*'எதிர்பாலீர்ப்பு கொள்ளாதோரையும் மற்றும் அல்லது பிறப்பில் குறிக்கப்படும் பாலினத்தோடு அடையாளப்படுத்திக் கொள்ளாதவர்களையும் குறிப்பிட பால்புதுமையினர் அல்லது குயர் எனும் வார்த்தையை பயன்படுத்துகிறோம். ஆங்கிலத்தில் குயர் எனும் சொல் ஒரு "மீட்டெடுக்கப்பட்ட" சொல். கடந்த காலங்களில், சமூகத்தின் பாலின மற்றும் பாலீர்ப்பு எதிர்பார்ப்புக்கு ஒத்துவராதவர்களுக்கான வசைச்சொல்லாக இது இருந்தது.*

ஆனால் இப்போது LGBTIQA+ மக்கள் இதைத் தங்களுக்கானதாக மாற்றி, தங்களை வரையறுத்துக்கொள்வதற்குப் பயன்படுத்துகிறார்கள்.

ஆதிக்கப்பாலினம் மற்றும் எதிர்பாலீர்ப்பு சார்ந்த அடையாளங்கள் மற்றும் சிந்தனைகள் பழமைவாதத்தை மையப்படுத்தி இருக்கும் நிலையில் அதிலிருந்து நகர்ந்து அனைத்துப் பாலின, பாலீர்ப்பு, பால்பண்பு அடையாளங்களையும் சிந்தனைகளையும் உள்ளடக்கி காலத்திற்கேற்ற புரிதலோடு தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளும் என்கிற அர்த்தத்தில் ‘பால்புதுமை’ எனும் வார்த்தை தமிழில் பயன்படுத்தப்படுகிறது

**LGBTIQA+ / LGBTQIA+**

ஒருபாலீர்ப்பு கொண்டவர்கள், இருபாலீர்ப்பு கொண்டவர்கள், திருநர், பால்புதுமையினர், ஊடுபால் மக்கள், அபாலீர்ப்பு கொண்டவர்கள், அனைத்துபாலீர்ப்பு கொண்டவர்கள், ஆதிக்கப் பாலினம் மற்றும் எதிர்பாலீர்ப்புக்கு அப்பாற்பட்ட பண்புகளைக் கொண்டவர்கள் ஆகியோர். இந்த பதம் சில நேரங்களில் LGBT, அல்லது LGBTQ அல்லது LGBTQ+ அல்லது Queer என்றும் குறிப்பிடப்படும்.

## பகுதி 5:

## சமூகம்சார் பிற பதங்கள்

### வெளிப்படுத்திக் கொள்ளுதல் (Coming out)

தங்களது பால்புது அடையாளத்தை மற்றவர்களிடம் தெரிவிப்பதே வெளிப்படுத்திக் கொள்ளுதல் எனப்படும். பொதுவாக, பால்புதுமையினர், தங்கள் வாழ்நாள் முழுவதும் பலரிடம் பல்வேறு சூழல்களில் வெளிப்படுத்திக் கொள்வார்கள். இது ஒரு தனித்த, ஒற்றை நிகழ்வு அல்ல.

> **குறிப்பு:** LGBTQIA+ நபர்கள் தங்களை வெளிப்படுத்திக்கொள்வது அவசியம் என்றும், ஏனென்றால் பொதுவாக சமூகத்தின் வழமை என்பது ஆதிக்கப் பாலினம் அல்லது எதிர்பாலீர்ப்பாகத்தான் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதன்மீது விமர்சனங்கள் உண்டு. ஆகவே, பால்புதுமையினர் தன்னை வெளிப்படுத்திக்கொள்வதைப் பற்றி செய்திகளில் தெரிவிக்கும்போது, பால்புதுமையினர் அனைவரும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்ற புரிதலோடு அதை அணுகவேண்டும். வெளிப்படுத்திக் கொள்ளுதல் தனிநபரின் முடிவு. ஒரு நபரின் அடையாளத்தை மற்றொருவர் எப்போதும் வெளிப்படுத்த முடியாது.

### ஆதரவாளர்/தோழமை (Ally)

LGBTIQA+ மக்கள் மற்றும் சமூகத்தினரின் உரிமைகளுக்கு ஆதரவு தரும் நபர் அல்லது அமைப்பே ஆதரவாளர்/தோழமை எனப்படுவர். சமூகத்தில் தங்களது இடத்தைப் பயன்படுத்தி, பால்புது மக்கள் மற்றும் சமூகத்தினருக்கான உரிமைகளைப் பிரச்சனைகளைப் பேசுபவர்களாக இவர்கள் இருப்பர்.

> **குறிப்பு:** ஒருவரது செயல்பாடுகளைக் கொண்டு அவர்கள் ஆதரவாளர்களா இல்லையா என்பதை பால்புது சமுதாய மக்களே முடிவுசெய்ய முடியும். தன்னை ஆதரவாளராக

அறிவித்த நபர், தாங்கள் ஆதரவளிக்கும் சமூகத்தினரைக் காயப்படுத்தும் செயல்பாடுகள் அல்லது பேச்சுகளில் ஈடுபடும்போது அந்தத் தோழமை அர்த்தமற்றுப் போய்விடுகிறது. ஆதிக்கப் பாலினம் மற்றும் எதிர்பாலீர்ப்பு கொண்டவர்கள் ஆதரவாளர்கள் என்று அறிவித்துக்கொள்வதை கவனமாகக் கையாளவேண்டும். ஆதரவாளர்களைப் பற்றிய செய்திகளை வெளியிடும்போது, பால்புது சமூகத்தினரிடம் அவரது ஆதரவுத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

### பால்புது–சுயமரியாதை பேரணி/ வானவில்–சுயமரியாதை பேரணி (Queer Pride parade/Rainbow Pride parade)

பால்புது சுயமரியாதைப் பேரணி அல்லது வானவில் சுயமரியாதைப் பேரணி என்பது LGBTIQA+/பால்புதுமையினரின் கலாச்சாரத்தைக் கொண்டாடுகிற, அடையாளங்களின் சுயமரியாதையை நிறுவுகின்ற நிகழ்வாகும். இதுபோன்ற நிகழ்வுகள் LGBTIQA+/ பால்புதுமையினருக்கான தளங்களாகவும், அவர்களது உரிமைகளுக்காகக் குரல் எழுப்பும் வாய்ப்பாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

### போலி மருத்துவம் (Conversion therapy, SOGIE change efforts)

LGBTQIA+ நபர்களின் அடையாளங்களை நிராகரித்து சமுதாய வழமைக்குட்பட்ட பாலினம் மற்றும் அல்லது பாலீர்ப்பு கொண்டவர்களாக "மாற்றும்" மருத்துவ செயல்முறைகளே போலி மருத்துவம் எனப்படும்.

இவை அறத்துக்கு எதிரானவை. சட்டத்துக்குப் புறம்பானவை, அறிவியல் ரீதியாக தவறானவை. போலி மருத்துவம் தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது.

மதம் சார்ந்த மூடநம்பிக்கைகளின் அடிப்படையிலும் ஒருவரது பாலினம் மற்றும் அல்லது பாலீர்ப்பை மாற்றும் நடைமுறைகள் கையாளப்படுகின்றன.

இவை இரண்டுமே ஆங்கிலத்தில் "கன்வெர்ஷன் தெரப்பி" என்று அழைக்கப்படுகிறது. இதனால் சம்மந்தப்பட்ட நபர் உடலளவிலும் மனதளவிலும் பாதிக்கப்படக்கூடும். சமயங்களில் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம்.



# பத்திரிக்கையாளர்களுக்கான அடிப்படைகள்

*பால்புதுமையினர் (LGBTQIA+ நபர்கள்) மற்றும்/அல்லது பால்புது சமூகங்கள் பற்றிய செய்திகளை வழங்கும்போது பத்திரிக்கையாளர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியவற்றை இந்தப் பகுதி விளக்குகிறது. செய்திகளை வழங்கும்போது பத்திரிக்கையாளர்கள் பொறுப்புணர்வுடன் இருக்க வேண்டும். பால்புதுமையினரை, சமூகம் ஒதுக்கும் விதத்திலோ பாரபட்சத்துடன் நடந்துகொள்ளும் வகையிலோ செய்திகளை வழங்கக்கூடாது என்பதையும் மனதில் வைத்துக்கொள்ள சேண்டும்.*

- **பெயர்கள் மற்றும் பெயர்விகுதிகள்:** செய்திகளைத் தருவதற்கான காலக்கெடு பத்திரிக்கையாளர்களுக்கு குறைவாகவே இருக்கும். ஆனால் அதைக் காரணமாகக் கொண்டு பேட்டியளிப்பவருக்கு மரியாதைத் தர மறந்துவிடக்கூடாது. ஒரு பத்திரிக்கையாளர் தொழில் ரீதியாகவே செயல்படவேண்டும் என்பதையும் செய்திகளைத் தருபவருடன் ஒரு நம்பிக்கையான பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். செய்திகளைத் துல்லியமாகவும் நேர்மையாகவும் தருவதுடன் தகவல் அளிப்பவரைப் பாதுகாப்பதும் பத்திரிக்கையாளரின் பணியாகும். இந்த அறம் ஒரு பால்புதுமையினரை நீங்கள் பேட்டி எடுக்கும்போது மாறிவிடக்கூடாது.

  ஒருவரின் கருத்து அல்லது பேட்டியினை எழுதும்போதும் அதைப்பற்றி பொதுவெளியில் பேசும்போதும் அவரது பெயர் மற்றும் பெயர்விகுதியைக் (pronoun) கேட்டு அவற்றை சரியாகப் பயன்படுத்துவது முக்கியம். பெயரையும் பெயர்விகுதியையும் நீங்களாக யூகித்துக்கொள்ள வேண்டாம். சம்பந்தப்பட்ட நபரிடம் மரியாதையாக கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்:

  - **உங்கள் பெயர் என்ன?** அவர்கள் சொல்லும் பெயர் சட்டரீதியானப் பெயராக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர்கள் தரும் பெயரையயே செய்திகளில் பயன்படுத்த வேண்டும்.

*குறிப்பு:* ஒருவர் தனது பெயரை வெளிப்படுத்த விரும்பவில்லையெனில் உங்கள் நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் வழக்கப்படி புனைப்பெயர்களை பயன்படுத்தலாம். பயன்படுத்தப்படும் புனைப்பெயர்கள் உங்களுக்கு தகவல் அளிப்பவரின் பாலினத்தோடு பொருந்திப்போகும்படி இருக்க வேண்டும்.

- ***உங்களை எப்படி அடையாளப் படுத்தி கொள்வீர்கள்?*** ஒரு நபருடைய அடையாளத்தை நாமே யூகிக்காமல், அவரிடம் கேட்பதே சிறந்த செயல் ஆகும். ஒருவர் தன்னை தன்னுடைய (பெயர்) விகுதிகளின் மூலம் அடையாளப்படுத்திகொள்ளலாம். ஆண்பால் (ன்/he), பெண்பால் (ள்/she), பொதுப்பால் (ர்/they) ஆகியவை ஒருவரது பாலின அடையாளத்துடன் ஒத்துப்போகும் பிரிவாக இருக்கலாம். பெயர் விகுதி ஒருவர் தன்னுடைய பாலின அடையாளத்தை உறுதி செய்யும் ஒரு வழியும் கூட.

  ஒருவர் எந்த அடையாளத்தையும் பயன்படுத்த விரும்பவில்லையெனில் அவரது பாலீர்ப்பு அடையாளம் மற்றும் பாலின அடையாளத்தை நாமே முடிவு செய்யக்கூடாது.

- ஒருவரது வழங்கப்பட்ட பெயரை (Deadname) ஒருபோதும் தயவுசெய்து கேட்கவேண்டாம். அவர்கள் அனுமதியின்றி அதை எங்கும் பயன்படுத்தவும் வேண்டாம். அப்படி பிறப்பின் போது வழங்கப்பட்ட பெயரைப் பயன்படுத்துவது அவமரியாதையானது மற்றும் சம்பந்தப்பட்டவரின் பாலின அடையாளத்தைப் புறந்தள்ளுவது.

- ***பால்புது அடையாளம் என்பது பரபரப்புக்கானது அல்ல:*** செய்திக்குத் தேவைப்பட்டால் மட்டுமே ஒருவரது பாலின அடையாளம் அல்லது பாலீர்ப்பு பற்றிய விவரங்களை வெளிப்படுத்தவேண்டும்.

  எடுத்துக்காட்டாக, ஒரு திருட்டுக்குற்றம் நடந்திருக்கிறது, அதில் குற்றம் சாட்டப்பட்டவர் ஒருபாலீர்ப்பு கொண்ட ஆணாக இருக்கும்பட்சத்தில் அவரது பாலீர்ப்பு அடையாளத்தைப் பற்றிப் பேசத்தேவையில்லை. குற்றம் சாட்டப்பட்டவர் எதிர்பாலீர்ப்பு கொண்டவராக இருக்கும்பட்சத்தில் அதைப் பற்றி நாம் பேசப்போவதில்லை, எனில் பால்பதுமையினர் செய்திகளில் மட்டும் அதை ஏன் கவனத்தில் கொண்டு வர வேண்டும்?

- ***பாலினம் மற்றும் பாலீர்ப்பு அடையாளம் மட்டுமே ஒரு பால்புதுமையினரை வரையறுக்காது:*** ஒரு கருத்தினைத் தெரிவிக்கும் நிபுணர் பால்புதுநபராக இருக்கும் பட்சத்தில், அவரது பால்புது அடையாளம் அந்த கட்டுரைக்கு தேவைப்பட்டால் அந்த நிபுணர் தன்னை எவ்வாறு அடையாளப்படுத்த விரும்புகிறார் எனக் கேட்டு அவர் விரும்பும் அடையாளத்துடனே அவரது கருத்தை பிரசுரிக்க வேண்டும்.

  - எடுத்துக்காட்டாக, தமிழ் என்பவர் ஒரு எழுத்தாளர் மற்றும் ஒருபாலீர்ப்பு கொண்டவர் எனில்.

    தமிழ் ஒரு எழுத்தாளர் அல்லது

    தமிழ் ஒரு ஒருபாலீர்ப்பு கொண்ட ஒரு பெண் எழுத்தாளர் அல்லது

*தமிழ் ஒரு ஒருபாலீர்ப்பு கொண்ட பெண் மற்றும் எழுத்தாளர்*

எனக்குறிப்பிடலாம். சந்தேகம் இருப்பின் மூன்றாவதாக குறிப்பிடப்பட்டிருக்கும் முறையில் எழுதலாம்.

- **பதினெட்டு வயதுக்குக் குறைவானவர்களின் அடையாளத்தினைப் பாதுகாக்க வேண்டும்:** 18 வயதுக்குக் கீழே இருக்கும் பால்புதுமையினரைப் பற்றிய செய்திகளில், பொதுவாக 18 வயதுக்குக் கீழே இருப்பவர்களின் அடையாளத்தை எப்படிப் பாதுகாப்பீர்களோ அதே நடைமுறையைப் பின்பற்றவேண்டும். சந்தேகம் இருப்பின் போஸ்கோ சட்டம், குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டத்தில் கூறியுள்ள நடைமுறையை பின்பற்ற வேண்டும்.

- **யாருடைய கருத்தினை உங்கள் கட்டுரைக்காக பெறுகிறீர்கள் என்பதை யோசிக்க வேண்டும்:** ஒரு பால்புதுமையினர் இறந்துவிட்டார் என்றால், அவரது குடும்பத்தினரிடம் பேசுவீர்களா அல்லது அவரைப் பற்றி இன்னும் சரியான தகவல்களைத் தருகிற, அவராகத் தேர்ந்தெடுத்துக் குடும்ப நண்பர்களுக்கு முன்னுரிமை கொடுத்துப் பேசுவீர்களா? என்பதை யோசிக்க வேண்டும்.

- **பால்புது சமூகங்களுக்கு இருக்கும் சிக்கலானத் தடைகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்:** ஒரு பால்புது நபருக்கு அவரது பாலினம் மற்றும் பாலீர்ப்பைத் தாண்டி சாதி, மதம், பொருளாதார நிலை காரணமாகவும் பல பாதகங்கள் ஏற்படலாம். எனவே ஒரு நபரிடம் கருத்தினைப் பெறும்போது அவர் எந்த மாதிரியான சூழ்நிலையில் இருந்து வந்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வது அவசியம்.
  - எடுத்துக்காட்டாக பாலியல் தொழில் செய்பவர்கள் பற்றிய கட்டுரையை எழுதும்போது, பாலியல் தொழில் குறித்து ஆய்வு செய்யும் வெளிநாட்டில் வசிக்கும் ஒருவரிடம் பேட்டி எடுப்பதை விட பாலியல் தொழில் செய்பவர்களிடமோ அல்லது அவர்களுடன் வசிப்பவர்களிடமோ பேட்டி எடுப்பது அவசியம்.

- **திருநர் மற்றும் திருநர் சமூகங்களைப் பற்றிய செய்திகளை வழங்குதல்:** திருநர்களைப் பற்றிய செய்திகளை வழங்கும்போது கீழ்க்கண்டவற்றை நினைவில் வைத்துக்கொள்ளவும்.
  - திருநங்கைகள் மற்றும் திருநம்பிகளை மொத்தமாக அடையாளப்படுத்த திருநர் எனும் வார்த்தையை பயன்படுத்தலாம். திருநங்கைகள் மற்றும் திருநம்பிகள் குறித்த விளக்கத்துக்கு சொற்களஞ்சியத்தைப் பார்க்கவும்.
  - திருநர்களைப் பற்றி எழுதும்போது "பெண்ணாகப் பிறந்தவர்", "ஆணாகப் பிறந்தவர்" என்று குறிப்பிடுவது தவறானது. "பிறப்பின்போது வழங்கப்பட்ட பால் அடையாளம்" என்று குறிப்பிடுவதே சரியானது.

எடுத்துக்காட்டு: "இவர் ஒரு திருநம்பி".

வாசகர்களுக்கு இன்னும் தெளிவு தேவைப்பட்டால், "தமிழ் என்பவருக்கு பிறக்கும்போது பெண்பால் வழங்கப்பட்டது, இருபது வயதாகும்போது அவர் தான் அடையாளப்

படுத்திகொள்ளும் பாலினத்தை உறுதிபடுத்திக் கொள்ளத் தொடங்கினார்'' என்று எழுதுங்கள். ''தமிழ் பெண்ணாகப் பிறந்தார்'' என்று எழுதாதீர்கள்.

- திருநர்களின் உடல் அல்லது பாலுறுப்புகளைப் பற்றிய கேள்விகளைத் தவிர்த்துவிடுங்கள். உங்களது செய்தி உடல்நலம் பற்றியது என்றால், அவர்கள் பதில் சொல்லும்படி சுயவிடை வினாக்களையே எழுப்புங்கள், தகவல்களை எவ்வளவு தூரம் உங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று திருநர்களே முடிவெடுக்கட்டும்.
- ''பால்மாற்று அறுவை சிகிச்சை'' என்ற பதத்தைத் தவிர்க்கவும். அறுவை சிகிச்சை பற்றிப் பேசும்போது ''பாலின உறுதிபாட்டு அறுவை சிகிச்சை'' என்ற பதத்தையும் பொதுவான உடல்சார், சமூக, சட்ட செயல்பாடுகளுக்கு ''பாலின உறுதிபாட்டு நடைமுறைகள்'' என்ற பதத்தையும் பயன்படுத்தவும்.

திருநர்கள் மற்றும் திருநர் சமூகங்களைப் பற்றியச் செய்திகளை வழங்கும்போது, அவர்களது சொந்த வாழ்க்கைப் பயணம் மற்றும் உடல்சார் மாறுபாடுகள் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு செய்தி சேகரிப்பது முக்கியம். காவல்துறை வன்முறை, பாரபட்சம், பொது சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் ஆகியவற்றிலிருந்து விலக்கப்படுதல் என திருநர் சமூகத்தினர் பல பிரச்சனைகளை சந்திக்கிறார்கள். அவை தொடர்பான செய்திகளை எழுதுவதும் முக்கியம்.



# ஆசிரியர்களுக்கான அடிப்படைகள்

*ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், தகவல் சரிபார்ப்பவர்கள் மற்றும் பிழை திருத்துபவர்கள் ஆகியோர் பால்புதுமையினர் (LGBTQIA+ நபர்கள்) பற்றிய ஒரு செய்தியைத் தொகுக்கும்போது மனதில் வைத்துக்கொள்ள வேண்டியவற்றை இந்த அத்தியாயம் விளக்குகிறது. ஒரு செய்தி அல்லது கட்டுரையைக் கேட்டுப் பெறுபவர்கள் (Commissioning editors) அதற்காக எழுதப்பட்டிருக்கும் தனி அத்தியாயத்தைப் பார்க்கவும்.*

- **தலைப்பில் பரபரப்புக்கு பதிலாக கண்ணியத்தைக் கடைபிடித்தல்:** ஒரு வாசகரோ பார்வையாளரோ படிக்கும் முதல் விஷயம் தலைப்புதான். சிலநேரம் வாசகர்கள் படிக்கும் ஒரே விஷயமாக தலைப்பு இருக்கிறது. போட்டி நிறைந்த ஊடகப் பரப்பில் அந்த குறிப்பிட்ட செய்தித் தலைப்பில் வாசகர்களை ஈர்க்கும்படியான சுவாரஸ்யம் இருப்பதை உறுதி செய்யும் பொறுப்பில் ஒரு ஆசிரியர் இருக்கிறார். ஆனால் அந்த தலைப்பு யாருக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது, யாருடைய உணர்வுகளையும் புண்படுத்திவிடக்கூடாது என்கிற அடிப்படைப் பொறுப்புகளையும் அவர் மறந்துவிடக்கூடாது. பரபரப்பான தலைப்பு அல்லது உணர்வைப் புரிந்துகொள்ளும் தலைப்பு என்பதான இரு தேர்வுகள் முன்வைக்கப்பட்டால், உணர்வைப் புண்படுத்தாத தலைப்பையே தேர்ந்தெடுக்க வேண்டும்.
  - எடுத்துக்காட்டாக, திருட்டு பற்றிய ஒரு செய்தியில், குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு பால்புதுமையினராக இருக்கிறார் என்றாலும், அவரது பாலீர்ப்பு அடையாளத்துக்கும் குற்றத்துக்கும் தொடர்பு இல்லாத பட்சத்தில், தலைப்பில் அந்த அடையாளத்தைக் குறிப்பிடத் தேவையில்லை. அது செய்திக்கு மதிப்பையும் சேர்ப்பதில்லை, வாசகருக்கு ஒரு குரூரமான மகிழ்ச்சியைத் தருவதைத் தவிர அதைக் குறிப்பிடுவதால் எந்தப் பயனும் இல்லை.
  - **பெயர்களையும் அடையாளங்களையும் ஒரு முறைக்கு இரண்டு முறை சரிபார்க்கவும்:** நெடுங்காலமாகவே செய்திகளில் திருநர்களின் வழங்கப்பட்ட பெயர்களையே (சொற்களஞ்சியத்தைப் பார்க்கவும்.) பயன்படுத்தி வரும் ஊடகங்கள் திருநர்களை

ஆர்வத்துக்குரிய காட்சிப் பொருட்களாக பாவிக்கின்றன, முன்பு-பின்பு என்ற காலக்கோட்டு கதையாடல்களை மையமாக வைத்து அவர்களை சித்தரித்து வருகின்றன. இது அவர்கள் உணர்வுகளைப் புண்படுத்துவதாகும். செய்தியைப் பொறுத்தவரை இது தேவையற்றதாகவும் இருக்கிறது. பால்புதுமையினரைப் பற்றிய குறிப்பு வரும்போது, அவரது பெயர் மற்றும் அடையாளங்களை ஒருமுறைக்கு இருமுறை சரிபார்க்கவும். அவர் தரும் பெயரையே தவறாமல் கட்டுரை முழுக்க பயன்படுத்தவும். எழுதுபவர் நல்ல நோக்கத்துடன் சிறப்பாக செயல்பட்டிருந்தாலும் அவருக்கு உள்ளுக்குள்ளிருக்கும் பாரபட்சங்களும் சில எழுத்துப் பிழைகளும் செய்தியில் வெளிப்பட்டுவிடும். இதனை சரிபார்ப்பது தொகுப்பாசிரியரின் பணியாகும்.

- ***சரியான இடத்தில் சரியான பதங்களைப் பயன்படுத்துவதற்கு சொற்களஞ்சியப் பட்டியலைப் படித்துக்கொள்ளவும்:*** *உங்களது செய்தியாளர், பால்புதுமையினரைப் பற்றி எழுதியிருக்கிறார், ஆனால் எந்தப் பதங்களைப் பயன்படுத்துவது என்பதில் ஒரு குழப்பம் இருக்கிறது எனில், செய்தி வழங்கியவரிடமே நேரடியாகப் பேசி, அவர் எவ்வாறு அழைக்கப்பட விரும்புகிறார் என்று தெரிந்து கொள்ளவும். ஏதோ ஒரு காரணத்தால் அது சாத்தியமில்லை என்றாலோ சில அம்சங்களை விரிவாக எழுதவேண்டியிருந்தாலோ இந்தக் கையேட்டில் உள்ள சொற்களஞ்சியத்தைப் படிக்கவும். சரியான பதங்களை அறிந்துகொள்ளவும் அவற்றின் விளக்கங்களைப் பெறவும் அது உதவும். ஒரு வழிகாட்டியைப் போல அதைப் பயன்படுத்தலாம்.*
  - *எடுத்துக்காட்டாக, பதினெட்டு வயதுக்குக் கீழ் உள்ள ஒருவரது பாலின வெளிப்பாடு காரணமாக அவர் பள்ளியில் துன்புறுத்தப்படுகிறார், அவருடன் பேசி தகவல்களைப் பெற முடியவில்லை என்றால் “பெண்தன்மை கொண்ட”, “பெண்ணைப் போல நடந்துகொண்ட” போன்ற பிரயோகங்களைத் தவிர்க்கவும். மற்றவர்களிடம் பேசியபோது, சம்பந்தப்பட்ட நபர் “சமூகம் வரையறுத்த பாலின அடையாளங்களுடன் ஒத்துப் போகாதவர்” என்று அவர்கள் குறிப்பிட்டதாகத் தெரிவிக்கவும், சிறாரின் பாலின அடையாளத்தை நீங்களே அனுமானிக்க வேண்டாம். அவர்கள் தன்னை என்னவாக அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.*
- ***செய்தியைத் தருபவர்களிடம் அவர்கள் பேசுவதை உறுதிப்படுத்திக்கொள்ளவும்:*** *விரிவான செய்திகள் மற்றும் பேட்டிகளில், பேசியவரின் கருத்துக்களை மீண்டும் அவர்களுக்கு அனுப்பி சரிபார்ப்பது நல்லது. அவர்கள் பேசியது தவறாக வெளிப்படவில்லை என்பதையும் மொழியாக்கத்தில் எதுவும் மாறவில்லை என்பதையும் இதன்மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளவும். இதையே பால்புதுமையினர் பற்றியச் செய்திகளிலும் கடைபிடிக்கவும். பால்புதுமையினர் பலருக்கும் ஊடகங்களுடன் மோசமான அனுபவம் இருப்பதால் இதனை கடைபிடிப்பது மிகவும் அவசியம். ஒரு முழுமையான பேட்டியை அவர்களுக்கு அனுப்புவதை எந்த ஒரு செய்தி ஊடகமும் ஏற்காது. ஆனால் ஒருவர் பேசிய கருத்துக்களை மீண்டும் அவரிடமே அனுப்பி சரிபார்ப்பதில் பிரச்சனை எதுவுமில்லை, சம்பந்தப்பட்டவரிடம் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தவும் இது உதவும்.*

- ***பால்புது வல்லுநருக்கு செய்தியை அனுப்பி உணர்வுகளைப் புண்படுத்துகிறதா என்று சரிபார்க்கவும்:*** ஒரு சிக்கலான செய்தியை எழுதும்போது, அதில் நீங்கள் வல்லுநர் இல்லை என்பதால் சில அம்சங்களை நீங்கள் தவற விட வாய்ப்பிருக்கிறது. அப்படியான சந்தேகங்கள் எழும்போது அதை ஒரு வல்லுநருக்கு அனுப்பி சரி பார்ப்பது நல்லது. அந்த வல்லுநர் ஊடக நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது பால்புது செயற்பாட்டாளராகவோ ஊடகவியலாளர்களாகவோ இருக்கலாம். உங்களது செய்திகளில் உணர்வுசார் திருத்தங்களை செய்யக்கூடிய பால்புது செயற்பாட்டாளர்கள் அல்லது ஊடகவியலாளர்களிடம் தொழில்சார்ந்த உறவை ஏற்படுத்திக்கொள்ளவும். எனினும் செய்திக்குறிப்பில் தனிப்பட்ட முறையில் அவர்களின் பங்கு இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். இது ஒரு சார்பற்ற தன்மையப் பெற உதவும்.

- ***பாதுகாப்பே முதன்மையானது:*** பெரும்பாலான செய்திகளில், பால்புதுமையினர் தங்களது பெயரை வெளிப்படுத்திக்கொள்ள விரும்புவதில்லை. அடையாளத்தை வெளிப்படுத்திக்கொள்வது வீட்டிலோ வேலை செய்யும் இடத்திலோ பொது வெளியிலோ வன்முறைக்கும் பாரபட்சத்துக்கும் வழிவகுக்கும். இதுபோன்ற சூழ்நிலைகளில் அவர்களது அடையாளம் மறைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்துகொள்ளவும். ஏற்கனவே பாதிக்கப்படக்கூடிய இடத்தில் இருப்பவர்களுக்கு ஊடகங்கள் பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது.

  - எடுத்துக்காட்டாக, தனது பணிச்சூழலில் நடக்கும் ஊழலை அங்கு பணிசெய்யும் திருநர் ஒருவர் வெளிப்படுத்தி அதற்கு எதிராகக் குரல் எழுப்புகிறார். அந்த சூழ்நிலையில், செய்திகளில் அவரது பாலின அடையாளத்தை வெளிப்படுத்தினால் அவர் பணிசெய்யும் நிறுவனத்துக்கு அவர் யார் என தெரிவதற்கான வாய்ப்பு மிக அதிகம். ஏனெனில் அந்த நிறுவனத்தில் சில திருநர்களே இருக்கலாம். அல்லது அங்கு பணிபுரியும் ஒரே திருநர் அவராகவும் இருக்கலாம். அப்படிப்பட்ட ஒரு சூழலில் அவரது பெயர் மற்றும் பிற அடையாளங்களோடு அவரது பாலின அடையாளமும் மறைக்கப்பட்டிருக்கிறதா என்று உறுதி செய்துகொள்ளவும்.

  - ஒரு டேட்டிங் செயலியில் தன்னை யாரோ மிரட்டுவதாக ஒரு தன்பாலீர்ப்பு கொண்ட ஆண் குற்றம் சாட்டியிருக்கிறார் எனில், அவரது பெயரை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டாம். அப்படி தெரிவித்தால், அவரது பாலீர்ப்பு அடையாளத்தை அறியாத அவரது குடும்பத்தினருக்கு அவரது அடையாளம் தெரிந்துவிடும் வாய்ப்பு மிக அதிகம். இதுபோன்ற சூழலில் அவர்களது பெயரைக் குறிப்பிடவேண்டாம்.

- ***செய்திகளில் பன்முகத்தன்மையை உறுதிசெய்யுங்கள்:*** ஒரு செய்தியாளர் தன்னுடைய எல்லா செய்திகளிலும் தொடர்ந்து ஒன்றிரண்டு செயற்பாட்டாளர்களிடமே கருத்துக்களை பெறுகிறாரா என்று கவனிப்பது அவசியம். செய்தியாளர்கள் பலதரப்பட்டவர்களிடம் பேசுவதை உறுதிப்படுத்திக்கொள்வது தொகுப்பாசிரியர்களின் பணியாகும். பெரும்பாலான சமூகங்கள் மற்றும் சமூகநீதி இயக்கங்களைப் போலவே பால்புதுமையினரும் பல்வேறு அடையாளங்களை சார்ந்தவர்களாக இருப்பார்கள். இந்த அடையாளங்கள் அவர்களை வெவ்வேறு விதங்களில் அவர்களுக்கு சாதகமாகவோ பாதகமாகவோ இருக்கலாம். சாதி, வர்க்கம், புவியியல்சார் அடையாளம், பாலினம், கல்விக்கான வாய்ப்பு, மொழி

போன்ற எல்லா அம்சங்களும் ஒருவரை உயர்ந்த இடத்திலோ விளிம்பு நிலையிலோ நிறுத்தலாம். ஊடகங்களில் மேற்கோள் காட்டப்படுபவர்கள் எல்லாருமே மேல்தட்டைச் சேர்ந்த பால்புதுமையினராக இருக்கவேண்டாம், இதை உறுதி செய்யுங்கள்.

- ***உள்ளடக்க எச்சரிக்கை:*** ஒரு செய்தியிலோ காணொளியிலோ வன்முறை, தாக்குதல், துன்புறுத்தல், பால்புதுமையினருக்கு எதிரான கருத்துக்கள் இருந்தால் செய்தியின் முதலிலேயே உள்ளடக்க எச்சரிக்கையை செய்வது வாசிப்பவர்களை பதட்டமடையச் செய்யாமல் இருக்கும்.



# கருத்துக் கட்டுரைகளைப் பெறுவதும் எழுதுவதும்

*கலை, கலாச்சாரம், உரிமைசார் பரப்புரை, சட்டம் மற்றும் திட்ட வரைவு, அரசியல், கல்வி, மருத்துவம், மனித உரிமைகள் அறிவியல், விளையாட்டு மற்றும் பால்புது அடையாளங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்த கருத்துக் கட்டுரைகள் பற்றிய வழிகாட்டுதல்கள் இந்தப் பிரிவில் வழங்கப்பட்டிருக்கின்றன*

**கட்டுரைகளை எழுதுமாறு கேட்பதற்கு முன்பாக, தொகுப்பாசிரியர் இரண்டு முக்கிய அம்சங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்:** இந்தக் கட்டுரையை எழுதுபவர் யார்? அதை எழுதும் நிபுணத்துவம் அவருக்கு இருக்கிறதா?

ஒரு கட்டுரையை எழுதுமாறு கேட்கும் முன்பு, கீழ்க்கண்ட கேள்விகளுக்குத் தொகுப்பாசிரியர் விடை காண வேண்டும்:

- எழுதவிருப்பவர் பால்புதுமை அடையாளம் கொண்டவரா?
- துறைசார் நிபுணத்துவம் பெற்றவரா?
- பால்புதுமையினர் பற்றி எழுதுவதில் அவரது எழுத்து வரலாறும் செயல்பாடுகளும் என்ன?
- பொதுவான மனித உரிமைகளைப் பற்றி எழுதுவதில் அவரது வரலாறும் செயல்பாடுகளும் என்ன?

### கட்டுரைகளை அளிப்பவர் பால்புதுமையினராக இருக்கும்பட்சத்தில்:

- பால்புதுச் சமூகத்தில் அவரது பங்களிப்பு என்ன? அடிமட்ட அளவில் அவரது செயல்பாடு என்ன?
- குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிப் பேசுவதில் அவர் நிபுணத்துவம் பெற்றவரா? எடுத்துக்காட்டாக, மனநலம் பற்றி ஒரு நிபுணரின் பார்வையில் அவர் எழுதுகிறார் எனில், அவர் ஒரு மனநல மருத்துவரா? உளவியலாளரா? மனநல ஆலோசகரா? அவரது

கருத்து சர்ச்சைக்குரியதாக இருக்கும் பட்சத்தில் நம்பிக்கைக்குரிய நிபுணர்களிடமிருந்து ஒரு கருத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

  - எடுத்துக்காட்டாக, சர்ச்சைக்குரிய உளநல சிகிச்சை அல்லது சுய துன்புறுத்தலை அவர் முன்னிறுத்தும் பட்சத்தில் இதைப் பிரசுரிப்பது சரியாக இருக்குமா என்று மற்றொருவரின் கருத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- சாதி, வர்க்கம், பாலினம், பாலீர்ப்பு, இனம், மதம், மொழி பற்றிய ஆதிக்கவாதக் கருத்துக்களை அவர் சர்ச்சைக்குரிய கோணத்தில் முன்வைக்கிறாரா? ஒருவர் பால்புதுமையினராக இருக்கிறார் என்பதாலேயே அவர் பிற அம்சங்களில் ஆதிக்க வகுப்பினராக இருக்கமாட்டார் என்று முடிவெடுத்துவிட முடியாது, அல்லது அரசியல் சரிநிலையற்ற, ஃபாசிச கருத்துக்களைக் கொண்டவராக இருக்கமாட்டார் என்றும் நினைக்க முடியாது.

  - எடுத்துக்காட்டாக, பெரும்பான்மையினரால் செய்யப்படும் ஒரு வன்முறையை ஒரு சக்தி வாய்ந்த பால்புதுநபர் ஆதரிக்கிறார் எனில், அவரது பால்புது அடையாளம் காரணமாக அவரது தவறை சுட்டிக்காட்டாமல் இருக்கத் தேவையில்லை.

  - மற்றொரு எடுத்துக்காட்டு: ஆதிக்க சாதியைச் சேர்ந்த ஒரு பால்புது நபர், பிற்படுத்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்டச் சாதியைச் சார்ந்த பால்புது நபரைப் பற்றி சாதிய ரீதியிலான கருத்துக்களை தெரிவிக்கிறார் எனில் அவரைப் பற்றியக் கருத்துக் கட்டுரைகள் பால்புது எழுத்தாளர்கள் எழுதி அவரது தவறைச் சுட்டிக்காட்டுவது தவறில்லை.

- ஒரு பால்புது நபர், அந்த சமூகத்தில் இருக்கும் எல்லாருக்கான பொதுப் பிரதிநிதியாகத் தன்னை அறிவித்துக்கொள்ள முடியாது என்பதைப் புரிந்துகொள்ளவும். ஆகவே இப்படி ஒருவர் தன்னை முன்னிறுத்தும்போது அவரது கட்டுரையைத் தொகுப்பதில் கவனமாக இருக்கவும்.

- சக பால்புதுமையினர் மீதும் குறிப்பிட்ட சில அடையாளங்கள் மீதும் பால்புது வெறுப்பு கொண்ட பால்புதுமையினரும் உண்டு. அவர்களுக்கான தளத்தைத் தரவேண்டாம்.

  - எடுத்துக்காட்டாக, சிஸ்பாலினத்தைச் (மிகைப்பாலினம்) சார்ந்த ஒருபாலீர்ப்பு கொண்ட பெண் ஒருவர் திருநங்கைகளின் ஒருபாலீர்ப்பு அடையாளத்தைக் குறித்து கேள்வி எழுப்பும் விதத்தில் ஒரு கட்டுரையை எழுத விரும்பினால் அது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. அவர் எழுத நினைக்கும் கட்டுரை பிரச்சினைக்குரியது. ஒருவரது பாலினமும் பாலீர்ப்பும் தனிநபர் சம்மந்தப்பட்டது, தனிநபரால் அடையாளப்படுத்தப்படுவது. அதில் பால்புதுமையினர் உட்பட மற்ற எவரும் முடிவெடுக்க எதுவும் இல்லை.

### கட்டுரைகளை அளிப்பவர் பால்புதுமையிராக இல்லாத பட்சத்தில்

- பால்புதுமையினரின் வாழ்க்கை அனுபவங்கள் பற்றி கருத்து சொல்கிறார்களா? அப்படியானால் கட்டுரையை ஏற்கவேண்டாம்.

- அவர்கள் துறை சார் நிபுணர்களாக இருக்கும்பட்சத்தில் துறைசார்ந்த அம்சங்களுடன் நிறுத்திக்கொள்கிறார்களா அல்லது பால்புதுமையினர் கருத்து தரவேண்டிய விவகாரங்களைப் பற்றியும் பேசுகிறார்களா?
    - எடுத்துக்காட்டு: ஒரு வழக்கறிஞர் திருமண சமத்துவம் பற்றி எழுதுகிறார் என்றால், சட்டம், அரசியலமைப்பு வரையறைகளைப் பற்றி மட்டும் பேசுகிறாரா அல்லது அந்த விஷயத்தின் சமூகக் கோணங்களை அலசுகிறாரா? முந்தையது சரி, பின்னது சரியல்ல.
- ஒரு துறைசார் அனுபவம் வாய்ந்த நிபுணர் பிரச்சனைக்குரிய, சர்ச்சைக்குரிய நிலைப்பாட்டை எடுக்கும்போது ஒரு நம்பிக்கைக்குரிய பால்புது சமூக உறுப்பினரிடமிருந்து கருத்துக் கேட்டுக் கொள்ளுங்கள்
    - எடுத்துக்காட்டு: ஒரு மனநல மருத்துவர் பல்புதுமையினராக இருப்பதன் காரணங்களைப் பற்றி அறிவியலுக்குப் பின்னால் மறைந்துகொண்டு கட்டுரை எழுதுகிறார் எனில் அந்தக் கட்டுரையை பால்புதுமையினர் மனநல நிபுணரிடம் காண்பித்து கருத்து பெற்று, பின்னர் என்ன செய்வதென்ற முடிவினை எடுக்க வேண்டும்.
- கட்டுரையாளர் தொடர்ந்து பால்புதுமையினருக்கான இடத்தை ஆக்கிரமிப்பவராக இருக்கிறாரா? அவரது முந்தைய செயல்பாடுகள், பொது சமூக வலைதள செயல்பாடுகளை கவனியுங்கள். பால்புதுமையினர் பற்றிய செயல்பாடுகளில் அவர் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்கிறார் என்றால் அது ஆபத்தானது. அடையாளத்தைத் திருடும் நோக்கம் கொண்டது. பொறுப்பான ஊடகம் அதற்கு இடம் தரக்கூடாது.
- பால்புதுமையினர் குடையின் கீழ் வரும் ஒரு சமூகத்துக்கு ஆதரவாக எழுதுவதான போர்வையில் பால்புது அடையாளம் கொண்ட வேறு சில சமூகத்தினரை மட்டம் தட்டுவதாகவும் அவர்கள்மீது வெறுப்பு கொண்டதாகவும் இருக்கும் கட்டுரைகளை எடுத்துக்கொள்ள வேண்டாம்.
    - எடுத்துக்காட்டு: தொழில்முறை பெண்ணியவாதியான ஒரு நிபுணர், சிஸ் பாலினம் கொண்ட தன்பாலீர்ப்பு பெண்களுக்கு ஆதரவாக எழுதும் ஒரு கட்டுரையில் திருநங்கைகள் ஆபத்தானவர்கள் என்று குறிப்பிடலாம். இவர்கள் Trans Exclusionary Radical Feminists (TERFs) என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்களின் நிலைப்பாடு பிரச்சினைக்குரியது. இவர்களின் கட்டுரைகளை ஏற்க வேண்டாம்.
- பால்புதுமையினருக்காக இயங்கும் செயற்பாட்டாளராகத் தன்னை அறிவித்துக்கொள்ளும் ஒருவர், தனக்கோ தான் சார்ந்திருக்கும் தொண்டு நிறுவனத்துக்கோ நேரடியான நம்பகத்தன்மை தரும் ஒரு கட்டுரையை வழங்கினால், அவர்களைப் பற்றி முழுவதும் அறிந்துகொண்ட பிறகே கட்டுரையைப் பிரசுரிக்கவும்.
    - எடுத்துக்காட்டு: தொண்டு நிறுவனம் ஒன்றை நடத்தும் ஒரு சிஸ் நபர், பால்புதுமையினருக்கான சேவையை வழங்குகிறார் என்று கூறினால், அது நிஜமா

அல்லது நிதியுதவி பெறுவதற்கான வழியா என்பதை அந்த நகரம் மற்றும் மாநிலத்தில் வசிக்கும் பால்புது சமூகத்தினரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

## மேலும் தெரிந்துகொள்ள வேண்டிய சில விஷயங்கள்:

- நீங்கள் ஒரு தொகுப்பாசிரியராக இருக்கும்பட்சத்தில், சிஸ் பாலின பெண்களின் பிரச்சினைகள் பற்றி எழுதும்போது கடைபிடிக்கும் அதே விதிகளைப் பால்புதுமையினர் பற்றிய கட்டுரைகளிலும் பின்பற்ற வேண்டும்.
    - எடுத்துக்காட்டாக #MeToo குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு நீங்கள் வாய்ப்பு தர மாட்டீர்கள் என்றால், ஒருபாலீர்ப்பு வெறுப்பு, திருநர் வெறுப்பு, பால்புது வெறுப்பு கொண்டவருக்கும் அதே விதியைப் பின்பற்றவும்.
- வேறு ஒருவரின் கருத்துக்களைப் பற்றிய கருத்துக் கட்டுரையில், அவரது முழுப் பேச்சும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா அல்லது தனிப்பட்ட சில கருத்துக்கள் மட்டும் விமர்சிக்கப்படுகின்றனவா? என்பதை சரி பார்க்கவும். பொதுவான தொகுப்புசார்ந்த தர நிர்ணயத்தை பால்புதுமையினர் பிரச்சனைகளுக்கும் பின்பற்றவும்.
- பொதுவெளியில் அல்லாமல் தனிப்பட்ட முறையில் கருத்து சொன்ன மக்களின் அடையாளங்கள் கட்டுரையில் வெளிப்படையாக சுட்டப்படுகிறதா? என தெரிந்து கொள்ளுங்கள். இதுபோன்ற கட்டுரைகளை ஏற்கலாமா வேண்டாமா என்று சிந்தித்து முடிவு எடுங்கள்.
- ஒரு கட்டுரை பால்புதுமையினர் மற்றும் பால்புது சமூகங்களை பாதிக்கும் வாய்ப்பு இருக்கிறாதா? ஆம் எனில் எந்த யோசனையும் இல்லாமல் அந்த கட்டுரையை நிராகரித்து விடுங்கள்.



# புகைப்படங்கள் மற்றும் காணொளிகள்

*இந்தப் பகுதியில் பால்புதுமையினரின் (LGBTQIA+ நபர்கள்) புகைப்படங்கள், காணொளிகள் எடுத்தல், அவர்களது புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை வெளியிடுதல், பால்புதுமையினர் பற்றிய செய்திகளில் பிரதிநிதித்துவ படங்களைப் பயன்படுத்துதல், படங்களுக்கான குறிப்புகள் எழுதுதல் ஆகியவை விவாதிக்கப்படுகின்றன.*

ஒளிப்பட ஊடகவியல் என்பது சம்பந்தப்பட்டவருக்கு மிக அருகில் இருப்பதான உணர்வை வாசகர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் தரக்கூடிய ஆற்றல் நிறைந்த ஒரு கருவியாகும். இதன்மூலம் ஒரு ஊடகவியலாளர் பலதரப்பட்ட உணர்ச்சிகளைத் தூண்ட முடியும். ஒரு செய்தியின் சாரத்தை சரியாகத் தருவதற்கும் புகைப்படத்தில் இருப்பவரை கண்ணியமாக சித்தரிப்பதற்கும் நடுவில் ஒரு சமநிலையைக் கடைபிடிக்கவேண்டியது அவசியம். பால்புதுமையினர் மற்றும் அவர்கள் சார்ந்த நிகழ்வுகளைப் படமெடுக்கும்போது அவர்களது பாதுகாப்புக்கு ஆபத்து வரலாம் என்பதால், தேவைப்பட்டால் அவர்களது அடையாளத்தை மறைப்பதிலும் ஊடகவியலாளர்கள் யுத்திகளைப் பயன்படுத்த வேண்டும்.

- பால்புதுமையினரைப் படம்/காணொளி எடுப்பதற்கு முன்னால் அவர்களது ஒப்புதலை உறுதி செய்துகொள்ளுங்கள். நீங்கள் சேகரிக்கப்போவது படமா காணொளியா, அது எவ்வாறு பயன்படுத்தப்படும், செய்தியின் மையக் கருத்து, அது பிரசுரிக்கப்படும் இடம் என எல்லாவற்றையும் விளக்கவும். அவர்களிடம் சில நிமிடங்கள் பேசி அவர்கள் சவுகரியமாக இருப்பதையும் கேமராவில் பதிவு செய்ய ஒப்புதல் தருவதையும் உறுதிப்படுத்துங்கள். அந்த புகைப்படமோ காணொளியோ வைரலானாலோ, விருப்பமில்லாத இணைந்து பணியாற்றுவதற்கான அழைப்புகள் வந்தாலோ, விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்டாலோ, ஆன்லைனிலோ பிற வடிவங்களிலோ அதிகமான கவனத்தைப் பெற்றாலோ ஏற்படக்கூடிய ஆபத்துகளையும் விளக்கவும். தங்களது அடையாளத்தை வெளிப்படுத்த விரும்பாத நபர்களிடமும் அடையாளம் வெளிப்படுவதற்கான ஆபத்து இருப்பதையும் அவர்களுக்கு விளக்க வேண்டும்.
    - எடுத்துக்காட்டாக, ஒரு நபர் தன்னுடைய அடையாளத்தை நண்பர்களுக்கு மட்டுமே வெளிப்படுத்தியிருக்கலாம், குடும்ப உறுப்பினர்களுக்கோ சக பணியாளர்களுக்கோ

அவர்களின் அடையாளம் தெரியாமல் இருக்கலாம். ஒரு பால்புது நிகழ்வில் அவர்கள் பங்கெடுப்பதைக் குறிப்புடனோ குறிப்பு இல்லாமலோ நீங்கள் பிரசுரித்தால் அது அவர்களுக்கு ஆபத்தாகலாம்.

- பால்புது சுயமரியாதைப் பேரணி, மாநாடு, நாடகம், கொண்டாட்டம், குயர் நபர்கள் ஒன்றுகூடும் நிகழ்வும் போன்ற குயர் நிகழ்வுகளைப் புகைப்படம் எடுக்கும்போதோ காணொளி எடுக்கும்போதோ பால்புதுமையினரின் வாழ்க்கை அல்லது பிரச்சனைகளுக்கான செய்திகளுக்கான காணொளிகள், படங்களை சேகரிக்கும்போதோ நிகழ்வின் புகைப்படக் கொள்கை பற்றி நிர்வாகிகளிடம் பேசவும். புகைப்படம் எடுக்கப்படுவதற்கு யாருக்கு சம்மதம், யாருக்கு ஒப்புதலில்லை என்பதைக் கண்டறிய அவர்களிடம் ஏதாவது வழி இருக்கிறதா என்று கேட்கவும். புகைப்படம் எடுக்கப்பட ஒப்புதல் அளிப்பவர்கள் கழுத்துப்பட்டை அல்லது ஸ்டிக்கர் அணிவதன் மூலம் ஒப்புதலை வெளிப்படுத்தலாம் என்பது போன்ற கொள்கைகள் அவர்களுக்கு இருப்பின் அதை மதிக்கவும்.

- பிரதிநிதித்துவ படங்களைத் தேர்ந்தெடுக்கும்போது செய்தியின் மையத்தைப் புரிந்துகொண்டபிறகே புகைப்படங்களைத் தேர்வு செய்யவும். பால்புதுமையினரை அடையாளம் காண முடிகிற சுயமரியாதை நிகழ்வுப் படங்களை பிற செய்திகளில் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். முதலாவதாக, அந்த குறிப்பிட்ட சூழலுக்கு அப்பால் தன்னுடைய புகைப்படம் பயன்படுத்தப்படுவதற்கு அவர்கள் ஒப்புதல் அளிக்கவில்லை. இரண்டாவது, இது அவர்களுக்கு தனிப்பட்ட வாழ்க்கையிலோ வேலையிலோ ஆபத்தை ஏற்படுத்தலாம். அடையாளங்களோ முகங்களோ வெளிப்படையாகத் தெரியாத புகைப்படங்களை பயன்படுத்தலாம்.

    - எடுத்துக்காட்டாக, மருத்துவ சேவைகளை அணுகுவதில் பால்புதுமையினருக்கு இருக்கும் சிக்கல் பற்றிய செய்தியில் அதற்கு ஏற்ற புகைப்படத்தைப் பயன்படுத்தவும். முகமோ மற்ற அடையாளங்களோ தெரியக்கூடிய/அல்லது தெரியாத ஒரு பால்புது நபர் மருத்துவ சேவையை அணுக முயற்சி செய்வதாக அந்தப் புகைப்படம் இருக்கலாம். அப்படிப்பட்ட புகைப்படம் இல்லாவிட்டால் ஓர் ஓவியத்தைப் பயன்படுத்த முயற்சி செய்யலாம். ஆனால் வேறு ஒரு நிகழ்வில் எடுக்கப்பட்ட வானவில் கொடியையோ பால்புது மக்களின் புகைப்படங்களையோ தயவுசெய்து பயன்படுத்தாதீர்கள்.

- பால்புது மக்கள் அல்லாதவர்களுக்கு அளிக்கும் அதே கண்ணியத்தை பால்புது மக்களைப் புகைப்படம் எடுக்கும்போதும் பின்பற்றவும். புகைப்படத்துக்காக ஒரு குறிப்பிட்ட வகையில் அவர்கள் தங்களை முன்னிறுத்தவேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள், இது அவர்களது அடையாளத்தை நீங்கள் நினைக்கும் விதத்தில் நடித்துக்காட்ட வேண்டும் என்று நீங்கள் கேட்பதற்கு சமமானது. பிரதிநிதித்துவ படங்களுக்கும் இதே வழிகாட்டுதல்கள் பொருந்தும்.

    - எடுத்துக்காட்டாக பால்புது சுயமரியாதைப் பேரணியில் கலந்துகொள்ளும் பலரும் அவர்களின் கோரிக்கைகள் சார்ந்து அவர்களின் நிலைப்பாடு சார்ந்து பலவிதமான

பதாகைகளைக் கொண்டு வரலாம். ஒருவரது பதாகையினை வாங்கி நீங்கள் புகைப்படம் எடுக்க விரும்பும் நபரிடம் கொடுத்து புகைப்படம் எடுப்பது தவறானது.

- திருநர்கள் அல்லது பால் இருமைக்கு அப்பாற்பட்டவர்களின் புகைப்படங்களை வெளியிடும்போது, சம்பந்தப்பட்டவர்கள் கேட்காத பட்சத்தில் பாலின உறுதி சிகிச்சைக்கு முன் - பின் என்பதான புகைப்படங்களைப் பயன்படுத்தவேண்டாம்.

- பால்புது மக்களின் வருத்தம், மன அழுத்தம், வன்முறை ஆகியவை பற்றி செய்தி இல்லாதபட்சத்தில் பால்புதுமையினரை அவ்வாறு சித்தரிக்கும் படங்களைப் பயன்படுத்த வேண்டாம்.

- மதம், வயது, பாலினம், வர்க்கம், உடல் அளவு, உடல் சவால் போன்ற அம்சங்களில் பன்முகத்தன்மையைக் காட்டும் படங்களைத் தேர்ந்தெடுக்கவும்.

- ஒருவரது பால்புது அடையாளம் செய்திக்கு முக்கியம் என்றாலோ இந்த விவரங்களைத் தருவது பொதுவான தகவலுக்குத் தேவை என்றாலோ உணர்வுரீதியாகவும் மரியாதையாகவும் இதை அணுகவும். அவரது பெயர்விகுதிகளைக் கேட்கவும், அவர்களை எவ்வாறு சிறப்பாக புகைப்படம்/வீடியோ எடுக்கலாம் என்று கேட்கவும். பிரபலங்களைப் பொறுத்தவரை அவர்களது புகைப்படங்கள் பொதுவெளியில் கிடைக்கவில்லை எனில், மேலாளர்கள் அல்லது செய்தி தொடர்பாளர்களிடம் இதைக் கேட்கவும். அதையும் செய்தியில் குறிப்பிடவும்.

    - எடுத்துக்காட்டாக, ஒப்புதல் இல்லாமல் அறுவை சிகிச்சை நடத்தப்பட்டதால் ஒரு ஊடுபால் நபருக்கு உடல்நலக் கோளாறுகள் இருக்கின்றன, அவர்களைப் புகைப்படம் எடுக்கவேண்டும் என்றால் அவர்களது கண்ணியத்தைக் குறைக்கும்விதமாகப் புகைப்படம் எடுப்பதற்கு பதிலாக, புத்தகம் படிப்பது, விளையாடுவது, மற்றவர்களுடன் உரையாடுவது போன்ற கோணங்களில் அவர்களைப் புகைப்படம் எடுக்கலாம்.

- புகைப்படம் எந்தத் தளத்தில் பிரசுரிக்கப்படுவதற்கு அவர்கள் ஒப்புதல் தந்திருக்கிறார்களோ அந்தத் தளத்தில் மட்டுமே அது பிரசுரிக்கப்படுவதை உறுதி செய்யவும்.

    - எடுத்துக்காட்டாக, உங்களது நிறுவனத்தின் பக்கத்தில் ஒருவரது படத்தை வெளியிட்டிருக்கிறீர்கள், அதை இன்னொரு நிறுவனம் மறுபிரசுரம் செய்ய விரும்புகிறது என்று வைத்துக்கொள்வோம். சம்பந்தப்பட்டவரிடம் ஒப்புதல் பெற்ற பிறகே அடுத்த நிறுவனம் அந்தப் படத்தைப் பயன்படுத்த அனுமதிக்கவும்.

- ஒரு பிரதிநிதித்துவ படமாக வானவில்/வானவில் கொடி என்பது பாதுகாப்பானதுதான், ஆனால் அது க்ளிஷேவானதும்கூட. வானவில் இருக்கும் ஒரு படத்தைப் பயன்படுத்துவதற்கு முன்பாக கீழே கொடுத்திருக்கும் கேள்விகளை உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்:

    - எதிர்பாலீர்ப்பாளர்கள், சிஸ் மக்களைப் பற்றிய செய்தியில் எந்தப் படங்களைப் பிரசுரிப்பீர்கள்?

- வானவில் அல்லது கொடியைப் பற்றிய செய்தியாக இல்லாவிட்டால் அங்கே அந்தப் படத்தை வைப்பதற்கான அவசியம் என்ன?

- வானவில் கண்துடைப்பு செய்யாமல் சரியான படங்களைப் பயன்படுத்த வேண்டுமெனில் செய்தியின் மையத்தைப் புரிந்து கொள்ளுங்கள்.

- எடுத்துக்காட்டாக, பாலின உறுதிக்கான மருத்துவ சேவை பற்றிய ஒரு கட்டுரையில் வானவில் கொடி தேவையானதா என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளவும். சில திருநர்களுக்கு பாலின உறுதி மருத்துவச் சேவை என்பது அன்றாட வாழ்வின் ஒரு அங்கமாக இருக்கிறது. இதை குழப்பமான ஒரு கோணத்திலிருந்து அணுகாமல் அன்றாடம் பற்றிய கோணத்திலிருந்து அணுகவும். எஸ்ட்ராடயால், டெஸ்டோஸ்டிரோன் ஊசிகள், மார்பு அறுவைசிகிச்சைத் தழும்புகள் ஆகியவை அன்றாடத்தின் ஒரு அங்கம் என்றால் அவற்றை பரபரப்பான கோணத்திலிருந்து அணுகாமல் வேறு எவ்வாறு அணுக முடியும்? கல்வி பற்றிய ஒரு செய்தியில், பால்புதுமையினர் வகுப்புகளை அணுகுவது, பள்ளிக்குச் செல்வது, வீட்டுப்பாடம் முடிப்பது ஆகியவை பற்றிப் பேசலாம், இதை செய்யும்போது அவர்களது அடையாளத்தைப் பாதுகாப்பதும் அவசியமானது.



படம் 1



படம் 2

- *Alt Text* அல்லது மாற்று குறிப்பு என்பது ஒரு படம் எதை சித்தரிக்கிறது என்பதை விவரிப்பதாகும். இது ஒரு முக்கியமான அணுகல்சார்ந்த கருவியாகும். பார்வை சார்ந்த சவால் உடையவர்களும் இதை அணுக உதவுவதே மாற்றுக் குறிப்பின் முக்கியமான நோக்கமாகும். பிரதிநிதித்துவ படங்களில், படத்தில் என்ன இருக்கிறது என்பதை விவரிக்கவும். அந்தப் படத்தில் ஒரு மனிதர் இருந்தால் அவரது அடையாளத்தை மையப்படுத்தாதீர்கள்.

  - எடுத்துக்காட்டாக, படம் 1-ன் மாற்றுக்குறிப்பு இப்படி இருக்கலாம்: "சென்னை வானவில் சுயமரியாதைப் பேரணியில் புகைப்பட ஊடகவியலாளர்கள் பங்கேற்பாளர்களைப் புகைப்படம் எடுக்கிறார்கள், அனைவரின் கையிலும் புகைப்படக்கருவி இருக்கிறது. அவர்கள் நடுவில் இருப்பவரைப் புகைப்படம் எடுக்கிறார்கள்". வெறுமனே "சென்னை வானவில் சுயமரியாதைப் பேரணியில்

பால்புதுமையினரைப் படம் எடுக்கும் புகைப்பட ஊடகவியலாளர்கள்" என்று குறிப்பிடவேண்டாம்.

- ○ படம் 2-க்கான மாற்றுக்குறிப்பில் "சென்னை வானவில் சுயமரியாதைப் பேரணியில் வானவில் கொடி மற்றும் பதாகைகளுடன் நடந்து செல்லும் பங்கேற்பாளர்கள்" என்று இருக்கலாம். "சென்னை வானவில் சுயமரியாதைப் பேரணியில் கலந்துகொண்ட தன்பாலீர்ப்பு கொண்ட பெண்கள், ஆண்கள் மற்றும் திருநர்கள்" என்று குறிப்பிடவேண்டாம். (சரியான பால்புது பதங்களை அறிந்துகொள்ள பெயர் விளக்கப்பட்டியலைப் பார்க்கவும்)

- ஒரு காணொளிக்கான சப்-டைட்டிலை வழங்கும்போது அந்த மொழியில் உள்ள சரியான பதங்களைப் பயன்படுத்தவும். சில பதங்கள் மற்றும் அடையாளங்கள் மரபு ரீதியானவையாக இருக்கலாம், சப்-டைட்டில் செய்யப்படும் மொழியில் அதற்கான பதங்கள் இல்லாமல் இருக்கலாம். இதுபோன்ற சூழலில் காணொளியின் மொழியிலிருந்தே பதங்களை வைத்துக்கொள்ளலாம். ஒரு காணொளிக்கான குரல் பின்னணியைத் தரும்போது பேசுபவரைப் போலவே பேசாமல், கருத்தில் கவனம் செலுத்தவும்.

  - ○ எடுத்துக்காட்டாக, மூலக் காணொளியில் பேசியவருக்கு குரலில் சில சவால்கள் இருந்தால் அதை அப்படியே பின்பற்றவேண்டாம், கருத்தில் கவனம் செலுத்தவும்.



# பால்புது சுயமரியாதை மாத நிகழ்வுகளும், மற்றைய பால்புதுமையினர் நிகழ்வுகளும்

*பால்புதுமையினரின் (LGBTQIA+ நபர்கள்) சுயமரியாதைப் பேரணி, சுயமரியாதை மாதம்/பால்புது வரலாற்று மாதம் போன்ற ஜூன் மாத நிகழ்வுகள் உள்ளிட்ட பால்புதுமையினருக்கான நிகழ்வுகள், பால்புதுமையினரால் நடத்தப்படும் நிகழ்வுகள் ஆகியவை பற்றிய வழிகாட்டுதல்கள் இந்தப் பகுதியில் தரப்பட்டிருக்கின்றன.*

- பால்புதுமையினர் நிகழ்வு என்பது பால்புதுமையினரின் வாழ்க்கை, பிரச்சனைகள், அவர்களது இலக்கியங்கள், திரைப்படங்கள் ஆகியவற்றைப் பற்றிய நிகழ்வாகும். சுயமரியாதை மாதத்தில் (ஜூன்) மட்டும்தான் இவை நடத்தப்பட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பால்புது சுயமரியாதை நிகழ்வுகள் கலாச்சார வெளிகளாகவும் பால்புது சமூகத்தினரை ஒருங்கிணைக்கும் நிகழ்வுகளாகவும் செயல்படுகின்றன. பால்புதுமையினர், பால்புது குழுக்கள், பால்புது உரிமைக்காக செயல்படும் கூட்டமைப்புகள் ஆகியவற்றால் இந்த நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. ஒரு பால்புது நிகழ்வைப் பற்றிய செய்தியை நீங்கள் சேகரிக்கும்போது கீழ்க்கண்டவற்றை கவனத்தில் கொள்ளவும்:
    - நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களிடம் செய்தியாளர்களுக்கான அறிக்கை ஏதாவது இருக்கிறதா என்று கேட்டு பெற்றுக்கொள்ளவும். நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர்கள் யார் மற்றும் நிகழ்வின் இலக்குகள் என்ன என்பது பற்றிய ஒரு தெளிவை இது வழங்கும்.
    - பெரும்பாலான பால்புதுமையினர் நிகழ்வுகளுக்கு ஒரு இலக்கும் பின்னணியும் இருக்கும். அந்த நிகழ்வின் நோக்கத்தைக் குறித்து போதுமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக, இதைப் போன்ற நிகழ்வுகள் முன்னமே நடந்திருக்கிறதா, ஆம் எனில் முந்தைய பேச்சாளர்கள், முந்தைய நிகழ்வுகளின் சாதனைகள், இந்த ஆண்டு நிகழ்வின் மையப்புள்ளி ஆகியவை பற்றிய தகவல்களைக் கேளுங்கள்.

- செய்தியுடன் பயன்படுத்தக்கூடிய படங்களைப் பற்றி ஒருங்கிணைப்பாளர்களிடம் பேசவும். நீங்கள் அந்த நிகழ்வில் புகைப்படங்கள் எடுக்கும்பட்சத்தில், பங்கேற்பாளர்கள் புகைப்படம் எடுப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளனரா எனக்கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அது பொது நிகழ்வாகவே இருந்தாலும், அவர்களது புகைப்படங்களைப் பிரசுரிப்பதன் மூலம் அந்த நிகழ்வில் இருக்கும் பால்புதுமையினரின் அடையாளத்தைக் குடும்பத்தினருக்கோ அவர்களைப் பணியமர்த்தியவர்களுக்கோ வெளிப்படுத்தும் ஆபத்து இருக்கிறது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

- அந்த நிகழ்வின் பால்புது அடையாளங்களை மட்டுமல்லாமல் நிகழ்வின் மையக்கருத்தையும் கவனிக்கவும். எடுத்துக்காட்டாக, அது திரைப்படம் பற்றிய நிகழ்வு என்றால், பால்புதுமையினரின் பார்வையில் திரைப்படங்களை மையப்படுத்தி செய்தியை வழங்கவும்.

- பெரும்பாலான நேரங்களில் பால்புதுமையினருக்கான நிகழ்வுகளே அவர்களுக்கான பாதுகாப்பான வெளிகளாக இருக்கும். ஒருவர் ஊடகத்தில் பேச மறுப்பு தெரிவித்தால் அவர்களது முடிவை மதிக்கவும்.

- **போராட்டத்தைப் பற்றிய செய்திகளை வழங்குதல்:** தங்களது நீதிக்காகவும் திட்டங்கள் அல்லது நீதிமன்ற உத்தரவுகளை எதிர்த்தும் பால்புதுமையினர் அல்லது பால்புதுக் குழுக்கள் ஒருங்கிணைக்கும் ஒரு போராட்டத்தைப் பற்றிய செய்தியை வழங்கும்போது அவர்களது கோரிக்கைகள், கோணங்கள், அவர்களது போராட்டத்துக்குப் பின்னால் இருக்கும் காரணங்களை மையப்படுத்தவும். போராட்டக்காரர்களின் பால்புது அடையாளத்தை மட்டுமே முன்வைப்பதாக செய்திகளை எழுதவேண்டாம்.

  - திட்ட வரைவுகள் அல்லது நீதிமன்ற உத்தரவுக்கு எதிரான போராட்டங்கள் நடக்கும் பட்சத்தில் அந்த திட்ட வரைவுகள் நீதிமன்ற உத்தரவுகளைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். இவை எப்படி, ஏன் பால்புதுமையினரை பாதிக்கும் என்பதை அறிந்துகொள்ள பால்புதுச் சமூகத்தில் இருக்கும் பலதரப்பட்ட மக்களிடமும் பேசவும்.

  - பொது இடங்களில் நடக்கும் போராட்டங்கள் பற்றிய செய்திகளை சேகரிக்கும்போது, பால்புதுமையினரின் தனியுரிமையை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். அவர்களைப் புகைப்படம் எடுப்பதற்கு முன்னால் அவர்களிடம் ஒப்புதல் பெற்றுக்கொள்ளவும் (கூடுதல் தகவல்களுக்கு புகைப்படம் பற்றிய பகுதியை வாசிக்கவும்)

- வானவில் சுயமரியாதைப் பேரணி பற்றிய செய்திகளை சேகரிக்கும்போது, அதற்குப் பின்னால் இருக்கும் காரணத்தைப் புரிந்துகொள்ளவும். பேரணி நடக்கும் இடம் மற்றும் சட்டத்தைப் பொறுத்து, அந்தப் பேரணி ஒரு போராட்டமாகவோ அல்லது கொண்டாட்டமாகவோ அல்லது இரண்டும் சேர்ந்த நிகழ்வாகவோ இருக்கலாம்.

  - ஒரு வானவில் சுயமரியாதைப் பேரணிக்குப் பல ஒருங்கிணைப்பாளர்கள் இருக்கலாம். அவர்களிடம் பேசி அந்த ஆண்டுப் பேரணியின் மையக்கருத்தை அறிந்துகொள்ளவும்.

அவர்களது மேற்கோள்களைக் கொண்ட பத்திரிக்கையாளர்களுக்கான அறிக்கையைப் பெற்றுக்கொள்ளவும்.

- பால்புதுமையினரின் சமூகம் பன்முகத்தன்மை கொண்டது. குறிப்பிட்ட ஒருவருக்கே பல அடையாளங்கள் இருக்கலாம். பலதரப்பட்ட அடையாளங்கள் கொண்ட பால்புதுமையிரனரிடம் பேசி பால்புது சுயமரியாதைப் பேரணியைப் பற்றியும் நிகழ்வுகளைப் பற்றியும் அவர்கள் என்ன நினைக்கிறார்கள், ஏன் பேரணியில் கலந்து கொண்டார்கள் என்று புரிந்துகொள்ளவும்.

- வானவில் சுயமரியாதைப் பேரணியைப் பற்றிய செய்திகள், கருத்துக் கட்டுரைகள் வழங்கும்போது, அதன் கொண்டாட்டத் தன்மையை மட்டுமே முன்னிறுத்துவதைத் தவிர்க்கவும்.

- **பால்புதுமையினரைப் பற்றியோ பால்புதுமையினராலோ நடத்தப்படும் நிகழ்த்துக்கலைகள், விழாக்கள், மரபுசார் நிகழ்வுகள்:** கலை மற்றும் கலாச்சார நிகழ்வுகள் பற்றியச் செய்திகளைத் தரும்போது அவற்றை ஒரு வழக்கமான நிகழ்வாகவே அணுகவும். ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பலதரப்பட்ட பங்கேற்பாளர்களிடம் பேசி நிகழ்வுக்கான காரணத்தைக் கேட்டறியவும்.

  - நிகழ்வில் கலந்து கொள்ளும் எல்லாப் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் ஆகிய அனைவரும் பால்புதுமையினர் என்று நீங்களாகவே யூகிக்கவேண்டாம்.

  - பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோரின் அடையாளங்களைப் பால்புதுமையின அடையாளமாக சுருக்கவேண்டாம். அவர்களது வாழ்வு, தங்களுடைய துறையில் அவர்களது பணி, சாதனைகள் ஆகியவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ளவும்.

- பால்புதுமையினருக்கான விழிப்புணர்வு மற்றும் உணர்திறன் பற்றிய பொது அல்லது தனிப்பட்ட நிகழ்வுகளை செய்தியாக்கும்போது ஒருங்கிணைப்பாளர்களிடம் பேசி நிகழ்வின் நோக்கம் மற்றும் பார்வையாளர்கள் பற்றித் தெரிந்துகொள்ளவும்.

  - மருத்துவம் அல்லது கல்வி போன்ற சமூகப் பிரச்சனைகள் பற்றிய நிகழ்வில் பால்புதுமையினரைத் தவறாகவோ அவதூறாகவோ சித்தரிக்கவேண்டாம். அது ஒரு தனிப்பட்ட நிகழ்வு என்றால், அதை செய்தியாக்குவதில் உள்ள விதிமுறைகள் பற்றி ஒருங்கிணைப்பாளர்களிடம் பேசவும்.

- **வேலைவாய்ப்புச் சந்தைகள்:** பால்புதுமையினர் தங்களது பணியிடங்களில் தொடர்ச்சியாக கடும் பாரபட்சத்தை சந்திக்கின்றனர். ஆனால் பால்புதுமையினருக்கான தனிப்பட்ட வேலைவாய்ப்பு சந்தைகள் நடக்கின்றன என்பதால் அவர்கள் குறைவான தகுதி உடையவர்கள் என்று சொல்லிவிட முடியாது. பல கூட்டமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், மனித வள ஆலோசனை மையங்கள், பெருநிறுவனங்கள் ஆகியவை

பலதரப்பட்ட பணியாளர்களைக் கவர்வதற்காக வேலைவாய்ப்புச் சந்தைகளை நடத்துகின்றன.

- இதுபோன்ற ஒரு நிகழ்வு பற்றிய செய்தியை வழங்கும்போது, வேலை தேடி வந்திருப்பவர்களிடம் பேசி நிகழ்வு மற்றும் பணியடத்தைப் பற்றிய அவர்களது எதிர்பார்ப்பினை அறிந்துகொள்ளுங்கள்.
- பணி வழங்குபவர்களிடம் பேசி சேர்ந்தவர்களிடம் பேசி அவர்களது பணியிடங்கள், திட்டங்கள், கூடுதல் பயன் திட்டங்கள் ஆகியவை பால்புதுமையினருக்கும் உதவுமா என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்
- இதுபோன்ற விழாக்களில் நிறுவனங்களின் எதிர்பார்ப்புகள் என்ன என்பதையும் செய்தியில் குறிப்பிடுங்கள். வேலை தேடும் பால்புதுமையினர் நேரடியாக நிறுவனங்களை அணுகவும் இது உதவும்.
- வேலைவாய்ப்புத் திருவிழாக்கள் நடப்பதற்கு முன்பே அவை குறித்த தகவல்களைத் தருவது முக்கியமானது. இது பல பால்புதுமையினருக்கும் உதவும்.

- மரபுசார் நிகழ்வுகள் மற்றும் திருவிழாக்கள் - மதம் சார்ந்த மற்றும் சமூக நிகழ்வுகளான கூவாகம் திருவிழா, குலசேகரப்பட்டினம் திருவிழா, ஜோகப்பா திருவிழா ஆகியவை இந்த வகைமையில் அடங்கும். இதுபோன்ற பெரும்பாலான நிகழ்வுகளில் திருநர்கள் மற்றும் பாலின அடையாளங்களுடன் ஒத்துப்போகாதவர்களும் பங்கேற்கலாம் என்றாலும் பால்புதுமையினர் அல்லாதவர்களும் இதில் கலந்துகொள்வார்கள்.
  - இதில் பெரும்பாலான திருவிழாக்கள் பால்புது அடையாளங்களை மையப்படுத்தியவை என்றாலும் பால்புது பக்தர்கள் இந்த வெளிகளில் எப்போதும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இதுபோன்ற விழாக்களில் பால்புதுமையினர் சந்திக்கும் தடைகளில் கவனம் செலுத்துங்கள்.
  - விழாக்களில் பங்கேற்கும் பால்புதுமையினரைப் பற்றி எழுதும்போது அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் கவனம் செலுத்த வேண்டாம். அவர்களது தனிநபர் எல்லைகளை மதிக்கவும்.

- **பொது விழாக்களில் பால்புதுமையினருக்கான பிரதிநிதித்துவம்:** பொதுவான சமூக விழாக்களின்போது, பிற விளிம்புநிலை மக்களைப் போலவே பால்புதுமையினரும் சமூகத்தில் ஒரு அங்கம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவும். எடுத்துக்காட்டாக ஒரு திட்டத்துக்கு எதிராக தேசிய அளவில் நடக்கும் போராட்டத்தில் பால்புதுமையினரின் குரலுக்கும் இடம் இருக்கலாம்.
  - இதுபோன்ற நிகழ்வுகளில் பால்புதுமையினர் பங்கேற்கும்போது, அவர்களது அடையாளத்தை முன்னிறுத்தாமல் செயல்பாடுகளை முன்னிறுத்தவும்.
  - கலைஞர்களாகவும் பார்வையாளர்களாகவும் பால்புதுமையினரை சேர்ப்பதற்கு ஒருங்கிணைப்பாளர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பற்றி அவர்களிடம் பேசவும்.



# செய்திகள் மற்றும் தற்போதைய நிகழ்வுகளை வழங்குதல்

*பொதுவான செய்தி வழங்குதல், பால்புதுமையினரின் (LGBTQIA+ நபர்கள்) மேற்கோள்களைக் குறிப்பிடும் செய்திகள், பால்புதுமையினர் மற்றும் அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் செய்தி வழங்கலில் பயன்படுத்த வேண்டிய மொழி மற்றும் பால்புது சமூகங்கள் அவற்றின் பிரச்சினைகள் பற்றி எழுதும்போது கடைபிடிக்க வேண்டிய சிறப்பான செயல்முறைகள் ஆகியவற்றைப் பற்றி இந்த பகுதியில் விளக்கப்பட்டிருக்கிறது.*

- பால்புதுமையினரும் பொதுச்சமூகத்தின் அங்கத்தினரே. ஆகவே பொதுமக்களை பாதிக்கும் எந்த ஒரு விஷயமும் பால்புதுமையினரையும் பாதிக்கும். எனவே பொதுவானச் செய்திகளை வழங்கும்போது இதை மனதில் வைத்துக்கொள்ளவும். ஒரு செய்தி பால்புதுமையினரை எப்படி பாதிக்கும் என்பதை கவனிக்கவும். செய்திகளை வழங்கும்போது பால்புதுமையினரின் கருத்துகளையும் சேர்த்து வெளிப்படுத்தவும்.
    - எடுத்துக்காட்டாக ஒரு நகரத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது எனில், அங்கு வசிக்கும் பால்புதுமையினர் எப்படி பாதிக்கப்படுவார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். வெள்ள மீட்பு முகாம்களில் பால் பேதமற்ற கழிப்பறைகள் இருக்கின்றனவா? நிவாரணத் திட்டங்களின்போது பால்புதுமையினர் ஒதுக்குதலை சந்திக்கிறார்களா? என்பதை கவனிக்க வேண்டும். மீட்புப் பணிகளில் பால்புதுமையினரின் பங்களிப்பு என்ன? தங்களது சமூகத்திற்காக ஆதரவினை அவர்கள் எவ்வாறு ஒருங்கிணைக்கிறார்கள் என்பது போன்ற பால்புதுமையினரின் செயல்பாடுகள் மற்றும் தலைமையை மறந்துவிடவேண்டாம்.
- அரசாங்கத் திட்டங்களால் விளிம்புநிலை மற்றும் சிறுபான்மையின மக்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். பால்புதுமையினர் மற்றும் அவர்கள் சமூகத் தலைவர்களிடம் பேசும்போது அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளைக் கேட்டு புரிந்து கொண்டு அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

- எடுத்துக்காட்டாக, பணமதிப்பிழப்பால் மொத்த நாடுமே பாதிக்கப்படுகிறது. ஆனால் விளிம்புநிலை மக்கள் தனிப்பட்ட முறையில் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள், ஏனென்றால் அவர்களது அடையாளம் காரணமாக நிதி அமைப்புகளை அணுகுவதற்கு அவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. ஆகவே திருநர்கள் இந்த சூழலை எப்படி எதிர்கொள்கிறார்கள் என்று செய்தியாளர்கள் பேசித் தெரிந்து கொள்ளவேண்டும்.

- பால்புதுமையினரின் பிரச்சனைகளைப் பற்றிய செய்திகளை வழங்கும்போது ஆபத்து நிறைந்த வழமையான நம்பிக்கைகளை வளர்த்தெடுக்கக் கூடாது என்பதிலும் பரபரப்புக்காக செய்தியை மிகைப்படுத்தக்கூடாது என்பதிலும் செய்தியாளர்கள் கவனமாக இருக்கவேண்டும். பால்புதுமையினர் சந்திக்கும் சட்டரீதியான மற்றும் சமூகப் பிரச்சனைகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும். செய்தியைத் தருபவர்கள் அல்லது பேட்டி அளிப்பவர்கள் அந்தச் செய்தியால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

  - எடுத்துக்காட்டாக, பால்புது சமூகத்தைச் சார்ந்த ஒரு பிரபலத்தின் இறப்பு குறித்த செய்தியினை எழுதும்போது ஆதாரமற்றத் தகவல்களின் மூலம் மரணத்துக்கான காரணத்தை யூகிப்பதைத் தவிர்க்க வேண்டும். அனைத்து பிரபலங்களுக்கும் பரபரப்பான குற்றங்களுக்கும் இது பொருந்தும் என்றாலும் பால்புதுமையினரே இம்மாதிரியான செய்திகளில் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்பதால் அதனை தவிர்க்க வேண்டும்.

  - எடுத்துக்காட்டு 2: டேட்டிங் செயலி மூலமாக ஒருபாலீர்ப்பு கொண்ட ஆண் ஒருவரிடம் பணம் பறிப்பு, ஏமாற்றுதல் போன்றவை நடந்தால் அவர்களது டேட்டிங் கலாச்சாரம் குறித்தோ டேட்டிங் செயலியில் அவர்கள் பயன்பாடு குறித்தோ அனுமானங்களை உருவாக்காதீர்கள். ஒருவேளை உங்களுக்கு அம்மாதிரியான ஒரு கோணம் தேவைப்பட்டால் டேட்டிங் செயலியை பயன்படுத்தும் பலருடன் உரையாடுங்கள். ஒன்று அல்லது இரண்டு பேரை வைத்து மொத்த சமூகத்தையும் பொதுப்படுத்தாதீர்கள்.

  - பொதுமக்களை பாதிக்கும் ஒரு அரசாங்கத் திட்டத்தை எதிர்த்து பொதுமக்கள் போராடும்போது அதில் பொதுச் சமூகத்தின் அங்கமான பால்புதுமையினரும் கலந்து கொள்வது பொதுவானதே. அவர்கள் அனுமதி இல்லாமல் அவர்களின் பால்புது அடையாளத்தை உங்கள் கட்டுரையில் வெளிப்படுத்தாதீர்கள்.

- பால்புதுமையினருக்கு எதிரான குற்றங்கள் அல்லது ஒதுக்குதல்களைப் பற்றிய செய்திகளை வழங்கும்போது சரியான சொற்களைப் பயன்படுத்தவும். இந்தக் குற்றம் நடந்திருக்கக்கூடாது என்ற தொனியை வெளிப்படுத்தவும். வெறுப்பினால் நடக்கும் இதுபோன்ற குற்றங்களில் இரண்டு தரப்பையும் பேசுவது என்ற நிலைப்பாட்டினை எடுக்கவேண்டாம். கொலை, பாலியல் துன்புறுத்தல் அல்லது கொள்ளையில் இரண்டு தரப்பையும் பேசுவது என்பது முடியாத ஒன்றோ அது போன்றதே பால்புதுமையினருக்கு எதிரான குற்றங்களும்.

- எடுத்துக்காட்டாக, பாலின வெளிப்பாடு காரணமாக ஒரு பால்புது நபர் பொதுவெளியில் தாக்கப்படுகிறார் என்றால் அந்தத் தாக்குதல் ஏன் நடந்தது என்பதற்கான நியாயங்களைப் பிரசுரிக்க வேண்டாம். தாக்குதலை விவரித்துவிட்டு முடிந்தால் பாதிக்கப்பட்டவர்களின் உணர்வுகளைப் பிரசுரிக்கவும். "அந்த நபரின் ஆடை மற்றும் ஒப்பனைகளால் தூண்டப்பட்டு தாக்குதல் நடந்தது" என்று எழுதவேண்டாம். இதுபோன்ற தாக்குதல்களுக்குக் கண்டனம் தெரிவிக்கும் தலைவர்களையும் மேற்கோள் காட்டவும். இந்த நிகழ்வுகள் பால்புதுமையினர் சமூகத்தை எப்படி பாதிக்கும் என்பதையும் சுட்டிக் காட்டவும்.

- செய்திகளில் பால்புது நபர்களை மேற்கோள் காட்டும்போது அவர்களது அடையாளங்கள் மற்றும் அனுபவங்களை மதிக்கவும். அவர்களுக்கான சரியான பெயர்விகுதிகள், பெயர்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தவும். அவர்களது அடையாளங்கள் அசாதாரணமானவை, வழக்கத்துக்கு மாறானவை என்பதாக தொனிக்கும் மொழிப் பயன்பாட்டைத் தவிர்க்கவும்.

    - எடுத்துக்காட்டாக, பால் ஈர்மறைக்கு அப்பாற்பட்ட அடையாளம் கொண்ட ஒரு நிதி நிபுணரைப் பேட்டி எடுக்கும்போது அவர்கள் தரும் பெயர்கள், அடையாள விகுதிகளோடு அவர்களின் நிபுணத்துவத்தின்மீது கவனம் செலுத்தவேண்டும். தேவையில்லாமல் அவர்களது அடையாளத்தின்மீது கவனத்தைக் கொண்டுசெல்ல வேண்டாம்.

- பால்புது சமூகம் ஒருமுகப்பட்டதல்ல என்பதையும் அவர்களது அனுபவங்கள் மற்றும் கோணங்கள் வேறுபடலாம் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளவும். பலதரப்பட்ட வயது, சாதி, வர்க்கம், பாலினம் மற்றும் சமூக பொருளாதாரப் பின்னணியைச் சேர்ந்தவர்களின் குரல்களை செய்தியில் வழங்க முயற்சி செய்யவும்.

    - எடுத்துக்காட்டாக, கல்விக் கொள்கை பற்றிய ஒரு செய்தியில் பால்புதுத் தன்மை மற்றும் சாதியால் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் மாணவர்களையும் மேற்கோள் காட்டவும். கல்வியை முடித்துவிட்ட ஒரு மூத்த பால்புது நபர் அல்லது ஆதிக்க சாதியைச் சேர்ந்த பால்புது நபரின் அனுபவத்தைவிடவும் இவர்களது அனுபவம் வேறுபட்டதாக இருக்கும்.

# நல்வாழ்வு/உடல்நலம் பற்றிய செய்திகள் - குயர் மக்களின் ஆரோக்கியம் பற்றிய ஆபத்தான சொல்லாடல்களைத் மாற்றியமைத்தல்

**அசீஃபா ஃபாத்திமா**

பொதுவான புரிதலிலும் ஜனரஞ்சக ஊடகங்களிலும் ஆரோக்கியம் பற்றிய அச்சம் அல்லது மனநலம் பற்றிய அறம்சார்ந்த பயத்திலிருந்து பால்புது அடையாளங்களைப் பிரித்தெடுப்பது மிகவும் கடினமானது. ஆனாலும் பயத்தைத் தோற்றுவிக்காமலும் க்ளிக்பெய்ட் மூலமாக மக்களைக் கவர்ந்திழுக்காமலும் நியாயமான செய்திகளையும் அக்கறைகளையும் புரிந்துணர்வோடு வழங்குவது அவசியமானது.

சமூகத்தில் வேறு எந்த பிரிவினரையும் போலவே பால்புதுமையினருக்கும் ஆரோக்கியம் தொடர்பான அக்கறைகள் உண்டு. மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களிடம் அவர்கள் கேட்கும் கேள்விகளும் அவர்களின் உரையாடல்களும் பால்புதுமையினராக அவர்களுக்கு இருக்கும் தேவைகளை அடிப்படையாகக் கொண்டவை. பால்புதுமையினர் பற்றி அடையாளங்கள் பற்றிய புரிதலில் பெரும்பாலானவை, குறிப்பாக திருநர்களின் அடையாளங்கள் பற்றிய புரிதல்கள் காலம் கடந்த, தவறானவை என்று நிரூபிக்கப்பட்ட உடல்நல மாதிரிகள் மற்றும் போலி அறிவியலை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்கின்றன. இந்தக் கோணங்கள் எங்கிருந்து வருகின்றன என்று புரிந்துகொண்டு உண்மையான, உணர்வுபூர்வமான செய்திகளை வழங்குவது ஊடகவியலாளரின் கடமையாகும்.

பாலின உறுதி அறுவை சிகிச்சை அல்லது திருநர்களுக்கான மருத்துவ வழிமுறைகள், பால்புதுமையினருக்கான ஹெச்.ஐ.வி/எய்ட்ஸ் சேவை ஆகியவை பற்றிய செய்திகளை வழங்கும்போது பால்புதுமையினருக்கு ஏதுவான மருத்துவ நிபுணர்களின் கருத்துக்களை சேர்ப்பது முக்கியமானது. அப்போதுதான் சமூக ஊடகங்கள் அல்லது பரபரப்பு உருவாக்கக்கூடிய பத்திரிக்கைகளில் பரவக்கூடிய தவறான மற்றும் எதிர்மறையான கோணங்களுக்கு எதிராக ஒரு சரியான புரிதலைத் தர முடியும். மருத்துவத் துறையில் பல பால்புதுமையினர் இருக்கின்றனர். இவர்களால் மேம்பட்ட, நுண்ணுணர்வுடன்கூட

யோசனைகள் மற்றும் தகவல்களைத் தர முடியும். முடிந்தவரையில் இவர்களது குரல்களை முன்னிலைப்படுத்துவது முக்கியமானது.

மனதில் வைத்துக்கொள்ளவேண்டிய கூடுதல் விவரங்கள் இங்கே தரப்பட்டுள்ளன:

## ஹெச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய செய்திகள்

ஹெச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய செய்திகளை வழங்கும்போது இரண்டு முக்கியமான அம்சங்களை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். முதலாவது, 1980களிலிருந்து நாம் பல ஆண்டுகளைக் கடந்து வந்துவிட்டோம். ஹெச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட நபராலும் ஒரு ஆரோக்கியமான வாழ்வை வாழ முடியும்.

2021 இல் அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்துகள் நிர்வாகம் (USFDA), ஹெச்.ஐ.வி பாசிடிவ் உள்ளவர்களுக்காக எம்ட்ரிசிடபின் மற்றும் டெனோஃபோவிர் டிஸோப்ராக்ஸில் ஃப்யூமரேட் ஆகிய மருந்துகளை ஒரு முன்னெச்சரிக்கை மருந்துக் கலவையாக (Pre-Exposure Prophylaxis, PrEP) அங்கீகரித்தது. இது நடந்து நான்கு ஆண்டுகள் கழித்து 2016 ஆம் ஆண்டு இந்திய மருந்துக் கட்டுப்பாட்டாளர் (DCGI) இந்தியாவிலும் இதைப் பயன்படுத்துவதற்காக ஒப்புதல் அளித்தார். ஆண்டிரெட்ரோ வைரல் மருந்துகளைத் தரும்போது ஒருவர் ஹெச்.ஐ.வி.யால் பாதிக்கப்படும் ஆபத்து குறைகிறது. இவற்றைத் தொடர்ந்து எடுத்துக்கொள்ளும்போது ஹெச்.ஐ.வி.யால் அதிகம் பாதிக்கப்பட வாய்ப்பு இருப்பவர்களுக்கு தொற்று ஏற்படும் வாய்ப்பு கணிசமாகக் குறைகிறது. இது வருமுன் காக்கும் ஒரு செயல்பாடு. ஒருவேளை ஒரு நபருக்கு ஹெச்.ஐ.வி தொற்று ஏற்பட்டாலும் ஆண்டிரெட்ரோ வைரல் மருந்துகளை மருத்துவரின் அறிவுரைப்படி எடுத்துக்கொண்டால் வைரஸின் அளவைக் குறைக்கலாம், உடலுறவின்போது தொற்று பரவுவதையும் தடுக்கலாம். ஆகவே நாற்பதாண்டுகளுக்கு முந்தைய காலத்தோடு ஒப்பிடும்போது இந்த நோய்த்தொற்று அத்தனை அச்சமூட்டக்கூடியதாக இல்லை.

ஹெச்.ஐ.வி/எய்ட்ஸ் பணியாளர்கள் பயன்படுத்தும் பதங்கள் பெருமளவில் களங்கம் ஏற்படுத்தக்கூடியவையாக இருக்கின்றன. எங்கெல்லாம் முடிகிறதோ அங்கெல்லாம் பாதிக்கப்பட்ட பால்புதுமையினருடன் நேரடியாகப் பேசி அவர்களுக்கு ஏற்ற பதங்களைப் பயன்படுத்தவும்.

MSM (Men who have sex with men) - ஆண்களுடன் உடல் உறவு வைத்துக்கொள்ளும் ஆண்கள் என்ற பதத்தைப் பயன்படுத்துவதைப் பற்றியும் கவனம் செலுத்தவேண்டும். 1980களில் ஹெச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றை அமெரிக்கா ஆவணப்படுத்தும்போது அது தன்பாலீர்ப்பு ஆண்களுக்குத் தொடர்புடைய நோய் எதிர்ப்புக் குறைபாடு (Gay Related Immune Deficiency - GRID) என்றே அழைக்கப்பட்டது. ஏனென்றால் இது தன்பாலீர்ப்பு கொண்ட ஆண்களை மட்டுமே பாதிக்கும் என்று மருத்துவத் துறையினர் நினைத்தார்கள். பிறகு, பெண்களும் எதிர்பார்லீப்பு கொண்டவர்களும் கூட தொற்றுக்கு ஆளாவார்கள் என்று கண்டறியப்பட்டது. கருவில் இருக்கும் குழந்தைக்கும் இந்த தொற்று பரவும் என்றும் கண்டறியப்பட்டது.

## ஹெச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 2017 (ஹெச்.ஐ.வி/எய்ட்ஸ் சட்டம்)

*இந்த சட்டத்தின்படி ஒருவரது ஹெச்.ஐ.வி தொற்று பற்றிய விவரத்தை அவரது அனுமதி இல்லாமல் மருத்துவப் பணியாளர் உட்பட யாரும் வெளிப்படுத்த முடியாது. ஒரு மருத்துவர் அல்லது ஆலோசகரைத் தவிர வேறு எந்த மருத்துவப் பணியாளரும் சம்பந்தப்பட்டவரின் தொற்று விவரத்தை அவரது இணையரிடம் தெரிவிக்க முடியாது. கீழ்க்கண்ட சில சூழ்நிலைகளில் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.*

- *தொற்று ஏற்பட்டவரிடம் இருந்து இணையருக்கு ஹெச்.ஐ.வி தொற்று பரவும் ஆபத்து இருந்தால்*
- *இணையரிடம் இதைத் தெரிவிக்குமாறு தொற்று ஏற்பட்டவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தால்*
- *தொற்று ஏற்பட்டவர் நிச்சயமாக இணையரிடம் இந்த விவரத்தைத் தெரிவிக்க மாட்டார் என்று மருத்துவப் பணியாளருக்கு உறுதியாகத் தெரிந்தால்*
- *இதைத் தெரிவிக்கப்போகிறோம் என்று தொற்று ஏற்பட்டவரிடம் சொல்லப்பட்டிருந்தால்*

**ஆகவே பத்திரிக்கையாளர்கள் செய்தி வழங்கும்போது ஹெச்.ஐ.வி தொற்று பற்றிய விவரத்தை வெளிப்படுத்துவது குற்றமாகும்.**

“ஆண்களுடன் உடல் உறவு வைத்துக்கொள்ளும் ஆண்கள்” என்ற பதம் 1988 முதலே பயன்படுத்தப்பட்டு வந்தது. MSM என்ற சொல் 1994 இல் தான் புழக்கத்துக்கு வந்தது. ஒருவரது பாலுறவு செயல்பாடுகளிலிருந்து பாலீர்ப்பைப் பிரித்து அறிவதற்காகவே இந்த சுருக்கம் பயன்படுத்தப்படுகிறது என்று மருத்துவத் துறையினர் கூறுகிறார்கள். இந்தப் பதம் கண்ணியக் குறைவாகவும் அவமரியாதையாகவும் இருப்பதாகப் பால்புதுமையினர் நம்புகின்றனர்.

ஹெச்.ஐ.வி தடுப்பு செயல்பாட்டில் இயங்கிவரும் பணியாளர்களும் அதிகாரிகளும் தன்பாலீர்ப்பு கொண்ட ஆண்கள், இருபாலீர்ப்பு கொண்டவர்கள், திருநர்கள் ஆகியவர்களைக் குறிப்பிட MSM என்ற சொல்லை இன்றும் பயன்படுத்துகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு குறிப்பிட்ட பாலுறவில் ஈடுபடுபவர்கள் மட்டுமே பாதிக்கப்படுவார்கள் என்ற, களங்கம் ஏற்படுத்தக்கூடிய ஒரு நம்பிக்கையின் அடிப்படையில்தான் இது வருகிறது. இதுவே பொதுவான கற்பனையாகவும் இருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆகவே ஒரு பால்புதுமையினரின் பாலுறவை மையப்படுத்தி அவர்களுக்கு கண்ணியக் குறைவை ஏற்படுத்தும் அதீத கற்பனையை சரிசெய்வது முக்கியமானது. அவர்களது தேவைகள் என்ன, தங்களது செய்திகளை எப்படி வெளிப்படுத்த விரும்புகிறார்கள் என்பதை மையப்படுத்த வேண்டும்.

ஹெச்.ஐ.வி/எய்ட்ஸ் குறித்த செய்திகளில் சம்பந்தப்பட்டவரின் அடையாளத்தின் முக்கியத்துவத்தையும் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரை ஹெச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்டவரின் அனுமதி இல்லாமல் அவர்களது அடையாளத்தை வெளிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

## மனநலம் சார்ந்த செய்திகள்

மனநலம் சார்ந்த செய்திகளை வழங்கும்போது நம்மில் பலரும் தற்கொலை பற்றிய செய்திகளுக்கான வழிகாட்டுதல்களை நினைத்துக்கொள்கிறோம். ஆனால் பால்புதுமையினர் சந்திக்கும் அமைப்புரீதியான ஒடுக்குமுறைகளால் வரும் விளைவுகளும் மனநலம் சார்ந்த செய்திகளே.

பால்புதுமையினர் தொடர்பான மனநலம் சார்ந்த செய்திகளை வழங்கும்போது இரண்டு முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன: மக்கள் சந்திக்கும் மனநலம் சார்ந்த பிரச்சனைகள், பால்புதுத் தன்மையையே மனநோயாக முத்திரை குத்தி அவர்களை “குணப்படுத்த வேண்டும்” என்று அதிகார மையங்கள் நினைப்பதால் வரும் பிரச்சினைகள்.

செய்திகளை வழங்கும்போதும் தொகுக்கும்போதும் இன்னொரு விதிமுறையையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எல்லா அடையாளங்களுமே சுய நிர்ணயங்களே, இவை எதுவுமே மனநலம் சார்ந்தவை அல்ல. ஒருவரின் பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு, பாலீர்ப்பு ஆகியவற்றை அறிந்துகொள்ள எந்தவிதமான சோதனைகளும் கிடையாது. சம்பந்தப்பட்ட நபர் சொல்லும் அடையாளத்தை எப்போதுமே நம்பவேண்டும், மதிக்கவேண்டும். குழந்தைப் பருவத்தில் நடந்த மனதை பாதிக்கும் ஏதாவது ஒரு நிகழ்வினாலோ பாலியல் துன்புறுத்தலாலோ ஒருவர் தன்பாலீர்ப்பு கொண்டவராக இருக்கிறார் என்றோ, தன்பாலீர்ப்புத் தன்மையை குணப்படுத்திவிட்டதாகவோ நிபுணர்களோ மருத்துவர்களோ மனநல மருத்துவர்களோ சொன்னால் அது உண்மை அல்ல என்று நமக்குத் தெரிய வேண்டும்.

பால்புது தன்மை என்பது “மனதுக்குள் தோன்றும் ஒரு எண்ணம்தான்” என்று சொல்லும் மருத்துவர்களுக்கு ஊடகங்களும் பொதுக் கலாச்சாரத் தளங்களும் இடம் கொடுக்கின்றன. பால்புதுமையினரை தவறாக சித்தரிக்கும் திரைப்படங்கள் மக்களின் பொதுச் சிந்தனையை மாற்றியமைக்கின்றன.

## மனநலம் பற்றிய கையேட்டில் இருந்து பால்புது தன்மையைப் பிரித்தெடுத்தல்

உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation - WHO) மனநோயை இவ்வாறு வரையறுக்கிறது - “மனநோய் என்பது ஒருவரின் அறிவாற்றல், உணர்வுரீதியான கட்டுப்பாடு அல்லது நடத்தையில் மருத்துவம் சார்ந்து முக்கியமான ஒரு சலனம் ஏற்படுவதாகும்”. “உணர்வுகள், சிந்தனை மற்றும் நடத்தையில் ஏற்படும் உடல்நல மாறுபாடுகள்” என்று அமெரிக்க மனநோய் மருத்துவக் கூட்டமைப்பு (American Psychiatric Assiociation - APA) வரையறுக்கிறது.

மனநோய் பற்றிய நோயறிதல் மற்றும் புள்ளியியல் கையேட்டை (Diagnostic and Statistical Manual of Mental Disorders - DSM) அமெரிக்க மனநோய் மருத்துவக் கூட்டமைப்பு வெளியிடுகிறது. உலகமெங்கும் உடல்நலம்சார்ந்த பணியாளர்கள் இந்தக் கையேட்டைப் பயன்படுத்துகிறார்கள். பல்வேறு விவரணைகள், அறிகுறிகள் மற்றும் அம்சங்களை வைத்து DSM கையேடு பல மனநோய்களை வகைப்படுத்தி இனம் காண்கிறது. 1952 ஆம் ஆண்டில் DSM-1 வெளியிடப்பட்டதில் இருந்து தன்பாலீர்ப்பு ஒரு மனநோயாகப் பட்டியலிடப்பட்டிருக்கிறது. தன்பாலீர்ப்பை "சமூகத்துக்கு எதிரான ஒரு ஆளுமைத் தொந்தரவு" என்று DSM-1 கையேடு விவரிக்கிறது. இனப்பெருக்கத்தை நோக்கிச் செல்லாத எந்த ஒரு உடல் உறவும் இயற்கைக்கு எதிரானது என்ற அடிப்படையில் இது உருவானது.

1960கள் தொடங்கி அமெரிக்காவின் மனநோய் மருத்துவக் கூட்டமைப்புக்கு எதிராக பால்புதுமையினர் போராட்டங்களை நடத்தத் தொடங்கினர்கள். இந்த நிலைப்பாட்டுக்கு எதிராக பல கூட்டங்களிலும் மாநாடுகளிலும் பங்கெடுத்தார்கள். 1972 இல் நடந்த ஒரு அமெரிக்காவின் மனநோய் மருத்துவக் கூட்டமைப்பு மாநாட்டில், தன்பாலீர்ப்புடைய மனநல மருத்துவரான ஜான் ஃப்ரையர், பால்புதுமையினர் பிரச்சனைகள் பற்றிய ஒரு கலந்துரையாடலில் முதன்முதலாகக் கொண்டார். அடையாளத்தை மறைப்பதற்காக முகக்கவசம் அணிந்து குரலை மாற்றும் மைக்கில் பேசினார், "பெயரற்ற மருத்துவர் ஹென்றி" என்று தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு தன்பாலீர்ப்பு ஒரு நோயல்ல என்று உறுதியாகத் தெரிவித்தார்.

1973 ஆம் ஆண்டில் தன்பாலீர்ப்பை DSM கையேட்டில் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமா என்று APA கூட்டமைப்பு மாநாட்டு உறுப்பினர்களிடம் வாக்களிப்பு நடத்தியது. 5584 மனநல மருத்துவர்கள் இதை நீக்கவேண்டும் என்று வாக்களித்தனர், 3810 பேர் இதைத் தக்கவைக்கவேண்டும் என்று வாக்களித்தனர். இதன்மூலமாகத்தான் தன்பாலீர்ப்பானது மனநோய் என்ற வகைமையிலிருந்து நீக்கப்பட்டது. ஆனாலும் 1987 வரையில் தன்பாலீர்ப்பு ஒரு பாலீர்ப்பு தொந்தரவாகவே DSM கையேட்டில் குறிப்பிடப்பட்டது.

இது நடந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகே உலக சுகாதார நிறுவனம் தன்பாலீர்ப்பை சர்வதேச நோய்களின் வகைப்பாடு பட்டியலில் (International Classification of Diseases - ICD) இருந்து நீக்கியது. 2019 ஆம் ஆண்டில் திருநராக இருப்பதை மனநோயாக வரையறுப்பதை நிறுத்தியது. ICD-11ல் "பாலின அடையாள சிக்கல்கள்" என்பது "பாலின பொருத்தமின்மை" என்று மாற்றப்பட்டது.

## தற்கொலை பற்றிய செய்திகளை வழங்குதல்

தற்கொலையைத் தடுப்பது இந்தியாவில் ஒரு மிகப்பெரிய பொதுநலப் பிரச்சனையாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் உலக அளவில் 8,00,000 தற்கொலைகள் நடக்கின்றன என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது. உலகளாவிய தற்கொலை மரணங்களில் 36.6% இந்தியாவில் நடக்கின்றன. தற்கொலை என்பது ஒரு சிக்கலான மனநல, கலாசார, சமூக பிரச்சனை. தற்கொலைக்கு எந்த ஒரு குறிப்பிட்ட அம்சத்தையும் நேரடிக் காரணியாக சொல்ல முடியாது. மனநலம் சார்ந்த பிரச்னைகள், பணச்சுமை, வறுமை, வாழ்வில் நடந்த நிகழ்வுகள், சுரண்டல், வேலையின்மை, வேற்றுமை, ஒடுக்குமுறை, உணர்வுசார்ந்த பிரச்னை,

வாழ்வில் நடந்த பிரச்னை, தொடர் உடல்நல பாதிப்பு, ஆதரவற்ற தன்மை, மருத்துவ சேவையை அணுகுவதில் சிக்கல் போன்ற பலவும் தற்கொலைக்கான காரணங்களாக அமைகின்றன.

உலகளாவிய ஆராய்ச்சியின்படி பதின்பருவத்தினர், குறிப்பாக தன்பாலீர்ப்பு கொண்டவர்கள், இருபாலீர்ப்பு கொண்டவர்கள், திருநர்கள் ஆகியோர் அதிக அளவில் தற்கொலைக்குத் தூண்டப்படுகிறார்கள். பள்ளிகளில் சக மாணவர்களின் துன்புறுத்தல் பற்றிய ஆராய்ச்சிகளில், பால்புதுமையினர் மீது அதிகமான களங்கமும் அச்சுறுத்தலும் தனிமைப்படுத்தலும் நடக்கிறது என்பதால் தற்கொலைச் செயல்பாடுகள் இவர்களிடையே அதிகம் என்று தெரிய வந்தது. பத்து நாடுகளில் நடந்த ஆய்வுகளை அலசியபோது எதிர்பாலீர்ப்பு கொண்டவர்களோடு ஒப்பிடும்போது பால்புது பதின்பருவத்தினர் தற்கொலை செய்துகொள்ளும் ஆபத்து அதிகம் என்று தெரிய வந்தது.

இறப்பு ஆவணங்களில் பாலின அடையாளமும் பாலீர்ப்பும் குறிப்பிடப்படுவதில்லை என்பதால் பால்புதுமையினரிடையே நடக்கும் தற்கொலை விகிதங்கள் சரியாகத் தெரிய வருவதில்லை. ஒரு சமூகத்தில் ஒதுக்கப்பட்ட நபராக வாழ்வதால் வரும் மன உளைச்சலே பெரும்பாலான ஆபத்துக்குக் காரணம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தற்கொலைத் தடுப்பில் ஊடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. பொதுக் கோணங்கள், நம்பிக்கைகள், தனிப்பட்ட மனிதர்கள் மற்றும் சமூகத்தின் நம்பிக்கைகள் மீது ஊடகங்கள் பெரும் தாக்கம் செலுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, ஊடகங்களில் தற்கொலையை சரியான முறையில் சித்தரிக்கும்போது அது தற்கொலையைத் தடுப்பதில் மிகவும் செயல்திறன் கொண்ட ஒரு யுத்தியாக அமையும். தற்கொலை சார்ந்த செய்திகளை பொறுப்புணர்வுடனும் சித்தரிக்கும்போது தேவைப்பட்டால் உதவி கேட்கலாம் என்ற எண்ணம் வளரும், தற்கொலைத் தடுப்பு பற்றிய விழிப்புணர்வு அதிகரிக்கும். அதே நேரத்தில் பொறுப்புணர்வு இல்லாத செய்தி வழங்கல் இருக்கும்போது மக்கள் தற்கொலையைப் பின்பற்றவே முயற்சி செய்வார்கள். அப்படிப்பட்ட ஒரு செய்தியில் வழங்கப்பட்டிருக்கும் நபரை, ஒரு பலவீனமான நபர் தன்னோடு பொருத்திக் கொள்வார், அவரைப் போலவே தானும் செய்யவேண்டும் என்று முயற்சி செய்யலாம், இதனால் தற்கொலையால் அவர் இறக்கவும் வாய்ப்பு உண்டு.

தற்கொலைக்கு முயற்சி செய்பவர் அதீத மன உளைச்சலில் இருப்பவராகக் கருதப்படவேண்டும் என்றும், தற்கொலை முயற்சியை ஒரு குற்றமாகக் கருதும் இந்தியக் குற்றவியல் சட்டம் 309 ஆவது பிரிவின்கீழ் அவரை விசாரிக்கக் கூடாது என்றும் 2017 ஆம் ஆண்டின் மனநல சட்டம் தெரிவிக்கிறது. அதீத மன உளைச்சலோடு தற்கொலைக்கு முயற்சி செய்பவருக்கு ஆதரவு, சிகிச்சை, மறுவாழ்வு ஆகியவற்றைத் தந்து தற்கொலை முயற்சிகளைக் குறைப்பது மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் கடமையாகும்.

இந்தியாவில் உள்ள பால்புதுமையினரின் தற்கொலைகள் பற்றிய ஆவணங்களை ஆராய்ந்தபோது, **93.3%** தற்கொலைச் செய்திகளின் தலைப்பில் பாலினமும், **73.3%** செய்திகளில் தற்கொலைக்கான காரணமும், **60.7%** தற்கொலைச் செய்திகளின் தலைப்பில் வாழ்க்கை நிகழ்வுகளும் குறிப்பிடப்பட்டிருந்தது தெரிய வந்தது. பெரும்பாலான செய்திகளில்

அவரது பெயர், வயது, பாலினம், பணி, தற்கொலை நடந்த விதம், தற்கொலை நடந்த இடம், வாழ்க்கை நிகழ்வுகள் ஆகியவையும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ***23%*** செய்திகளில் தற்கொலை எப்படி நடந்தது என்பது விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது, ***20%*** செய்திகளில் தற்கொலை ஒப்பந்தங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ***28.2%*** செய்திகளில் தற்கொலை செய்தவரின் கடிதங்கள் வெளியிடப்பட்டன. ***20%***க்கும் குறைவான செய்திகளிலேயே உதவி செய்யக்கூடிய அம்சங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆங்கில மற்றும் பிற மொழிச் செய்திகளை ஒப்பிடும்போது பிற மொழிச் செய்திகளில் தற்கொலை செய்திகளை வழங்குவதற்கான உலக சுகாதார நிறுவன வழிகாட்டுதல்கள் சரிவர பின்பற்றப்படவில்லை. பிறமொழிச் செய்திகளில் எதுவுமே தற்கொலை பற்றிய தரவுகள், தற்கொலையைத் தடுப்பது, தற்கொலை எண்ணம் உடையவர்களுக்கான ஆதரவு சேவை பற்றிய விவரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடவில்லை.



# உடல்நலம்

*பாலின உறுதிப்பாட்டு சிகிச்சை உட்பட பால்புதுமையினருக்கான (LGBTQIA+ நபர்கள்) மருத்துவசேவை பற்றிய செய்திகள் இந்தப் பகுதியில் விவாதிக்கப்பட்டுள்ளன.*

பால்புதுமையினர் பற்றிய உடல்நல செய்திகளை வழங்கும்போது பெரும்பாலான செய்திகள் பாலின உறுதி அறுவை சிகிச்சையை, குறிப்பாக சரியாக நடத்தப்படாத அறுவை சிகிச்சையை மையப்படுத்தியவையாகவே இருக்கின்றன. அறுவை சிகிச்சைகள் பற்றிய செய்திகளை வழங்கி உரையாடல்களை மேற்கொள்வது முக்கியம் என்றாலும் இங்கு இருக்கும் பொதுவான மருத்துவ சேவைகளை கவனிப்பது, வரையறுக்கப்படும்/அமலாக்கப்படும் கொள்கை முடிவுகளை கவனிப்பது, பால்புதுமையினரின் தேவைகளை முன்னிலைப்படுத்துவது ஆகியவையும் அவசியமானவை. செய்திகளில் சம்பந்தப்பட்டவர்கள் சவுகரியமாக உணரும்படியான மொழியைப் பயன்படுத்துவதும் அவசியம். பால்புதுமையினருக்கான உடல்நலம் பற்றிய செய்திகளை வழங்கும்போதும் தொகுக்கும்போதும் கீழ்க்கண்டவற்றை மனதில் வைத்துக்கொள்ளவும்:

- நீங்கள் பேசுபவரை பாதிக்கப்பட்டவராகவோ அறியாமையில் இருப்பவராகவோ நடத்தாதீர்கள். ஒருவரின் அனுபவம் முக்கியமானது என்பதை பத்திரிக்கையாளர்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்குப் பால்புது உடல்களுக்கு சிகிச்சை அளிப்பதில் போதுமான அனுபவமோ நிபுணத்துவமோ இருப்பதில்லை என்பதால் பல பால்புதுமையினர் தங்களது உடல்நலப் பிரச்சனைகளைப் பற்றி பல தகவல்களை சேகரிப்பதிலேயே பெரும்பாலான தங்கள் நேரத்தையும் சக்தியையும் செலவிடுகின்றனர்.

- பால்புதுமையினரின் உடல்நலப் பிரச்சனைகள் மற்றும் மருத்துவ சேவைகளை அவர்களால் அணுக முடிகிறதா என்பதைப் பற்றி எழுதும்போது முன்பே தெரியாத பல தகவல்களைப் பத்திரிக்கையாளர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஒரு செய்தியை எப்படி எழுதுவது என்பது பற்றி உங்களுக்குக் கேள்விகள் இருக்கலாம். இதுபோன்ற சூழ்நிலையில் கொஞ்சம் நிதானித்து நேரம் எடுத்து நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட நபர்களிடமும் நிபுணர்களிடமும் பேசி தெளிவு பெற

வேண்டும். யாருடைய தனியுரிமையிலும் குறுக்கிடாமல் மரியாதையாகக் கேள்வி கேட்பதும் முக்கியமானது.

- நீங்கள் கேட்கும் கேள்விகள் செய்திக்குத் தொடர்புடையவையாக இருக்கவேண்டும். பால்புதுமையினரின் உடல் அல்லது அவர்களின் தனிப்பட்ட உறவுகள் குறித்த பொது மக்களின் ஆர்வத்தை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்கக்கூடாது. நீங்கள் எப்படிப்பட்ட கேள்விகளை எதிர்கொள்ள விரும்ப மாட்டீர்களோ அந்தக் கேள்விகளைக் கேட்க வேண்டாம்.

- எடுத்துக்காட்டாக, சம்பந்தப்பட்டவரிடம் அவர்களது பிறப்பு உறுப்புகளைப் பற்றிக் கேட்கவேண்டாம். ஒரு 'சிஸ்' பாலின பெண்ணிடம் ஒரு குறிப்பிட்ட கேள்வியை கேட்பது தவறு என்றால், பால்புதுமையினரிடம் அதைக் கேட்பதும் தவறானது. உணர்வுகளைப் புண்படுத்தக்கூடியது.

- உங்களது எல்லைகளைப் பற்றிய விழிப்புணர்வோடு இருங்கள். எதைப் பற்றி எல்லாம் அவர்கள் பேச விரும்பவில்லை என்பதையும், அந்த எல்லைகளை மதிக்கவும் கற்றுக்கொள்ளுங்கள். அவர் பேசுவதை நிறுத்தும்போதோ பேச விரும்பவில்லை என்ற அறிகுறி தெரியும்போதோ மேற்கொண்டு வற்புறுத்த வேண்டாம். அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் நபர் உரையாடலை முன்னெடுத்துச் செல்லட்டும்.

  - எடுத்துக்காட்டாக, தவறாகிவிட்ட ஒரு அறுவைசிகிச்சை அல்லது மோசமான மருத்துவசேவை அனுபவத்தைப் பற்றி ஒரு திருநரிடம் பேசும்போது அவர்களே உரையாடலை முன்னெடுக்கும்படி கேள்விகளைக் கேட்கவும். அறுவை சிகிச்சை முடிந்தபிறகு ஏற்பட்ட சிக்கல்களைப் பற்றி அவர் பேச விரும்பவில்லை என்றால் வற்புறுத்தாதீர்கள். என்ன பேசவேண்டும், எதைப் பேச வேண்டும் என்பதை சம்பந்தப்பட்டவரே தீர்மானிக்கட்டும்.

- அவர்களது தனிப்பட்ட விவரங்களைப் பற்றி எழுதும்போது அவர்களிடமிருந்து ஒப்புதல் பெறவும்

  - எடுத்துக்காட்டாக, பத்திரிக்கையாளர் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக ஒருவர் மிகவும் தனிப்பட்ட ஒரு மருத்துவ சோதனை அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளலாம். ஆனால் அவ்வளவு விவரங்களோடு அது பிரசுரிக்கப்படுவதை அவர் விரும்பாதவராக இருக்கலாம். நீங்கள் என்ன எழுதப்போகிறீர்கள் என்பதை சம்பந்தப்பட்டவரிடம் பேசி உறுதிப்படுத்திக்கொண்டபின்பே பிரசுரம் செய்யவும்.

- ஒரு உடல்நலம் சார்ந்த பிரச்சனை பற்றி எழுதும்போது சம்பந்தப்பட்டவரின் உடல் அல்லது பிறப்புறுப்புகளின் படங்களைப் பிரசுரிப்பதைத் தவிர்க்கவும் (கூடுதல் விவரங்களுக்கு "புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள்" பகுதியைப் பார்க்கவும்).

- மருத்துவப் பிரச்சனைகள் அல்லது வன்முறை பற்றி எழுதும்போது சம்பந்தப்பட்டவருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சரியான தகவல்களை சேர்த்து சமநிலையுடன் எழுதவும். கூடிய வரையில் பாதிக்கப்பட்டவரின் உணர்வுகளைத் தூண்டாதபடி விவரங்களைக்

கேட்கவும். உங்களிடம் பேசும்போது சொற்களை உருவாக்கிக்கொள்ள போதுமான நேர அவகாசம் மற்றும் வெளியைத் தரவும். மருத்துவ சிகிச்சைகள், அறுவை சிகிச்சை அல்லது மருத்துவப் பிரச்சனைகள் பற்றிய விவரங்கள் செய்திக்குக் கூடுதல் தகவலைத் தராதபட்சத்தில், செய்திகளைப் பகிருமாறு அவர்களை வற்புறுத்த வேண்டாம்.

- ஒருவரது பாலினத்தைத் தவறாகக் குறிப்பிடவேண்டாம். இது எல்லா இடத்துக்கும் பொருந்தும் என்றாலும் மருத்துவம் அல்லது உடல்நலம் பற்றிய செய்திகளை எழுதும்போது இதை நினைவில் வைத்துக்கொண்டு செயல்படுத்துவது முக்கியமானது.
    - எடுத்துக்காட்டாக, ஒரு திருநம்பி பாலின உறுதிபாட்டு அறுவைசிகிச்சையை மேற்கொள்ளும்போது, "அந்தப் பெண் திருநம்பியாக மாறுவதற்காக அறுவை சிகிச்சையை மேற்கொள்கிறார்" என்று எழுதாதீர்கள்.

      **குறிப்பு:** சிகிச்சை அல்லது அறுவைசிகிச்சையை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்களா இல்லையா, எத்தனை சிகிச்சைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் தாண்டி, சம்பந்தப்பட்டவர்கள் தங்களைத் திருநர்களாகக் குறிப்பிடும்போது அதையே பின்பற்றவும். நால்ஸா Vs இந்திய அரசு வழக்கில் 2014 ஆம் ஆண்டு தரப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் தங்களது பாலினத்தை சுயமாக அடையாளப்படுத்துவதில் ஒரு நபருக்கு உரிமை உண்டு என்று அறிவித்தது. "இந்த நபர் விரைவிலேயே திருநங்கையாக/திருநம்பியாக மாறிவிடுவார்" என்று எழுத வேண்டாம்.
    - பாலின உறுதிபாட்டு அறுவைசிகிச்சை என்பது ஒரு மருத்துவசிகிச்சை மட்டுமே என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவும். உடல்நலம் பற்றிய செய்திகளை வழங்கும்போது அதில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டாம்.
    - ஒருவரது அடையாள விகுதியை மேற்கோள் குறிக்குள் எழுதவேண்டாம். எடுத்துக்காட்டாக, "உயிரியல்ரீதியாகப் பெண்ணாக இருக்கும் இவர் திருநம்பியாக மாற சிகிச்சை மேற்கொண்டார். "அவர்" கருவுற்றதால் "அவரது" சிகிச்சை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது" என்று எழுதவேண்டாம்.
- உடல்நல பிரச்சனைகள் பற்றி எழுதும்போது, குறிப்பாக தேவையற்ற/தவறான அறுவை சிகிச்சைகள், மருத்துவ சிகிச்சையால் ஏற்பட்ட இறப்புகள் பற்றி எழுதும்போது மருத்துவர்களிடம் மட்டும் பேசாமல் சமூகத்தினர், குடும்பத்தினர், நண்பர்களிடம் கூடியவரையில் பேசுவது முக்கியம். முடியுமானால் பால்புதுமையினராக இருக்கும் மருத்துவர்களிடம் பேசி அவர்களது கருத்துக்களைக் கேட்கவும். ஒரு உடல்நல பிரச்சனையை மருத்துவர்களால் இன்னும் மேம்பட்ட முறையில் விளக்க முடியும் என்றாலும் வாழ்ந்த அனுபவம் உடைய சமூகத்தினருக்கே என்ன நடந்தது என்பது தெரியும், மருத்துவ குறுக்கீட்டுக்கு முன்பாக ஒருவரது உலகம் எப்படி இருந்தது என்பதை அவரால் தெரிவிக்க முடியும்.
- பால்புதுமையினர் பற்றிப் பேசுவதற்கான நிபுணர்களைத் தேர்ந்தெடுக்கும்போது நம்பிக்கைக்குரிய வல்லுநர்கள் யார் என்பதை அந்த சமூகத்தினரிடம் கேட்கவும். எந்த மருத்துவப் பணியாளரும் தன்னை ஒரு வல்லுநர் என்று அறிவித்துக் கொள்ளலாம்,

வல்லுநராகவே இருக்கலாம். ஆனால் அவர்கள் சமூகத்தினருடன் இணையாமல் இருப்பதற்கான வாய்ப்புகளும் உண்டு. ஆகவே களத்தில் இயங்கும் நிபுணர்களைக் கண்டறியவும். இதற்காக சமூக உறுப்பினர்களிடம் பேசவும்.

- எடுத்துக்காட்டாக, தனது சமூகத்தினரிடையே வல்லுநராகக் கருதப்படும் தன்பாலீர்ப்பு கொண்ட ஒரு ஆண், திருநர் சமூகத்தைப் பற்றிய பிரச்சனைக்குரிய கருத்துக்களை வைத்திருக்கலாம்.

- இன்னொரு எடுத்துக்காட்டு: நீங்கள் மருத்துவர்களிடம் பேசும்போது கடைபிடிக்கப்பட வேண்டியது. பாலின உறுதிபாட்டு அறுவை சிகிச்சையில் தான் ஒரு நிபுணர் என்று ஒரு மருத்துவர் அறிவித்துக் கொள்ளலாம், ஆனால் சமூகத்தினர் அந்த மருத்துவரை அணுகுவதைப் பல காரணங்களால் விரும்பாமல் இருக்கலாம். ஆகவே நிபுணத்துவத்தோடு சமூகத்தினருடன் இணைப்பில் இருப்பதும் அவசியம்.

- ஹெச்.ஐ.வி, குரங்கம்மை போன்ற உடலுறவால் பரவக்கூடிய நோய்களைப் பற்றி எழுதும்போது பால்புதுமையினருக்குக் களங்கம் விளைவிப்பதைத் தவிர்க்கவும். ஹெச்.ஐ.வி பற்றிய பெரும்பாலான மருத்துவ வரலாற்றுக் குறிப்புகள் பால்புதுமையினரைக் குற்றம் சொல்கின்றன. இவை பால்புதுமையினரைக் களங்கப்படுத்தும் நோக்கத்தோடு இருப்பவை என்பதால் ஹெச்.ஐ.வி பற்றிப் பேசும்போது கவனமாக இருக்கவும்.

- பால்புது சமூகத்தினர் பயன்படுத்தும் மொழியையே பின்பற்றவும், தனிப்பட்ட நபர்களை மருத்துவரீதியாகவே அணுகுவதைத் தவிர்க்கவும். இங்கும்கூட, பயன்படுத்தப்படும் பல சொற்கள் ஹெச்.ஐ.வி/எய்ட்ஸ் வரலாற்றிலிருந்து வருபவையே (இதுபற்றிய கூடுதல் தகவல்களுக்கு "நல்வாழ்வு/உடல்நலம் பற்றிய செய்திகள் - குயர் மக்களின் ஆரோக்கியம் பற்றிய ஆபத்தான சொல்லாடல்களைத் மாற்றியமைப்பது" பகுதியை வாசிக்கவும்).



# மனநலம் மற்றும் தற்கொலை

*இந்தப் பகுதியில் மனநலம் சார்ந்த பிரச்சனைகள், மனநோய்கள், தற்கொலை, பாலின உறுதி சிகிச்சைகளோடு ஊடுபால் நபர்கள் மற்றும் திருநர்களின் மனநலத் தேவைகள் விவாதிக்கப் பட்டிருக்கின்றன.*

- தற்கொலைகள் பற்றிய செய்திகளை வழங்கும்போது ஒரு குறிப்பிட்ட காரணத்தோடு அதை சுருக்கிவிட வேண்டாம். அதை விரிவாக அணுகி பால்புதுமையினரை சமூக அமைப்பு எப்படி அணுகுகிறது, காலங்காலமாக அவர்களுக்கு எத்தகைய மன உளைச்சலை வழங்குகிறது என்பதை கவனியுங்கள். பெரும்பாலான தற்கொலைகள் ஒரு காரணத்தால் மட்டுமே நிகழ்வதில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை என்பதால் ஒருவரது முடிவுக்குப் பின்னால் இருக்கும் பலதரப்பட்ட காரணங்களைப் பத்திரிக்கையாளர்கள் கவனிக்கவேண்டும். சமூக அமைப்புகளில் என்ன மாற்றங்கள் நிகழ வேண்டும், பால்புதுமையினர் மீது செலுத்தப்படும் அழுத்தங்களை எவ்வாறு தடுக்கலாம் என்பதுபோன்ற கேள்விகளைக் கேட்கவேண்டும்.
    - எடுத்துக்காட்டாக, “காதலனால் ஏமாற்றப்பட்டதால் திருநங்கை தற்கொலை செய்துகொண்டார்” என்றோ, “இணையர்/குடும்பத்தினருடன் ஏற்பட்ட சண்டையால் பால்புதுமையினர் மரணம்” என்றோ எழுதவேண்டாம். இறப்புக்கு முன்னால் அவர்கள் வாழ்வில் நடந்த ஒரே ஒரு நிகழ்வைத் தற்கொலைக்கான காரணமாக இது சுருக்குகிறது. தற்கொலை முடிவை எடுக்க அந்த நிகழ்வு ஒரு இறுதி உந்துதலாக இருந்திருக்கலாம் என்றாகும் தற்கொலைக்கு வேறு பல காரணங்களும் இருந்திருக்கலாம் - ஒதுக்குதல், ஆதரவளிக்காத குடும்பம், துன்புறுத்தல் போன்ற பல காரணங்கள் அவர்களது மனதில் உளைச்சலை அதிகப்படுத்தலாம்.
- மருத்துவர்கள், மருத்துவத் துறையில் இருப்பவர்கள் பால்புதுத் தன்மையைத் தவறாகப் புரிந்துகொண்டதாலும் வரலாற்று ரீதியாகத் தவறான வரையறைகளைத் தந்ததாலும் பால்புதுத்தன்மைக்கும் மனநோய்க்கும் இடையே ஒரு தெளிவின்மை நிலவுகிறது. இந்த அடிப்படையில்தான் பால்புதுமையினரின் பாலீர்ப்பை மாற்றுவதற்கானப் போலி மருத்துவம் வழங்கப்படுகிறது. இந்த போலி மருத்துவம் ஆபத்தான, அறியாமை

நிறைந்த ஒரு செயல்பாடாகும். வழிபாடு, பேய் ஓட்டுதல் போன்ற செயல்கள், வன்முறை, ஒருவரது அடிப்படைத் தேவைகளை நிராகரிப்பது, பாலியல் வன்முறை உட்பட பல செயல்பாடுகள் மூலம் பால்புதுத் தன்மையை மாற்றுவதற்கான போலி சிகிச்சை முறைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

போலி சிகிச்சைப் பற்றிய செய்திகளை வழங்கும்போது பல ஆண்டுகளாக பால்புதுமையினரின் உடல் மற்றும் மனம் மருத்துவரீதியாக எவ்வாறு அணுகப்படுகிறது என்ற வரலாற்றைப் புரிந்துகொள்வது அவசியம். ஒருவரது பால்புதுத் தன்மையை "குணப்படுத்தும்" நோக்கத்தோடு போலிமருத்துவம் முன்னெடுக்கப்பட்டாலும் இது சம்பந்தப்பட்டவருக்கு அதீதமான உணர்வுரீதியான, மன உளைச்சலை ஏற்படுத்துகிறது. ஆகவே ஒருவரது வாழ்வில் நடந்திருக்கும் இதுபோன்ற நிகழ்வுகளைப் பற்றி எழுதும்போது எச்சரிக்கையாகவும் உணர்வுரீதியாகவும் அதை அணுகுவது அவசியம்.

- ○ எடுத்துக்காட்டாக, "இந்த பால்புது நபர் குணப்படுத்துவதற்காக மருத்துவரிடம் அழைத்துச் செல்லப்பட்டார்" என்று ஒருபோதும் எழுதக்கூடாது. இது அந்த போலி சிகிச்சைக்கு உடன்பாடான ஒரு வாக்கியமாகும். "இந்த பால்புது நபரை "குணப்படுத்துவதாகக்" கூறி மருத்துவரிடம் அழைத்துச் சென்றனர் என்று எழுதவும்.

- பால்புதுமையினரிடம் மனநல பாதிப்புகள் அதிகமாக ஏற்படுவது பற்றியத் தரவுகளை கவனிக்கும்போது ஒரு தனிப்பட்ட காரணம் மட்டுமே மனநலச் சிக்கலை ஏற்படுத்தாது என்பதைப் புரிந்துகொள்ளவும். தலைமுறை தலைமுறையாக இருக்கும் காயங்கள், சமூகத்தின் களங்கம் நிறைந்த பார்வை, அவர்களது அடையாளத்தை அழிக்கும் முயற்சிகள், சமூகம் பால்புதுமையினர் மீது செலுத்தும் வன்முறை, வேறு சில பிரச்சனைகள் போன்ற பலதரப்பட்ட காரணங்கள் இருக்கலாம். ஆகவே மனநல அமைப்புகள் மற்றும் பால்புதுமையினருக்குக் கிடைக்கும் மருத்துவ சேவைகளை கவனிக்கும்போது மனநல பாதிப்புகளை ஏற்படுத்தும் பிற காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றை எப்படிக் குறைப்பது என்பதையும் கவனிக்கவேண்டும், அதுவும் முக்கியமானது.

- செய்தியை வழங்கும்போது மனநலம் சார்ந்த வல்லுநர் அல்லது மருத்துவரிடம் பேசும்போது இரண்டு விஷயங்களை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டியது அவசியம். முதலாவதாக, அவர்களிடம் சிகிச்சைக்கு வருபவர்களைப் பற்றிய தகவல்களை மருத்துவர்கள் சட்டரீதியாக வெளிப்படுத்தக்கூடாது. ஆகவே சில தகவல்கள் கிடைக்கவில்லை என்றால் அவை பாதுகாக்கப்பட்டவை என்பதைப் புரிந்து கொள்ளவும், உங்களது செய்தி அறிக்கைக்கு அந்தத் தகவல் தேவையா என்று யோசிக்கலாம். இரண்டாவதாக, அவர்கள் தரும் எந்த ஒரு தகவலும் சம்பந்தப்பட்டவரின் ஒப்புதலுடனே எழுதப்படவேண்டும். ஏதோ காரணத்தால் ஒப்புதல் கிடைக்காதபோது அந்தத் தகவலை எழுதவேண்டாம்.

## தற்கொலை பற்றிய செய்திகள்

- தற்கொலை பற்றி எழுதும்போது அதைத் தடுக்கும் நோக்கத்தை முக்கியமாகக்கொண்டு கட்டுரையை எழுதவும்.

- பால்புதுமையினர் உட்பட எந்த ஒரு நபரின் தற்கொலை செய்தியையும் பரபரப்பின்றி எழுதவும்.

- தற்கொலையைப் பரபரப்பாக்குவது, இயல்பாக்குவது, எளிமையாக்குவது போன்ற மொழியைப் பயன்படுத்த வேண்டாம்.

- "தற்கொலை செய்தார்" என தற்கொலையைக் குற்றமாக அணுகும் சொற்களைப் பயன்படுத்த வேண்டாம். அன்புக்குரியவரை இழந்தவர்கள் இதனால் வேதனை அடையலாம், பின்விளைவுகளை சந்திக்கலாம். உதவி தேவைப்படுகிறவர்கள் அதற்கானவர்களை அணுகாமல் இது தடுக்கலாம். "தற்கொலையால் இறந்தார்" அல்லது "தங்கள் உயிரை எடுத்துக்கொண்டார்" என்பது போன்ற பதங்களைப் பயன்படுத்தவும்.

- ஒரு செய்தி மக்களை எப்படி நேர்மறையாகவோ எதிர்மறையாகவோ பாதிக்கும் என்பதை கவனித்து அதைவைத்து ஒரு செய்தியின் தகுதியைத் தீர்மானிக்கவும்.

- நீங்கள் வழங்கும் தற்கொலைச் செய்திகளால் தனிப்பட்ட நபர்கள், தற்கொலை முயற்சி செய்தவர்கள், அவர்களது குடும்பத்தினர், நண்பர்கள், தற்கொலை செய்துகொண்டவர்களின் சமூகத்தைச் சேர்ந்த பால்புதுமையினர் ஆகியோருக்கு ஏதாவது தாக்கம் ஏற்பட வாய்ப்பிருக்கிறதா என்பதை கருத்தில் கொள்ளவும்.

- தற்கொலைக்கு முயன்றவர்கள் அல்லது தற்கொலை செய்துகொண்டவர்களின் பெயர், புகைப்படம், தற்கொலைக் குறிப்பு, உரையாடல்கள், பாலீர்ப்பு, பாலின அடையாளம் போன்ற எந்த விவரங்களையும் தற்கொலைக்கு முயன்றவர் அல்லது இறந்தவரின் குடும்பம்/நண்பர்களின் ஒப்புதல் இன்றி வெளியிட வேண்டாம். குடும்பம் என்பது அவர்கள் பிறந்த குடும்பமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் தேர்ந்தெடுத்த குடும்பமாகவும் இருக்கலாம்.

- தற்கொலை எண்ணத்திலிருந்து வெளிவர உதவிய செய்திகளுக்கு அதிக கவனம் தரவும். இது நம்பிக்கையையும் உதவி பெறவேண்டும் என்ற உத்வேகத்தையும் அளிக்கும்.

- தற்கொலைத் தொடர்பான செய்திகளில், ஆபத்தில் இருப்பவர்கள், தற்கொலை எண்ணம் கொண்டவர்கள் அணுகவேண்டிய தொலைபேசி எண்கள், விவரங்கள் ஆகியவற்றைத் தருவது முக்கியமானது. இது செய்தியின் தொடக்கத்திலோ முடிவிலோ கவனிக்கத்தக்க வகையில் இடம்பெற்றிருக்க வேண்டும். தற்கொலைத் தடுப்பு மையங்கள், மருத்துவமனைகளில் உள்ள அவசர சிகிச்சை துறைகள், ஆபத்துக்கான 24/7 சேவை எண்கள், சுய உதவிக் குழுக்கள், மனநலம் சார்ந்த வல்லுநர்கள், மறுவாழ்வு மையங்கள் போன்ற சேவைகள் இதில் அடங்கும்.

- பால்புதுமையினரின் தற்கொலையால் துக்கத்துக்கு உள்ளாகியிருக்கும் நண்பர்கள், அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட குடும்பத்தினர் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரும் சுயவதை/தற்கொலைக்கு முயற்சி செய்ய வாய்ப்பு உண்டு, குறிப்பாக துக்கம் இருக்கும் காலத்தில் இது நடக்கும். இவர்களை உணர்வுசார்ந்தும் எச்சரிக்கையுடனும்

அணுகிப் பேசவேண்டும், அவர்களால் பேச முடியவில்லை என்றால் பேட்டியைத் தள்ளிப் போடமுடியுமா என்று யோசிக்கவும்.

- ஒரு பிரபலமான பால்புது நபரின் தற்கொலையை ரொமாண்டிசைஸ் செய்யவோ புனிதப்படுத்தவோ செய்யவேண்டாம். ஏற்கனவே பலவீனமாக இருப்பவர்கள் தற்கொலைக்கு முயற்சி செய்வதை இது ஊக்குவிக்கும்.
- தற்கொலை நடந்த விதம், இடம் போன்ற துல்லியமான விவரங்களையோ தற்கொலைக் கடிதத்தையோ வெளியிட வேண்டாம். ஒருவரது தற்கொலைக்கு எளிமைப்படுத்தப்பட்ட காரணங்களையோ விளக்கங்களையோ அளிப்பது தவறானது.



# குற்றம் மற்றும் பால்புதுமையினர்

*பால்புதுமையினருக்கு (LGBTQIA+ நபர்கள்) எதிராக நடைபெறும் குற்றங்கள், பால்புதுமையினர் செய்யும் குற்றங்கள் பற்றிய செய்திகளை எவ்வாறு எழுதுவது என இந்தப் பகுதியில் விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.*

- **குற்றம் பற்றிய செய்திகளை எழுதும்போது மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய முதல் விஷயம்:** குற்ற நிகழ்வைப் பற்றிய முதன்மைத் தகவலாளர்களான காவல் துறையினரும் பொதுச்சமூகத்தின் அங்கத்தினர் என்பதால் பிறருக்கு உள்ள அதே முன்முடிவுகள், பாரபட்சங்கள் மற்றும் அறியாமை அவர்களுக்கும் இருக்கும். ஆனால் அவர்கள் அதிகாரமிக்க இடங்களில் இருப்பதால், அவர்களது பாரபட்சம் கூடுதல் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. குறிப்பாக விளிம்புநிலை சமூகங்களில் மிக அதிக தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- குற்றம்சார்ந்த செய்திகளை எழுதும்போது, ஒரு பால்புதுமையின நபரை பாதிக்கப்பட்டவராகவோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவராகவோ நீங்கள் எதிர்கொள்ள நேரிடும். பால்புதுமையினர் பாதிக்கப்பட்ட நபராக இருக்கும்போது கடைபிடிக்க வேண்டியவை:
  - அவர் விளிம்புநிலையில் இருப்பது வன்முறைக்கு உள்ளாகும் சாத்தியக் கூறுகளை அதிகப்படுத்தியிருக்கலாமா என்று யோசித்துப் பாருங்கள்.
  - சட்டம் வேறுவிதமாக அணுகினாலும் பாதிக்கப்பட்டவர் பால்புதுமையினராக இருப்பதாலேயே வன்புணர்வை அங்கீகரிக்காமல் இருக்க முடியாது.
  - செய்தியை பாதிக்கப்பட்டவரின் அடையாளம் அந்த நிகழ்வுக்கு முக்கியமாக இருந்தால் மட்டுமே அதை மையப்படுத்துங்கள். இல்லையெனில் குற்ற நிகழ்வை மையப்படுத்துங்கள்.
  - ஒருவேளை பால்புது அடையாளத்தின் மீது இருக்கும் வெறுப்பின் காரணமாக வன்முறை நிகழ்த்தப்பட்டிருந்தால், அதிகாரிகளும் காவல்துறையினரும் நடவடிக்கை எடுப்பதில் எவ்வளவு முனைப்பாக இருக்கிறார்கள் என்பதை கவனியுங்கள்.

- முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் செய்தியை வழங்கும்போது அறிக்கையில் ஒருவரின் வழங்கப்பட்ட பெயரோ தவறான பாலினமோ குறிப்பிடப்பட்டிருக்கலாம். பாதிக்கப்பட்டவர் தன்னை எப்படி அடையாளப்படுத்திக் கொள்ள விரும்புகிறார் என்பதைக் கேட்டு குறிப்பிடவும். பாதிக்கப்பட்டவர் இறந்திருந்தால் அவர் வாழும்போது எந்த அடையாளத்தை விரும்பினார் என்பதைக் குறிப்பிடவும்.

- எடுத்துக்காட்டு: ஒரு திருநங்கையின் தாய் அவரது கைகால்களை உடைக்க ஏற்பாடு செய்திருந்ததாகவும் அது அவரது இறப்புக்குக் காரணமாகிவிட்டது என்றும் சமீபத்தில் குற்றம் சாட்டப்பட்டது. காவல்துறையினரின் அறிக்கையில் அவருக்கு பிறப்பின்போது வழங்கப்பட்ட பெயர், வழங்கப்பட்ட பாலின அடையாளம் ஆகியவை குறிப்பிடப்பட்டிருந்தன. பாதிக்கப்பட்டவரின் அடையாளம் அவர்மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைக்குக் காரணமாக இருந்தது தெளிவு. அந்த நிகழ்வைச் செய்தியாக்கும்போது தனக்காக அவர் தேர்ந்தெடுத்த பெயரையும் பெண்ணாக இருந்த அவரது பாலின அடையாளத்தையும் குறிப்பிடவும். “தனது மகன் ஒரு பெண்ணாக மாறியதால் வருத்தமுற்றத் தாய் குற்றம் செய்ததாகக் கூறப்படுகிறது” என்று எழுதுவதற்கு பதிலாக, “குற்றம் சாட்டப்பட்டவர் தனது பிள்ளையின் பாலின அடையாளத்தால் குற்றம் செய்தார்” என்று எழுதலாம்.

- பால்புது நபர் ஒருவருக்கு அவரது அடையாளம் காரணமாக மிரட்டல் இருந்தால், அந்தக் குற்றத்தைப் பற்றிய செய்தியில் அவரது விவரங்களை வெளிப்படுத்தி அவருக்கு இருக்கும் அச்சுறுத்தலை இன்னமும் அதிகமாக்காமல் இருப்பது முக்கியம். புகார் அளித்தவரின் அடையாளத்தைப் பாதுகாத்தபடியே பிற தகவல்கள் மூலம் செய்திக்கான உண்மைத்தன்மையைக் கொண்டு வரலாம்.

- சில நேரங்களில் பால்புதுமையினர் காவல்துறையினராலோ குடும்ப உறுப்பினர்களாலோ துன்புறுத்தலுக்கு உள்ளாகலாம். அந்த சூழலில் உங்களது செய்தி அவருக்கு பாதிப்பை ஏற்படுத்துமா அல்லது அவர்களுக்கு உதவுமா என்று சிந்தித்துப் பாருங்கள். பாதிப்பை ஏற்படுத்தும் என்றால் அவருக்குப் பாதுகாப்பான சூழல் வரும்வரை செய்தியை வெளிப்படுத்துவதைத் தாமதப்படுத்தலாம் அல்லது தவிர்க்கலாம்.

- பால்புது அடையாளம் காரணமாக பாலியல் வன்முறைக்கு ஆளாகும் வாய்ப்பு பால்புதுமையினருக்கு மிக மிக அதிகம். ஆனால் பால்புதுமையினருக்கு எதிராக நடக்கும் சில பாலியல் குற்றங்களை இந்தியச் சட்டங்கள் பெரிதாக கருத்தில் கொள்வதில்லை. அல்லது பால்புதுமையினர் அல்லாதோர் மீதான பாலியல் குற்றங்களைப் பார்க்கும் அளவுக்கு தீவிரமாகப் பார்ப்பதில்லை. அதனால் ஊடகவியலாளர்களும் அதே கண்ணோட்டத்தோடு இருக்க வேண்டும் என்கிற அவசியல் இல்லை.

- பால்புதுமையினர் குற்றம் சாட்டப்பட்டவராக இருக்கும்போது கடைபிடிக்க வேண்டியவை:

  - ஒரு பால்புதுமையினர் கைது செய்யப்பட்டிருக்கும்போதோ அல்லது அவர் மீது வழக்கு பதியப்பட்டிருக்கும்போதோ அல்லது அவர் குற்றம் சாட்டப்பட்டவராக

அறிவிக்கப்பட்டிருக்கும் போதோ, அவரது பாலின அடையாளமோ பாலீர்ப்பு அடையாளமோ வழக்குக்கு முக்கியமானதா என்று கேட்டுக் கொள்ளவும். வழக்குக்கும் அதற்கும் தொடர்பில்லை என்றால் அதை செய்தியில் குறிப்பிடவோ அதை மையப்படுத்தவோ தேவையில்லை. காவல்துறையினர் அதை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார் என்பதாலோ அதை அவர்கள் பகிர்ந்துகொள்கிறார்கள் என்பதாலோ அதைக் குறிப்பிடவேண்டிய அவசியம் இல்லை.

- எடுத்துக்காட்டு: சங்கிலியைப் பறித்தாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் பால்புதுமையினர் என்று வைத்துக் கொள்ளலாம். அவரது பாலீர்ப்புக்கும் நடந்த குற்றச் செயலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனும்போது அதனை வெளிப்படுத்தத் தேவை இல்லை.

- ஒருவர், அதே பால் கொண்ட, 18 வயதுக்குக் குறைவான ஒருவரிடம் பாலியல் வன்முறையை நிகழ்த்தியிருந்தால், காவல்துறையினரோ நீங்களோ அந்தப் பாலீர்ப்பு அடையாளத்துக்கும் குற்றத்துக்கும் தொடர்பு உண்டு என்று நினைக்கலாம். “ஒருபாலீர்ப்பு உறவு வைத்துக்கொள்ள முயன்றார்” என்றே அந்தக் குற்றத்தைப் பற்றிய செய்திகள் குறிப்பிடுகின்றன. ஆனால், இவை ஏன் தவிர்க்கப்படவேண்டும் என்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

  - முதலாவதாக, போஸ்கோ சட்டத்தின்படி, பதினெட்டு வயதுக்குக் கீழே உள்ள நபருடன் நடந்த எந்தவிதமான பாலியல் தொடர்பும் குற்றமே. “ஒருபாலீர்ப்பு உறவு/தொடர்பு” போன்ற சொற்கள், அங்கு ஒரு சம்மதம் இருந்ததாக மறைமுகமாகத் தெரிவிக்கின்றன, இந்த சொற்கள் தவறானவை. ஏனென்றால், பதினெட்டு வயதுக்குக் கீழே உள்ள நபரால் சம்மதம் தெரிவிக்க முடியாது என்று சட்டம் சொல்கிறது.

  - இரண்டாவதாக, பாதிக்கப்பட்டவரின் பால் அடையாளத்தை மட்டும் வைத்து குற்றம் சாட்டப்பட்டவரின் பாலீர்ப்பை யூகிக்க முடியாது. வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதாலோ அணுக முடிகிறது என்பதாலோ வேறு சில காரணங்களாலோ குற்றம் சாட்டப்பட்டவர் 18 வயதுக்குக் கீழே உள்ளவரைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தி இருக்கலாம். ஒருபாலீர்ப்பு என்பது குழந்தைகள் மீது பாலியல் விழைவு கொள்ளும் Paedophiliaவுடன் தொடர்ந்து தொடர்புபடுத்தப்படுவது வரலாற்று ரீதியாக நடந்து கொண்டேயிருக்கிறது. பால்புதுமையினரை பாதிக்கும் இம்மாதிரியான முன்முடிவுகளோடு செய்தி வழங்குவது தவறு.

- பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒருவரைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாக பால்புதுமையினர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தால், பிரிவு 377 இன் கீழ் குற்றம் பதியப்படும். ஆனால் அதைப் பாலியல் துன்புறுத்தல் என்றே குறிப்பிட வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவரும் பாதிக்கப்பட்டவரும் ஒரே பால் அடையாளம் கொண்டவர்களாக இருந்தால் “அவரைக் கட்டாயப்படுத்தி ஒருபால் உறவு கொண்டார்/உறவு கொள்ள முயற்சித்தார்” போன்ற வாக்கியங்களைப் பயன்படுத்தத் தேவையில்லை. “கட்டாய உறவுக்கு முயற்சி” அல்லது “பாலியல் ரீதியாகத் தாக்க முயற்சி” என்று எழுதலாம்.

- ஒரு பால்புதுமையினர் குற்றம் சாட்டப்பட்டவராகவோ குற்றம் செய்தவராகவோ இருந்தாலும் சரியான சட்ட வழிமுறைகளுக்கும் கண்ணியத்துக்கும் அவர்களும் உரிமையானவர்கள் என்பதை மனதில் வைத்துக்கொண்டு செய்தியை வழங்கலாம் (இது குற்றம்சாட்டப்பட்ட அனைவருக்கும் பொருந்தும் என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ளவும்)
- பாலியல் தொழில் செய்பவர்களைப் பற்றிய செய்திகளை வழங்கும்போது ஒழுக்கம் சார்ந்த பதங்களைத் தவிர்க்கவும். "பாலியல் தொழிலில் இருந்து காப்பாற்றி மீட்டெடுத்து பிற பணிகள் வழங்குதல்" போன்ற வாக்கியங்களைத் தொண்டு நிறுவனங்களும் காவல்துறையும் பயன்படுத்துகிறது. ஒருவர் பாலியல் தொழிலுக்குள் நுழையப் பல காரணங்கள் இருக்கலாம். "மீட்டெடுப்பு" என்று ஒருபக்கம் பார்க்கப்படுவது, மறுபக்கம் அவருக்குத் துன்புறுத்தலாகவோ வன்முறையாகவோ நெருக்கடியாகவோ இருக்கலாம். இந்த சூழலில் ஒழுக்கம் சார்ந்த சொற்களுக்கு பதிலாக சாதாரண சொற்களைப் பயன்படுத்தலாம்.



# சட்டம் பற்றியச் செய்திகள்

*பால்புதுமையினர் (LGBTQIA+ நபர்கள்) பற்றிய சமூக-அரசியல் விவாதங்கள் பெருகி வரும் இந்த நேரத்தில் இந்திய நீதித்துறையும் சூழலுக்கு ஏற்றவாறு பரிணாம வளர்ச்சியடைந்து வருகிறது. கடந்த ஒரு தசாப்தமாக பால்புதுமையினரின் சமூகம், நலன் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக இந்திய நீதித்துறை பல நேர்மறையான முன்னெடுப்புகளை செய்துள்ளது.*

பால்புதுமையினரின் சமூக முன்னேற்றம், பாலின மற்றும் பாலீர்ப்பு அடையாளத்தேர்வை வழமையாக்குதல் ஆகியவற்றிலும் நீதித்துறை முக்கியப் பங்கு வகித்திருக்கிறது. எதிர்பாலீர்ப்பே வழமையானது என்ற சமூகத்தின் பார்வையை மீண்டும் ஒரு ஆய்வுக்கு உட்படுத்தக்கூடிய விவாதங்களைத் தொடங்கி வைத்திருக்கிறது.

ஆனால் சட்டம் ஒருபோதும் தவறு செய்யாது என்று சொல்லிவிட முடியாது. பாலினம் மற்றும் பாலீர்ப்பு பற்றிய சட்ட விவாதங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. ஆகவே இந்த விவாதங்களை முன்னெடுப்பது, விழிப்புணர்வில் உள்ள இடைவெளிகளை நிரப்புவது, முடிவுகளுக்கு அடிப்படையாக இருக்கும் தவறான செய்திகளையும் வழமைகளையும் கேள்விக்கு உட்படுத்துவது, சட்டத்துறையைக் கேள்விக்குட்படுத்துவது ஆகியவை ஊடகங்களின் பொறுப்பாகும்.

## தீர்ப்புகள் மற்றும் நீதிமன்ற வாதங்கள்

பால்புதுமையினர் தொடர்பான வழக்குகளில் தீர்ப்பு அல்லது நீதிமன்ற வாதம் பற்றியச் செய்திகளை வழங்கும்போது கீழ்க்கண்டவற்றை மனதில் வைத்துக் கொள்ளவும்:

- சக்திவாய்ந்த சமூக உறவுகள் மொழி மூலமாகத்தான் நிலைநிறுத்தப்படுகின்றன, உறுதி செய்யப்படுகின்றன. ஆகவே நீதித்துறையில் பயன்படுத்தப்படும் மொழியை விமர்சனப் பார்வையில் ஊடகங்கள் கவனிக்கவேண்டியது முக்கியமானது. பால்புதுமையினர் தங்களுக்கு உரித்தான கண்ணியம் மற்றும் உரிமைகளை அடைகிறார்களா என்று மொழிதான் தீர்மானிக்கிறது. ஒரு அதிகாரப்பூர்வ நீதிமன்ற ஆவணத்திலிருந்து நேரடியாக மேற்கோள் காட்டும்போதுகூட கீழ்க்கண்டவற்றை கவனத்தில் வைத்துக் கொள்ளவும்:

- ஒரு தீர்ப்பில் பிரச்சனைக்குரிய பழைய பதங்கள் இருந்தால் உங்களது செய்தியில் அவற்றைத் தவிர்த்து சரியான பதங்களைப் பயன்படுத்தவும். எடுத்துக்காட்டாக, ஒரு ஆவணத்தில் "பிறக்கும்போது மனுதாரர் ஆணாக இருந்தார்" என்று கூறப்பட்டிருந்தால் அதை அப்படியே மேற்கோள் காட்ட வேண்டாம். "மனுதாரர் பிறப்பின்போது ஆணாக அறிவிக்கப்பட்டார், பாலின உறுதி அறுவைசிகிச்சை மேற்கொண்டார்" என்று எழுதவேண்டும். (பால்புது பதங்களின் விளக்கப் பட்டியலைப் பார்க்கவும்)
- ஒருவரின் பாலின அடையாளத்தை மறுதலிக்கும் பதங்களையோ வாக்கியங்களையோ அப்படியே மேற்கோள் காட்டவேண்டாம். எடுத்துக்காட்டாக, ஒருவரது பாலின அடையாளத்தைப் பற்றி சந்தேகம் இல்லாத நிலையிலும் "திருநர் என்று இவர் தன்னை சொல்லிக்கொள்கிறார்" என்பதுபோன்ற வாக்கியங்கள் இருந்தால் அவற்றை அப்படியே பயன்படுத்த வேண்டாம். இப்படிப்பட்ட வாக்கியங்களை எழுதும்போது ஒருவர் போலியாகத் தன்னைப் பால்புதுமையினராக அடையாளப்படுத்திக் கொள்கிறார் என்பதுபோன்ற சித்தரிப்பு உருவாகும், இதற்கு ஆபத்தான பின்விளைவுகள் உண்டு.
- அதிகாரப்பூர்வ நீதிமன்ற ஆவணத்தில் அப்படி இருந்தாலும் ஒருவருக்கு வழங்கப்பட்ட பெயரையோ தவறான பாலினத்தையோ உங்களது செய்தியில் குறிப்பிடாதீர்கள். பெயரை மாற்றுவதற்கான அரசின் ஒப்புதலை அவர்களால் பெற முடியாமல் இருக்கலாம். தங்களுக்கான பெயராக அவர்கள் தேர்ந்தெடுத்த பெயரைக் குறிப்பிடவும். அவர்களிடம் பேச முடிந்தால் அவர்களது பெயர் மற்றும் பிரதிபெயர்ச் சொற்களைக் கேட்டு அறியவும். முடியாவிட்டால் அவருக்கு நெருக்கமான நபரையோ வழக்கறிஞரையோ கேட்கவும். பால்புதுமையினரின் குடும்பங்கள் பெரும்பாலும் அவர்களை ஆதரிப்பதில்லை என்பதால் குடும்பத்தினரிடம் தகவல்களைக் கேட்டுப் பெறுவது நல்ல வழிமுறையாக இருக்காது. ஒருவேளை உங்களது செய்தியில் வழங்கப்பட்ட பெயரைக் குறிப்பிட்டிருந்தால் அந்தத் தவறை சரி செய்து சம்பந்தப்பட்டவரிடம் மன்னிப்புக் கோரவும்.

- முக்கியமான தீர்ப்புகளையோ பால்புதுமையினர் சமூகத்தினரை பாதிக்கும் வழக்குகள் பற்றிய விசாரணையையோ செய்தியாக்கும்போது தீர்ப்பின் எல்லா அம்சங்களையும் கூர்ந்து கவனிக்கவும். உங்களால் எளிதில் அணுக முடிகிற பால்புது செயற்பாட்டாளர் மட்டுமன்றி பலதரப்பட்ட பால்புதுமையினரிடம் பேசி அவர்களது கருத்துக்களைப் பதிவு செய்யவும். எடுத்துக்காட்டாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இருக்கும் எல்லா அடிப்படை உரிமைகளும் திருநர்களுக்கும் பொருந்தும் என்று நால்சா - இந்திய அரசாங்கம் வழக்கில் தீர்ப்பு வந்தது. இது வரலாற்று சிறப்பு மிக்கது என்றாலும் ஹிஜ்ரா, கோத்தி, அரவாணி, மூன்றாம் பாலினத்தவர், பன்முகப் பால்பண்பு கொண்டவர்கள் என எல்லாரையும் "திருநர்" என்று ஒட்டுமொத்தமாகக் குறிப்பிட்டதற்காக இந்தத் தீர்ப்பு விமர்சனத்துக்கு உள்ளானது.
- ஒரு பால்புதுமையினர் புகார் அளிப்பவராகவோ குற்றம் சாட்டப்பட்டவராகவோ இருக்கும் குற்ற வழக்குகளை செய்தியாக்கும்போது எந்த கோணத்தில் அதை அணுகுகிறோம் என்பதில் செய்தியாளர்கள் கவனமாக இருக்க வேண்டும். இதுபோன்ற செய்திகளைப் பரபரப்பாக்குவது எளிது, அதே நேரம் இவற்றைப் பரபரப்பாக ஆக்கினால்

பின்விளைவுகளும் அதீத தாக்கம் கொண்டவையாக இருக்கும். பால்புதுமையினர் மீதான புறக்கணிப்பையும் வன்முறையையும் இவை தோற்றுவிக்கலாம். (கூடுதல் விவரங்களுக்குக் குற்றம் பற்றிய பகுதியைப் பார்க்கவும்)

- ஒரு சாதாரண வழக்கில் சம்பந்தப்பட்ட நபர் கேட்டுக் கொண்டாலொழிய அவரது பாலீர்ப்பு அடையாளத்தைப் பற்றிப் பேசவேண்டாம். எடுத்துக்காட்டாக ஒரு நிலப் பிரச்சனையில் ஈடுபட்டிருக்கும் இரண்டு தரப்பில் ஒரு தரப்பைச் சேர்ந்தவர் தன்பாலீர்ப்பு கொண்ட ஆண் என்றால் அவரது பாலீர்ப்புக்கும் வழக்குக்கும் தொடர்பு இல்லை, அதைக் குறிப்பிடவும் தேவை இல்லை. தனது பாலீர்ப்பின் காரணமாக எதிர்த்தரப்பு பாரபட்சம் காட்டுவதாகவும் அதைக் குறிப்பிட வேண்டும் என்றும் சம்பந்தப்பட்டவர் கேட்டால் மட்டும் அதைக் குறிப்பிடவும்.

- வளர்ந்த பிள்ளைகள் தங்களது இணையர்களுடன் ஆதிக்க பாலீர்ப்பல்லாத ஒரு உறவில் ஒப்புதலுடனே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது தெரிந்தும் அவர்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள் என்று பெற்றோர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். அதை அடிப்படையாக வைத்து ஆட்கொணர்வு மனுவையும் தாக்கல் செய்கிறார்கள். இது வழக்கமாக நடக்கிறது. சில நேரங்களில் தங்களது உறவு தெரிந்தபிறகு இணையரை வலுக்கட்டாயமாக அடைத்து வைத்திருப்பதாகவும் பால்புதுமையினர் பெற்றோருக்கு எதிராக மனு தாக்கல் செய்கிறார்கள் (எடுத்துக்காட்டாக, தன்பாலீர்ப்பு கொண்ட அதிலா, நூரா இணையரின் கேரள உயர்நீதிமன்ற வழக்கு). இதுபோன்ற ஒரு வழக்கில் தன்பாலீர்ப்பு கொண்டவருக்கு ஆதரவாகத் தீர்ப்பு வந்தால் அதை ஒரு முன்னுதாரணமாக ஆவணப்படுத்த வேண்டும். அதை விட முக்கியமாக, எதிர்ப்பாகத் தீர்ப்பு வரும்போது அதை ஒரு செயல்பாடு/போராட்டத்துக்கான அறைகூவலாகப் பதிவு செய்ய வேண்டும். எப்படி இருந்தாலும் சம்பந்தப்பட்ட இருவரின் தரப்பை விசாரிக்காமல் இந்த வழக்குகளை செய்தியாக்க வேண்டாம்.

- பால்புது நபர் மனுதாரராக இருக்கும் ஒரு வழக்கைப் பற்றிய செய்தியில் அவர்களது தனியுரிமை மற்றும் பாதுகாப்புக்கு மரியாதை கொடுங்கள். நீதிமன்றத்தின் பொது ஆவணங்களில் அவர்களது பெயர் மற்றும் பிற விவரங்கள் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் அவர்களது அடையாளத்தைப் பற்றிய தகவல்களை அவர்களது அனுமதியில்லாமல் குறிப்பிடவேண்டாம். முந்தைய செய்திகளில் நீங்கள் குறிப்பிட்டிருந்த நபர்கள், பிரபலமானவர்களுக்கும் இது பொருந்தும்.

- பால்புது நபர் மனுதாரராக இருக்கும் ஒரு வழக்கைப் பற்றிய செய்தியில் அவர்களது பாலினம், உடல், பாலீர்ப்பு ஆகியவை பற்றிய தகவல்கள் விசாரணையிலோ கருத்துக்களிலோ வழக்கறிஞர்கள், நீதிபதியால் பயன்படுத்தப்படுகிறதா என்று கவனிக்கவும். நீதிமன்ற ஆவணங்களில் இதை சரிபார்க்கலாம். சம்பந்தப்பட்ட நபரின் உடல் அல்லது பாலீர்ப்பைப் பற்றிய மோசமான, உடலுறவு ரீதியான கேள்விகள் கேட்கப்படுகின்றனவா? அவர்களது உறவு பற்றிய கேள்விகள்மூலம் அவர்கள் இழிவுபடுத்தப்படுகிறார்களா? அப்படியானால் அவற்றைப் பற்றி உங்களது செய்தியில் குறிப்பிடவும்.

- *தீர்ப்புகளையும் விவாதங்களையும் கவனிக்கும்போது தவறான, வழமையான கருத்துக்கள் இருக்கின்றனவா என்றும் பார்க்கவும். எடுத்துக்காட்டாக, பன்னாட்டு நீதித்துறை வல்லுநர்கள் ஆணையத்தின் ஒரு அறிக்கையில், இணைந்து வாழ விரும்பிய இரு தன்பாலீர்ப்பு பெண்கள் பற்றிய வழக்கை ஒரு செயற்பாட்டாளர் குறிப்பிடுகிறார். வழக்கறிஞர் திரும்பத் திரும்ப "கேரளாவில் தன்பாலீர்ப்பு பெண்கள் கிடையாது" என்று குறிப்பிட்டிருக்கிறார், அதை நீதிபதியும் கேள்விக்குட்படுத்தவில்லை.*

## முக்கியமான தீர்ப்புகள் மற்றும் சட்டங்கள்

*பால்புதுமையினர் பற்றிய செய்திகளைப் பின் தொடர்ந்துவரும் எந்த ஒரு ஊடகவியலாளரும் தற்போது பால்புதுமையினருக்கு இருக்கும் உரிமைகளைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். பால்புதுமையினர் உரிமைகள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய சில முக்கிய தீர்ப்புகள் மற்றும் சட்டங்களை இப்போது பார்க்கலாம்:*

### நாஸ் அமைப்பு Vs தேசிய தலைநகரம், டெல்லியின் அரசாங்கம்

*இந்த வழக்கில் 2009 ஆம் ஆண்டு டெல்லி உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது, தனிப்பட்ட முறையில் இருவரின் ஒப்புதலோடு வயது வந்தவர்கள் மேற்கொள்ளும் உடலுறவானது குற்றமல்ல என்று முதன்முறையாக அங்கீகரித்தது. இதை ஒரு குற்றமாகக் கருதுவது அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என்றும் அந்தத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது. அரசுசாரா தொண்டு நிறுவனமான நாஸ் அமைப்பு மற்றும் வழக்கறிஞர்கள் கூட்டமைப்பின்மூலம் 2001 இல் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. இயற்கைக்கு எதிரான உடலுறவுகளைக் குற்றமாகக் கருதும் இந்திய குற்றவியல் சட்டம் 377வது பிரிவு அரசியல் அமைப்புக்கு எதிரானதா என்று இந்த மனு கேள்வி எழுப்பியது.*

### சுரேஷ் குமார் கௌஷால் Vs நாஸ் அமைப்பு

*டிசம்பர் 11, 2013 இல் டெல்லி உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை உச்சநீதிமன்றம் நிராகரித்தது. தன்பாலீர்ப்பை மீண்டும் குற்றமாக்கியது. தீர்ப்பை வழங்கும்போது "தன்பாலீர்ப்பு கொண்ட ஆண்கள்,பெண்கள், இருபாலீர்ப்பு கொண்டவர்கள், திருநர்கள் ஆகியோர் இந்த நாட்டின் மக்கள் தொகையில் மிகவும் குறைந்த அளவில்தான் இருக்கின்றனர், ஆகவே இந்தப் பிரச்சனைக்கு நீதித்துறையின் குறுக்கீடு தேவையில்லை" என்றும் நீதிபதிகள் அமர்வு அறிவித்தது. பால்புதுமையினரின் அடிப்படை மனித உரிமைகளை இந்தத் தீர்ப்பு கண்டுகொள்ளவில்லை என்று பரவலாக எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன.*

### தேசிய சட்ட சேவைகள் ஆணையம் (NALSA) Vs இந்திய அரசு

*ஆண்-பெண் இருமைக்கு அப்பாற்பட்ட ஒரு பாலினத்தைத் தேர்ந்தெடுக்க ஒரு நபருக்கு உரிமை உண்டு என்று 2014ல் இந்த வழக்கில் தீர்ப்பு வந்தது. திருநர் உரிமைகளுக்கான இந்தியப் போராட்டத்தில் இது ஒரு முக்கியமான மைல்கல்லாகும். இந்தத் தீர்ப்பின்மூலம் பாலின உறுதி சிகிச்சை இல்லாமல் தங்களது ஆவணங்களில் பாலினத்தை மாற்றிக்கொள்வதற்கான உரிமை வழங்கப்பட்டது. அது மட்டுமில்லாமல் மூன்றாவது பாலினமாகத் தங்களைப் பதிவு செய்துகொள்வதற்குத் திருநர்களுக்கு அரசியலமைப்பு உரிமை இருப்பதாகவும் இந்தத் தீர்ப்பு தெரிவித்தது. ஆனால் "மூன்றாவது பாலினம்" என்ற பதம், ஆண், பெண்*

ஆகிய இரு பாலினங்களே வழமையானவை என்ற ஒரு சித்தரிப்பை முன்வைப்பதாக விமர்சனங்கள் எழுந்தன.

**நவ்தேஜ் சிங் ஜோஹர் Vs இந்திய அரசு**

2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் தேதி, பிரிவு 377 அரசியலமைப்புச்சட்டத்துக்கு எதிரானது என்று உச்சநீதிமன்றம் அறிவித்தது. இது ஒரு நபரின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என்றும் குறிப்பிடப்பட்டது. இருதரப்பு ஒப்புதலோடு வயது வந்த இருவர் ஓர்பாலீர்ப்பு உறவை மேற்கொள்வதைக் குற்றப்பட்டியலில் இருந்து நீக்கி ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டது. ஒருவரின் பாலீர்ப்பு என்பது அவரது அடையாளத்தின் ஒரு முக்கியமான பகுதி என்பதால் அதை நிராகரிப்பது வாழ்வதற்கான உரிமையை மறுதலிப்பதாகும் என்றும் நீதிமன்றம் தெரிவித்தது.

**திருநர் (உரிமை பாதுகாப்பு) சட்டம், 2019**

2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5 ஆம் தேதியன்று இந்திய நாடாளுமன்றத்தில் திருநர் (உரிமை பாதுகாப்பு சட்டம்) கொண்டு வரப்பட்டது. வேலைவாய்ப்பு, கல்வி, மருத்துவம் ஆகிய துறைகளில் திருநர்களுக்கு எதிரான பாரபட்சத்தைத் தடுப்பதன்மூலம் அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பது இந்த சட்டத்தின் நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்தியாவின் திருநர்கள் இதைக் கடுமையாக எதிர்த்தனர். இது அமைப்புரீதியான ஒடுக்குமுறையை ஊக்குவிப்பதாகக் குற்றம் சாட்டினர். எடுத்துக்காட்டாக, இந்த சட்டத்தின்படி பாலின உறுதி அறுவை சிகிச்சை நடந்ததற்கான சான்றை சமர்ப்பித்தால் மட்டுமே ஆவணங்களில் ஒருவரது பாலினத்தை மாற்ற முடியும். இது தங்களது தனிப்பட்டு இயங்கும் தன்மையையும் தனியுரிமையையும் பாதிக்கிறது, இதன்மூலம் அதிகாரிகள் தங்களைத் துன்புறுத்தும் வாய்ப்பு அதிகமாகும் என்று திருநர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

## அனைவருக்குமான தன்மை மற்றும் பாதுகாப்பான வெளிகள்

- வேறு எந்த அமைப்பையும்போலவே நீதித்துறையிலும் பால்புதுமையினர் மீதான பாரபட்சம் இருக்கலாம் என்பதை ஊடகவியலாளர்கள் நினைவில் வைத்துக் கொள்ளவும். நீதித்துறை சார்ந்த வெளிகள் பால்புதுமையினருக்குப் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய ஊடகவியலாளர்கள் உதவவும்.

- நீதிமன்ற வளாகத்தில் பால்புது நபர் ஒருவர் பாரபட்சத்தையோ துன்புறுத்தலையோ எதிர்கொள்கிறார் என்றால் அந்த செய்தியை வெளியிடவேண்டுமா என்று சம்பந்தப்பட்டவரிடம் பேசவும். இதே போல பிற பால்புது நபர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா என்று தேடவும். கேரளாவைச் சேர்ந்த ஒரு திருநம்பியும் திருநங்கையும் எப்போது நீதிமன்றத்துக்கு வந்தாலும் நீதிபதிகள் உட்பட அனைவருமே அவர்களைப் பார்த்து சிரித்ததாக பன்னாட்டு நீதித்துறை வல்லுநர்கள் ஆணைய அறிக்கை குறிப்பிடுகிறது. இவை சிறிய நிகழ்வுகளாகத் தெரியலாம். ஆனால் பால்புதுமையினரை அமைப்புரீதியாகவே தவிர்ப்பதை இவை ஊக்குவிக்கலாம்.

- பெரும்பாலான துறைகளைப் போலவே நீதித்துறையில் பால்புதுமையினரின் இருப்பு மிகவும் குறைவானதாக இருக்கிறது. நீதித்துறைக்குள் இருக்கும் பன்முகத்தன்மையை

ஊடகவியலாளர்கள் கவனிக்க வேண்டும், குறிப்பாக முடிவு எடுக்கக்கூடிய இடங்களில் பால்புதுமையினர் இருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். எடுத்துக்காட்டாக, கேரளாவின் முதல் திருநங்கை வழக்கறிஞராக இருக்கும் பத்ம லட்சுமி பார் தேர்வில் வெற்றி பெற்ற தகவல் ஒரு முன்னுதாரணமாக வழங்கப்படவேண்டும்.

- பால்புதுமையினருக்கான உள்கட்டமைப்பு மற்றும் நிர்வாக ரீதியான வசதிகள் நீதித்துறை வளாகங்களில் இல்லாதபட்சத்தில் அவற்றைக் கேள்விக்குட்படுத்துங்கள். எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் பாலின இருமைக்கு அப்பாற்பட்ட பொதுக்கழிவறைகள் பற்றிய ஒரு உத்தரவில், தங்களது வளாகத்திலேயே அப்படிப்பட்ட கழிவறைகள் இல்லை என்று சென்னை உயர்நீதிமன்றம் சுட்டிக் காட்டியது. இதுபோன்ற அறிவிப்புகளை கவனப்படுத்தவும்.

- நீதித்துறையில் நேர்மறையான செயல்பாடுகள் வரும்போது அவற்றை அங்கீகரிக்கவும், விமர்சனத்துக்கும் ஒரு இடைவெளி இருக்கட்டும். இதுபோன்ற செயல்பாடுகளால் பாதிக்கப்படும் பால்புதுமையினருடன் பேசவும். எடுத்துக்காட்டாக, 2022ம் ஆண்டில் பால்புதுமையினர் பற்றிய உணர்வுரீதியான புரிதலை அதிகப்படுத்தும் ஒரு ஆவணம் ஒன்றை உச்சநீதிமன்றம் வெளியிட்டது. இதுபோன்ற நிகழ்வுகளை செய்தியாக்கும்போது ஆவண உருவாக்கத்தில் பால்புதுமையினர் பங்குபெற்றார்களா, இதை மேம்படுத்தமுடியுமா என்று பார்க்கவும்.



## அரசியல்

*பால்புதுமையினர் (LGBTQIA+ நபர்கள்) பற்றிய அரசியல்வாதிகளின் நிலைப்பாடு, அரசியலில் பால்புதுமையினர் பங்களிப்பு, பால்புதுமையினரைப் பாதுகாக்கும்/காயப்படுத்தும் அரசியல் பிரச்சாரங்கள், பால்புதுமையினரை மையமாகக்கொண்ட அரசியல் செய்திகள் ஆகியவை இந்தப் பகுதியில் பேசப்படுகின்றன. ஒவ்வொரு பாகத்திலும் ஊடகங்கள் கவனிக்கவேண்டிய நிகழ்வுகள்/பிரச்சனைகள் மற்றும் அவற்றை செய்தியாக்கவேண்டிய வழிமுறைகள் பற்றிய வழிகாட்டுதல்கள் தரப்பட்டிருக்கின்றன.*

- அரசுத்துறைகளில் பால்புதுமையினர் பணியமர்த்தப்படுவது குறித்த செய்திகளை ஊடகவியலாளர்கள் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். இது ஒரு வரலாற்று ஆவணமாகவும் முற்போக்கான அரசாங்கம் எவ்வாறு செயல்படும் என்பதற்கான அளவுகோலாகவும் மாறும்.
  - எடுத்துக்காட்டாக: அரசாங்கத்தின் ஆலோசகர் பணியில் ஒரு திருநர் நியமிக்கப்படுவது.
- பால்புதுமையினர் பற்றிய சட்டங்கள், மசோதாக்கள், அவசர சட்டங்கள், அரசு பிறப்பிக்கும் உத்தரவுகள், விதிமுறைகள் ஆகியவற்றைப் பற்றி எழுதும்போது கீழ்க்கண்டவற்றை ஆலோசித்துப் பாருங்கள்:
  - இந்த விதிமுறைகள், சட்டங்கள் வடிவமைக்கப்படுவதற்கு முன்னதாக பால்புது சமூகத்தினர் கலந்து ஆலோசிக்கப்பட்டனரா?
  - இதுபோன்ற சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் பற்றிய செய்திகளை எழுதும்போது, எந்த ஒரு விமர்சனமும் இன்றி அரசைப் பாராட்டுவதாக இல்லாமல் இவற்றைப் பற்றிய பால்புதுமையினரின் குரல்களையும் பதிவு செய்யவேண்டும்.

    எடுத்துக்காட்டு: சில அரசுகள் “மூன்றாம் பாலினம்” என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றன. இது மேலோட்டமாகப் பார்க்கும்போது அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சொல்லாகத் தெரிந்தாலும் திருநர் சமூகங்களின் நிலைப்பாடுகள்,

நிதர்சனங்கள், அவர்கள் பயன்படுத்தும் மொழி ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாக இல்லை.

- ○ தான் சொல்வதைப் போலவே அரசாங்கம் செயல்படுகிறதா? எடுத்துக்காட்டாக: பால்புதுமையினருக்கு ஆதரவாக ஒரு அமைச்சர் பொதுவெளியில் பல அறிக்கைகளை வெளியிடலாம். அதுவே பால்புதுமையின சமூகங்களின் உரிமைகளுக்கான கள செயல்பாடுகளிலும் பிரதிபலிக்கிறதா? எடுத்துக்காட்டு: பேட்டிகளிலும் பொது நிகழ்ச்சிகளிலும் சில அமைச்சர்கள் பால்புதுமையினருக்கு ஆதரவான கருத்துகளைத் தெரிவிக்கலாம். ஆனால், பால்புது சமூகத்தினரின் சில பிரச்சனைகளில் அரசின் நிலைப்பாடுகள் பற்றிப் பேசும்போது அரசாங்கத்தின் ஒரு அங்கத்தைப் போல அவர்கள் அமைதி காக்கலாம்.

- திட்டங்கள்/சட்டங்கள் போன்றவற்றை அமல்படுத்தும்போது கீழ்க்கண்ட விஷயங்களில் கவனம் செலுத்தவும்:
  - ○ பால்புதுமையினரின் சமூகத் தலைவர்கள்/கூட்டமைப்புகள்/குழுக்கள் ஆகியோருடன் கலந்து ஆலோசித்த பின்னரே இவை அமல்படுத்தப்பட்டனவா?
  - ○ திட்டங்களுக்குப் போதுமான நிதி ஒதுக்கப்படுகிறதா அல்லது அந்தத் திட்டங்கள் ஏட்டளவில் நின்றுவிடுகின்றனவா?
  - ○ அரசாங்கம் அறிவிக்கும் திட்டங்கள் உண்மையில் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை ஊடகவியலாளர்கள் சரிபார்க்கவேண்டும்.

    எடுத்துக்காட்டு: பல மாநிலங்கள் திருநர்களுக்கானத் திட்டங்களை அறிவித்துள்ளன. இவை ஊடகங்களிலும் பெரிதும் வரவேற்கப்பட்டன. ஆனால் இதைப் பின் தொடர்ந்து கவனிக்கும்போது இந்தத் திட்டங்கள் சரியாக இயங்கவில்லை என்பது தெரிய வந்தது.

- ஒரு கட்சியின் தேர்தல் அறிக்கை பற்றிய செய்தியை அளிக்கும்போது இவற்றை கவனிக்கவும்:
  - ○ அறிக்கையை உருவாக்குபவர்களின் குழுவில் பால்புதுமையினர் இருக்கிறார்களா?
  - ○ பால்புதுமையினருக்கான உரிமைகள் மற்றும் நலனுக்கான அம்சங்கள் அறிக்கையில் சேர்க்கப் பட்டிருக்கின்றனவா?

    எடுத்துக்காட்டாக, வீட்டுவசதி, இட ஒதுக்கீடு, உரிமைகள் ஆகியவற்றைத் தருவோம் என்று உறுதியளித்திருக்கிறார்களா?
  - ○ தேர்தல் அறிக்கையின் முக்கியமான அரசியல் பார்வை பால்புதுமையினரையும் உள்ளடக்கியதாக இருக்கிறதா?

- எடுத்துக்காட்டாக, அறிக்கையின் மொழியில் பாலின வேறுபாடு, பால்புது வெறுப்பு, திருநர் வெறுப்பு ஆகியவை இருக்கிறதா அல்லது அந்த மொழி அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்கிறதா?

- பால்புது சமூகத்தினரின் உரிமைகளுக்கு எதிராகவோ அவர்கள் மீது பாரபட்சம் காட்டுவதாகவோ அறிக்கையில் ஏதாவது இருக்கிறதா? எடுத்துக்காட்டாக: அது சமூக வாழ்க்கைக்கு எதிராகப் பேசுகிறதா? திட்டங்களுக்கு எதிரான பால்புதுமையினரின் விமர்சனங்களை அது கருத்தில் எடுத்துக்கொள்கிறதா அல்லது சிஸ்-ஆதிக்க பாலினத்தவரின் நிலைப்பாடுகளையே முன்வைக்கிறதா?

- அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போலவே கட்சியின் உறுப்பினர்கள் பொதுவெளியிலும் ஊடகங்களிலும் நடந்து கொள்கிறார்களா?

    - பால்புது கோணத்தில் அரசியல் செய்திகளை வழங்கும் ஊடகவியலாளர்கள், பிற கூட்டமைப்புகள், இயக்கங்கள் ஆகியவற்றின் அறிக்கைகளையும், பால்புதுமையினரின் உரிமைகளைப் பொறுத்தவரை அவர்கள் எப்படி வளர்கிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும்.

- அரசியல் தலைவர்களின் பேச்சுகள், கருத்துகள் பற்றிய செய்திகளை வழங்கும்போது:

    - தொலைக்காட்சி விவாதங்கள், பேட்டிகள், சிறு அறிக்கைகள், பத்திரிக்கையாளர் சந்திப்பில் சொல்லப்பட்டவை ஆகியவற்றில் பால்புதுமையினருக்கு எதிரான தவறான கருத்துக்களை ஒரு அரசியல் தலைவர் பேசும்போது, அந்தப் பேச்சைக் குறிப்பிட்டு, அது ஏன் பிரச்சனைக்குரியது என்பதையும் விரிவாக எழுதவேண்டும். இதுபோன்ற பேச்சுகளைப் பற்றிய செய்தியை வழங்கும்போது பால்புதுமையினரின் குரல்களையும் பதிவு செய்யவேண்டும்.

    - ஒரு அரசியல் தலைவர் சமூக ஊடகங்களில் பிரச்சனைக்குரிய கருத்துக்களை வெளியிடும்போது அதை ஒரு பொதுப் பேச்சாகவே கருத்தில் கொள்ளவும். ஒரு எதிர்மறையான கருத்து அதிகமான ஆதரவைப் பெறும்பட்சத்தில், அவரது கருத்துகள் பால்புதுமையினருக்கு எதிரான வெறுப்பு மற்றும் பாரபட்சத்தைத் தூண்டுவதாக இருப்பதையும் சுட்டிக் காட்டவும். எதிர்வினைகளை அலட்சியப்படுத்த வேண்டாம்.

- முழுவதும் பொதுத்தன்மை இல்லாத சூழலிலோ தனிப்பட்ட முறையிலோ ஒரு தலைவர் பேசியிருக்கிறார் என்றால், அதை செய்தியாக்குவதன் நோக்கம் என்ன? இந்த பேச்சுகளுக்குத் தேவையற்ற வெளிச்சத்தைத் தந்து பார்வையாளர்களை அதிகப்படுத்திக்கொள்வதற்காக செய்தியாக்கப்பட்டிருக்குறதா? அல்லது அந்தத் தலைவர்களைத் தட்டிக் கேட்பதற்காக செய்தியாக்கப்பட்டிருக்கிறதா?

    - எடுத்துக்காட்டாக, ஒரு திருமண விழாவின்போது, அரசியல் தலைவர் ஒருவர் தன்பாலீர்ப்பு கொண்டவர்கள் மீது வெறுப்பை உமிழக்கூடிய ஒரு கருத்தைத் தெரிவித்தார். அது சில ஊடகங்களால் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

ஆனால் அதன்பிறகு அவரை யாரும் கேள்விக்கு உட்படுத்தவில்லை, எந்த விதத்திலும் அவரைப் பொறுப்பேற்கச் செய்யவும் இல்லை.

- ஒரு தலைவரின் பேச்சு அல்லது கருத்து, அவர்களது பொதுவான கொள்கைக்கு எதிரானதாக, பால்புது வெறுப்பு கொண்டதாக இருக்கிறதா? எடுத்துக்காட்டாக, அதுவரை கலாச்சாரம் அல்லது மதம் பற்றிப் பேசாத ஒரு பகுத்தறிவு கொண்ட தலைவர் திடீரென்று பால்புதுமையினரின் பாலீர்ப்புகள் கலாச்சாரத்துக்கு எதிரானவை என்று கூறுகிறாரா? இது செய்தியாக்கப்பட வேண்டும், அதன்மீது கவனத்தைக் குவிக்க வேண்டும்.

- ஒரு அரசியல் தலைவர்/ அரசியல்வாதி பால்புது வெறுப்புடன் பேசுகிறார். இது அவரது மொத்த அரசியல் நடவடிக்கைகளுக்கும் எதிரானதா?

  - எடுத்துக்காட்டாக, ஒரு பகுத்தறிவு சிந்தனை கொண்ட பத்திரிக்கையாளர் அவரது மொத்த வாழ்க்கையிலும் மதம் லாச்சாரம் பற்றி பேசாமல் இருந்துவிட்டு பால்புது உறவுகளைப் பற்றி பேசும்போது கலாச்சாரத்துக்கு எதிரானது எனப் பேசுகிறாரா? ஆம் எனில் அவரது பேச்சு கண்டிக்கப்பட வேண்டியது.

  - இது போன்ற கருத்துக்களை பால்புதுமையினருக்கு எதிரான கருத்துக்களாகவே செய்திகளில் எழுத வேண்டும். பால்புதுமையினருக்கு எதிரான அரசியல்வாதிகளில் கருத்துக்களைப் பதிவுசெய்யும் அதே நேரத்தில் அந்த கருத்துக்கள் எப்படி பால்புதுமையினருக்கு எதிரானது என்பதையும் விளக்க வேண்டும்.

- பால்புதுமையினர் அரசியலில் ஈடுபடும்போது அல்லது அரசியல் கட்சிகளையோ இயக்கங்களையோ தொடங்கும்போது

  - வழக்கமான கட்சி/இயக்கத்தைப் பற்றிய செய்தியைப் போலவே நிலைப்பாடுகள், செயல்பாடுகள், அரசியல் ஆகியவற்றின்மீது கவனம் செலுத்தவும். பால்புது அடையாளத்தை மட்டுமே மையப்படுத்துவதைத் தவிர்க்கவும்.

  - பால்புதுமையினர் உரிமைகள் மட்டுமல்லாமல் மைய நீரோட்ட அரசியல் இயக்கங்களுக்குப் பால்புதுமையினர் தலைமையேற்பதையும் கவனப்படுத்தவும்.

  - எடுத்துக்காட்டாக, தலித் திருநங்கை செயற்பாட்டாளரான க்ரேஸ் பானு தமிழ்நாட்டில் நடந்த ஜல்லிக்கட்டு போராட்டத்தில் பங்குபெற்றார். ஆனால் அவர் அந்தப் போராட்டத்தின் தலைவராக அங்கீகரிக்கப்படவில்லை.

  - சி.ஏ.ஏ மற்றும் என்.ஆர்.சி.க்கு எதிரான நாடு தழுவிய போராட்டங்களில் பல பால்புதுமையினர் மற்றும் பால்புதுக் குழுக்கள் பங்குபெற்றனர். ஆனால் பால்புதுமையினரான அவர்களின் தலைமைத்துவம் பெரிதாக வெளிச்சத்துக்கு வரவில்லை.

- ஒரு இயக்கத்தைத் தொடங்கிய "முதல்" நபர் போன்ற அங்கீகாரங்களை ஒருவருக்கு வழங்குவதற்கு முன்பு கவனமாக இருக்கவும். தகவல்களை சரிபார்க்க முடியவில்லை எனில் "முதல்முறையாக" என்பதுபோன்ற பதங்களை கவனமாகப் பயன்படுத்தவும்.

- பால்புதுமையினர் தேர்தலில் போட்டியிடுவது பற்றிய செய்திகளை வழங்கும்போது:

  - ஒரு பால்புது நபர் தேர்தலில் போட்டியிடும்போது அவரது அடையாளத்தை மட்டும் கவனப்படுத்த வேண்டாம். அவர்களது முந்தைய செயல்பாடுகள், வெற்றிபெற்றால் அவர்கள் செய்யப்போவதாக அறிவிக்கும் திட்டங்கள், அவர்களது அரசியல் நிலைப்பாடுகள் ஆகியவற்றை கவனிக்கவும். அரசியல் செயல்பாடுகள் மற்றும் லட்சியங்களைப் பற்றி எழுதுவதற்காக அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையையோ கடந்த காலத்தில் அவர்கள் செய்த, அரசியலுக்குத் தொடர்பில்லாத செயல்பாடுகளையோ பற்றி எழுத வேண்டாம்.

  - எடுத்துக்காட்டாக தேர்தலில் போட்டியிடும் ஒரு திருநங்கை ஒரு காலத்தில் பாலியல் தொழிலாளியாகவும் இருந்திருக்கிறார் என்றால் அவரது பணி பற்றிய அறம் சார்ந்த பார்வை தேவையற்றது. ஆனால் பொதுச் சமூகம், அறசியல் செயல்பாடுகள் மற்றும் அனுபவங்கள் ஆகியவை, ஒரு தலைவராக அவரது நம்பகத்தன்மை மற்றும் அறிவைப் புலப்படுத்துவதில் முக்கியமானவை.

- பொதுவெளியில் பால்புதுமையினரின் உரிமைகளுக்கு ஆதரவு தருவதாக அரசியல் கட்சிகள் பேசும்போது, தேர்தலில் பால்புது வேட்பாளர்களுக்கு அவர்கள் வாய்ப்பு அளிக்கிறார்களா என்று கவனிக்கவும். முக்கியக் கட்சிகளிலிருந்து எத்தனை சிஸ் பெண்கள் வேட்பாளர்களாக அறிவிக்கப்படுகிறார்கள் என்று ஊடகங்கள் கவனிப்பதைப் போலவே இதையும் மேற்கொள்ளவும்.

  - ஒரு கட்சியில் பால்புது வேட்பாளர்கள் அறிவிக்கப்படும்போது, அந்தக் கட்சி வெற்றி பெற வாய்ப்பு உள்ள இடங்களில் வாய்ப்பு வழங்கப்படுகிறதா என்று கவனிக்கவும். தோற்றுப்போவோம் என்று தெரிந்த தொகுதியில் பால்புது வேட்பாளர்களை நிறுத்தி சமூகத்தினரிடமிருந்து நற்பெயர் பெற அந்தக் கட்சி முயற்சி செய்கிறதா என்று கவனிக்கவும்.

  - கட்சியின் பிற வேட்பாளர்களுக்கு இணையாக பால்புது வேட்பாளர்களுக்கும் நிதி, அங்கீகாரம், பிரச்சார உதவி உள்ளிட்ட ஆதரவும் வளங்களும் வழங்கப்படுகிறதா என்பதையும் கவனிக்கவும்.

  - பெண்கள் அல்லது பட்டியலினத்தவருக்கான தொகுதிகளில் பால்புது வேட்பாளருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறதா அல்லது பொது தொகுதியில் அவர் நிற்கவைக்கப்படுகிறாரா? அதற்கான அரசியல் காரணங்கள் என்ன?

  - பிற வேட்பாளர்களைப் பற்றிய செய்திகளை வழங்குவதுபோலவே பால்புது வேட்பாளர்கள் பற்றியும் செய்திகளை சேகரிக்கவும். வாக்காளர்களிடம் அவர்கள் பற்றிய கருத்துக்களைக் கேட்கவும், கடந்த காலத்தில் தொகுதிக்காக வேட்பாளர் செய்த

பணிகளையும் அவர்களின் செயல்பாடுகளையும் பற்றிக் கேட்டறியவும். பால்புது வேட்பாளர்களைப் பொதுமக்கள் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதற்கான ஒரு வரலாற்று ஆவணமாகவும் இது அமையும். எதிர்காலத்தில் ஒரு தொகுதியில் போட்டியிடும் பால்புது வேட்பாளர்கள் தங்களது செயல்பாடுகளை மேம்படுத்திக்கொள்ள இது உதவும்.

  - பால்புது வேட்பாளருக்கு எதிராகப் போட்டியிடும் பிற வேட்பாளர்கள் அவரை எப்படி அணுகுகின்றனர்? அவர்களை சமமாக பாவிக்கிறார்களா அல்லது பாரபட்சம் காட்டுகிறார்களா?

- அரசியல் (திட்ட வரையறைகள்/இயக்கங்கள்/பிரச்சனைகள்/கட்சிகள்) பற்றிய பால்புதுமையினரின் கருத்துக்களை வெளியிடும்போது கீழ்க்கண்டவற்றை நினைவில் வைத்துக் கொள்ளவும்:

  - சில நேரங்களில் ஒரு பால்புது நபர் ஒரு கட்சியையோ கட்சித் தலைவரையோ ஆதரித்துப் பேசலாம். ஒரு நபர் பேசிவிட்டார் என்பதற்காக நாட்டில் இருக்கும் எல்லா பால்புதுமையினரும் அந்தக் கட்சியையோ வேட்பாளரையோ ஆதரிக்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ள முடியாது. ஒரு நபரோ அல்லது குழுவோ நாட்டில் இருக்கும் எல்லா பால்புதுமையினருக்கும் பிரதிநிதியாக இருப்பார் என்று யூகிக்கவேண்டாம். அந்த ஆதரவை சரியாக எழுதவும். "குறிப்பிட்ட நபர் குறிப்பிட்ட அரசியல்வாதியை ஆதரிக்கிறார்" என்று எழுதுவது சரியானது. "இந்திய பால்புது சமூகம் அரசியல்வாதியை ஆதிரிக்கறது" என்று எழுதுவது சரியல்ல.

  - சிஸ்-எதிர்பாலீர்ப்பைக் கொண்ட நபர்களைப் போலவே பால்புதுமையினருக்கும் அரசியல் சார்புநிலைகள் இருக்கலாம். ஒருவரது கருத்தை வைத்து எல்லாருடைய கருத்தையும் முடிவெடுப்பது சரியல்ல.

  - ஒரு பால்புது நபரோ சமூகமோ அரசியல் கட்சிக்கு ஆதரவு தெரிவிக்கும்போது பால்புது பிரச்சனைகள் மற்றும் உரிமைகளில் அந்தக் கட்சியின் நிலைப்பாடுகள் காரணமாக ஆதரவு தெரிவிக்கிறாரா அல்லது வேறு காரணங்களுக்காக ஆதரவு தெரிவிக்கிறாரா என்று கவனிக்கவும்.

  - எடுத்துக்காட்டாக, ஒரு கட்சிக்குப் பால்புது நபர் ஆதரவு தெரிவிப்பதற்கு அவரது பாலின/பாலீர்ப்பு அடையாளம் காரணமா அல்லது மத/சாதி அடையாளம் காரணமா?

  - அனைவரையும் சமமாகக் கருதும் நிலைப்பாடு காரணமாகத்தான் பால்புதுமையினர் ஒரு கட்சிக்கு ஆதரவு தருகிறாரா என்று கவனிப்பது முக்கியமானது. எடுத்துக்காட்டாக, பால்புது உரிமைகள் தொடர்பாக ஒரு கட்சி சில வாக்குறுதிகளைத் தந்திருந்தாலும் வேலைவாய்ப்பு, மதம், சாதி உள்ளிட்ட மக்களை பாதிக்கும் முக்கிய விவகாரங்களில் அக்கட்சியின் நிலைப்பாடு தவறானதாக இருக்கும்பட்சத்தில் ஆதரவு தரப்படுகிறதா என்பதை கவனிக்கவும்.

- கீழ்க்கண்டவற்றைப் பற்றிய செய்திகளையும் செய்தியாளர்கள் வழங்க வேண்டும்:

- பால்புதுமையினரைக் குறிவைக்கும் அரசு செயல்பாடுகள், இயக்கங்கள் - எடுத்துக்காட்டாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல்
- பால்புதுமையினருக்கு உதவும் செயல்திட்டங்களில் அரசோடு இணைந்து பால்புதுமையினர் செயல்படுவது. எடுத்துக்காட்டு: நலத்திட்டங்கள் மற்றும் வீட்டுவசதி அமலாக்கம்.

- பால்புது மக்கள் மற்றும் சமூகங்கள் நடத்தும் பிரச்சாரங்கள். எடுத்துக்காட்டு: இடஒதுக்கீடு தொடர்பான பிரச்சாரங்கள்
  - பால்புதுமையினருக்கான கட்சிகளின் அரசியல் முன்னெடுப்புகள். எடுத்துக்காட்டு: கட்சிகளில் பால்புதுமையினர் எனும் தொழில்முறைத்தளம்.
  - பால்புதுமையினர் உரிமைக்கு எதிராக அரசியல் கட்சிகளால் நடத்தபப்டும் நிகழ்வுகள் மற்றும் பிரச்சாரங்கள். எடுத்துக்காட்டு: திருமண சமத்துவத்துக்கு எதிரான பிரச்சாரங்கள்
  - பால்புதுமையினரைப் பற்றிய அரசியல் கருத்துக்கள்: இந்தக் கருத்துக்களில் பயன்படுத்தப்படும் மொழி உரிமை சார்ந்து இருக்கிறதா அல்லது பரிதாபத்துடன் இருக்குறதா என்பதை சரிபார்க்கவும்.



# கல்வி

*கல்விக்கொள்கை, கல்விசார் இட ஒதுக்கீடு, பாலியல் கல்வி உள்ளிட்ட கல்வித்திட்டம், அணுகுதல் மற்றும் வேற்றுமை (கழிப்பறை, சீருடை, ஊட்டச்சத்து, தொடர் கல்வி, பள்ளிச்சேர்க்கை, பெயர் மற்றும் பாலினத்தை மாற்றுவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள்), வீடு, துன்புறுத்தல், ஆதரவுக் குழுக்கள், பால்புதுமையினரின் கல்விசார் சாதனைகள், கல்வியாளர்களாக இருக்கும் பால்புது நபர்கள் ஆகியவை பற்றி இந்தப் பகுதியில் பேசப்படுகிறது.*

- அரசாங்கமோ ஒரு அமைப்போ ஒரு புதிய கல்விக்கொள்கையைக் கொண்டுவரும்போது அந்தக் கொள்கையோ அல்லது அதிலிருக்கும் அம்சங்களோ பால்புதுமையினரையும் உள்ளடக்கியதாக இருக்கிறதா என்று செய்தியாளர்கள் கவனிக்க வேண்டும்.
    - எடுத்துக்காட்டாக, மாணவிகளுக்கான ஒரு இலவச பயணச்சீட்டை அரசாங்கம் அறிவிக்கும்போது, அது திருநர்கள் மற்றும் பாலின அடையாளங்களுடன் ஒத்துப்போகாதவர்களையும் (Gender Non Conforming people - GNC) உள்ளடக்கியதாக இருக்கிறதா?
- விரிவான மாநில மற்றும் தேசியக் கொள்கைகளை உருவாக்குப்வர்கள் பால்புதுமையினரையும் பங்குதாரர்களாக சேர்த்திருக்கிறார்களா?
    - எடுத்துக்காட்டாக, ஒன்றிய அரசு புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்துகிறது என்றால், பால்புது நபர்கள் மற்றும் சமூகத்தினர் கல்விச்சேவைகளை அணுகும் விதம், அவர்களுக்கான இட ஒதுக்கீடு ஆகியவை கொள்கை பிரச்சனைகளாக அணுகப்பட்டிருக்கின்றனவா? கொள்கை வரைவை இறுதிக்கட்டத்துக்குக் கொண்டு வருவதற்கு முன்பாக பால்புது நபர்கள், அமைப்புகள், சமூகத்தினர் ஆகியோரிடம் வெளிப்படையான உரையாடல் நடத்தப்பட்டதா?
- அரசால் வெளியிடப்படும் கல்விக்கான பட்ஜெட் அறிக்கைகளில், தனி கவனம் தேவைப்படும் விளிம்புநிலைக் குழுவினராக பால்புதுமையினர் மீது அக்கறை செலுத்தப்படுகிறதா?

- எடுத்துக்காட்டாக, கல்விக்கான ஒன்றிய பட்ஜெட்டில் பட்டியலின சாதிகள் மற்றும் பட்டியலின பழங்குடியினருக்கான கல்வி முன்னெடுப்புகளுக்காக தனி நிதி ஒதுக்கப்படுகிறது. இதே போன்ற திட்டங்கள் பால்புதுமையினருக்கும் இருக்கின்றனவா, அவற்றுக்குப் போதுமான நிதி ஒதுக்கப்படுகிறதா என்பதை ஊடகவியலாளர்கள் கவனிக்க வேண்டும்.

- ஆசிரியர்களுக்கான பயிற்சிகளில் உள்ள கொள்கைகள் மற்றும் திட்டங்கள் பால்புது நபர்களையும் உள்ளடக்கியவையாக இருக்கின்றனவா? பால்புதுமையினரைக் குறிப்பிட்டு வரவேற்கும் வேலைவாய்ப்பு அறிக்கைகள் உள்ளனவா? இந்த செயல்முறையில் பால்புதுமையினருக்கான சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் நடைமுறைகள் இருக்கின்றனவா?

- கல்விநிறுவனங்களின் உடை/சீருடை பற்றிய கொள்கைகள் பால்புதுமையின அடையாள வெளிப்பாடுகளை விலக்கி வைப்பவையாக இருக்கின்றனவா? பாலினம் சார்ந்த உடைகள் எல்லா மாணவர்கள்மீதும் திணிக்கப்படுகிறதா அல்லது தனிப்பட்ட விருப்பங்களுக்காக சில தளர்வுகள் அனுமதிக்கப்படுகின்றனவா?

- உயர்கல்வியின்போது பல திருநர்கள் தங்களது பெயர்கள் மற்றும் பாலினம் சார்ந்த அம்சங்களை ஆவணங்களில் மாற்றும்போது பல சிரமங்களை அனுபவிக்கிறார்கள். கல்வி நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளிடம் இந்த செயல்முறையை இலகுவாக்க ஏதும் கொள்கைகள் இருக்கின்றனவா என்பதை ஊடகவியலாளர்கள் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். மாணவர் சேர்க்கை, விண்ணப்பம் ஆகியவற்றின்போது இதற்கான நடைமுறைகள் இருக்கின்றனவா என்பதை கவனிக்க வேண்டும். ஒரு தனிப்பட்ட விஷயமாக மட்டுமே இதைப் பார்க்காமல் அமைப்புரீதியான விஷயமாகவும் இதை அணுகலாம்.

  - எடுத்துக்காட்டாக கல்வி நிறுவன/பல்கலைக்கழக ஆவணங்களில் பெயர்கள் மற்றும் பாலினம் சார்ந்த அம்சங்களை மாற்றுவதற்கு ஒருவர் எப்படி சிரமப்பட்டார் என்ற செய்தியை வழங்கும்போது, இதுபற்றிய கொள்கைகள்/தீர்ப்புகளை வாசிக்கவும். இது எப்படி ஒரு தொடர் பிரச்சனையாக இருக்கிறது என்பதைப்பற்றி செயற்பாட்டாளர்கள், சமூக உறுப்பினர்களிடம் பேசவும்.

- கல்வி பற்றிய செய்திகளில் பாலின அடையாளங்களுடன் ஒத்துப்போகாதவர்களுக்கான கழிப்பறை வசதிகள் இருக்கின்றனவா என்பதை கவனிக்கவும். சில நேரங்களில் இது தனி ஒரு உள்கட்டமைப்பு வசதியாக இருக்கலாம், அல்லது தங்களின் விருப்பத்திற்கேற்ப மாணவர்கள் கழிப்பறைகளைப் பயன்படுத்த அனுமதிக்கும் கொள்கையாக இருக்கலாம். இவற்றோடு மாணவர்கள்/பணியாளர்களிடமும் உணர்வுசார் புரிதலை ஏற்படுத்தினால்தான் பாலின அடையாளங்களுடன் ஒத்துப்போகாத மாணவர்கள் துன்புறுத்தப்படுவதைத் தவிர்க்கலாம்.

- பள்ளிகளில் மதிய உணவு மறுக்கப்படுவது பற்றிய செய்திகளில் பாலின அடையாளங்களுடன் ஒத்துப்போகாத மாணவர்களும் அதற்கு ஆளாகியிருக்கிறார்களா என்பதை கவனிக்கவும்.

- பள்ளி இடைநிற்றல், கல்வித் தொடர்ச்சி பற்றிய செய்திகளை பால்புது கோணத்திலும் அணுகவும். பல்வேறு காரணங்களால் பாலின அடையாளங்களுடன் ஒத்துப்போகாத மாணவர்கள் இடைநிற்பதைத் தடுக்க கல்வி நிறுவனங்களிடம் போதுமான செயல்பாடுகள் இருக்கின்றனவா? இந்தப் பிரச்சனைகளை சமாளிப்பதற்கான கல்விநிறுவனக் கொள்கைகள் இருக்கின்றனவா அல்லது குறிப்பிட்ட சூழல்களில் மட்டும் இவை ஒரு தீர்வாகப் பயன்படுத்தப்படுகின்றனவா?

- உண்டு உறைவிடப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பாலின அடையாளங்களோடு ஒத்துப்போகாத மாணவர்கள், பால்புது மாணவர்கள், தங்களது பாலின அடையாளத்தைக் கேள்வியோடு அணுகும் மாணவர்கள் ஆகியோரையும் மனதில் வைத்து தங்கும் விடுதிகள் கட்டப்பட்டு அறைகள் ஒதுக்கப்படவேண்டும். கல்வி வளாகங்களில் அறைகள் ஒதுக்கப்படும்போது எப்படிப்பட்ட கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன, பாலினம் சார்ந்த, பாலின வேறுபாடற்ற வெளிகள் சம அளவில் இருக்கின்றனவா என்பதை கவனிக்க வேண்டும். அப்போதுதான் தங்களுக்கு சௌகரியமான வெளியில் மாணவர்களால் பாதுகாப்பாக உணர முடியும். பாலின அடையாளங்களோடு ஒத்துப்போகாத மாணவர்களுக்கு பாதுகாப்பான வெளி தேவை எனும்போது அவர்களுக்காக தனி அறைகள் கிடைக்கின்றனவா?

- அரசாங்கத்தால் மாணவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படும்போது பாலின அடையாளங்களோடு ஒத்துப்போகாத மாணவர்களுக்கும் போதுமான ஒதுக்கீடுகள் இருக்கின்றனவா?
  - எடுத்துக்காட்டாக, பட்டியலின மாணவர்களுக்கான விடுதிகளில் ஒரு பாலின அடையாளங்களோடு ஒத்துப்போகாத மாணவருக்கான அறை ஒதுக்கீடு எப்படி வழங்கப்படுகிறது?

- கல்வி நிறுவனங்களில் பகடிவதை, துன்புறுத்தல் ஆகியவற்றுக்கு எதிரான கொள்கைகளில் பாலினம் சார்ந்த துன்புறுத்தல், பால்புது வெறுப்பு, தன்பாலீர்ப்பு வெறுப்பு, திருநர் வெறுப்பு ஆகியவையும் சேர்க்கப்படுகின்றனவா? ஏற்கனவே இருக்கும் அரசு சட்டங்களோடு இவை இயைந்திருக்கின்றனவா? கல்வி நிறுவனங்களில் துன்புறுத்தல்/ பகடிவதை, பாலின அடையாளங்களோடு ஒத்துப்போகாத மாணவர்களின் சுய துன்புறுத்தல் பற்றிய செய்திகளை வழங்கும்போது தனிப்பட்ட உதாரணங்களுக்கு அப்பாற்பட்டு இந்தக் கேள்விகளைக் கேட்க வேண்டும்.

- ஒரு துன்புறுத்தல் நிகழ்வைப் பற்றிய செய்தியை வழங்கும்போது பாதிக்கப்பட்டவரின் அடையாளம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யவும். அவர்களது பாலினம், பாலீர்ப்பு பற்றிய யூகங்களைத் தவிர்க்கவும். பாதிக்கப்பட்டவரிடம் பேசும் வாய்ப்பு கிடைத்தால் அவர்கள் எப்படி சித்தரிக்கப்படுகிறார்கள் என்பதற்கான ஒப்புதல் இருக்கிறதா என்பதை உறுதி செய்யவும்.

- கல்வி நிறுவனங்களில் பகடி வதை/துன்புறுத்தல் பற்றிய செய்திகளில், துன்புறுத்தல் பாலியல் ரீதியிலானது என்பதாலேயே அதை நிகழ்த்துபவரின் பாலீர்ப்பு இப்படிப்பட்டதுதான் என்பதை யூகிக்காதீர்கள்.

- எடுத்துக்காட்டாக, ஆணாக அறிப்படும் ஒரு மாணவர் இன்னொரு மாணவரைப் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கினார் என்பதால் அவர் தன்பாலீர்ப்பு கொண்டவர் என்று பொருளல்ல.

- பால்புது வெறுப்பு, தன்பாலீர்ப்பு வெறுப்பு, திருநர் வெறுப்பு ஆகியவற்றால் நடந்த பணிநீக்கம் பற்றிய செய்திகளில், பணிச்சூழல் பால்புது பணியாளர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கிறதா என்பதை நிறுவனம் உறுதிசெய்திருக்கிறதா என்று கேட்கவும். பொதுவான உணர்வுசார் புரிதல் ஏர்படுத்தப் பட்டிருக்கிறதா? பாலினம் மற்றும் பாலீர்ப்பினால் நடக்கும் துன்புறுத்தல் பற்றிய புகார்களை எடுத்துக்கொள்ளும் கொள்கைகள் எப்படி இருக்கின்றன என்பதுபோன்ற கேள்விகளை எழுப்பவும்.

- கல்வித்துறையில் உள்ள பிரச்சனைகளை அணுகும்போது, ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் என யார் வேண்டுமானாலும் பால்புதுமையினராக இருக்கலாம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும். ஒரு கல்வி நிறுவனம் அல்லது பொதுவான கல்வித்துறையில் இருக்கும் பிரச்சனைகளைப் பற்றிய செய்திகளில் இவர்களது குரல்களும் மையப்படுத்தப்படுவதை உறுதி செய்யவும்.
  - எடுத்துக்காட்டாக, ஒரு கல்வி நிறுவனத்தில் உள்ள அமைப்புரீதியான வன்முறையில் குறிப்பாக பாலியல் துன்புறுத்தல் பற்றிய செய்தியில், சிஸ் பெண்கள் மட்டுமல்லாமல் பாலின அடையாளங்களோடு ஒத்துப்போகாத மானவர்கள், பால்புது நபர்கள் போன்றோரும் துன்புறுத்தப்படலாம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும். ஆனால் துன்புறுத்தலைப் பாலீர்ப்போடும் பாலினத்தோடும் தொடர்புபடுத்தாமல் கவனமாக இருக்கவும். ஒரு ஆண் அல்லது பால்புது நபரைத் துன்புறுத்துபவர் ஆண் என்பதாலேயே அவர் தன்பாலீப்பு கொண்டவராக ஆகிவிடமாட்டார். இங்கு பிரச்சனை அவரது பாலீர்ப்பு அல்ல, அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் அவருடைய மனப்பான்மையே.

- கல்வி வளாகத்தில் நடக்கும் அரசியல் செயல்பாடுகள் மற்றும் இயக்கங்களில் பால்புது தலைவர்களின் பங்களிப்பை மையப்படுத்தவும்.

- மாணவர் சங்கம் பற்றிய செய்திகளில், அந்த சங்கங்கள் எல்லாரையும், குறிப்பாக தலைமைப் பொறுப்புகளில் பால்புதுமையினர் உள்ளிட்ட அனைவரையும் உள்ளடக்கியவையாக இருக்கின்றனவா என்று பார்க்கவும். அவர்களது பிரச்சாரத்தில் தன்பாலீர்ப்பு வெறுப்பு, திருநர் வெறுப்பு, பால்புது வெறுப்பு ஆகியவை இருக்கின்றனவா? என்பதையும் பார்க்கவும்.

- பால்புதுமையினருக்கு ஆதரவளிப்பதாக சொல்லிக்கொள்ளும் மாணவர் சங்கங்கள், கல்வி வளாகக் குழுக்கள், ஆதரவுக் குழுக்கள் ஆகியவை நடைமுறையில் அப்படியே இருக்கின்றனவா? பால்புதுமையினரின் பிரச்சனையை அவை முன்னெடுக்கின்றனவா? தலைமைப் பொறுப்பில் பால்புதுமையினர் இருக்கின்றனரா அல்லது இது ஒரு கண்துடைப்பா? இதுபோன்ற ஆதரவுக் குழுக்கள் உண்மையிலேயே அப்படி செயல்படுகின்றனவா என்பதை அறிய வளாகத்தில் உள்ள பால்புதுமையினரிடம் பேசவும்.

- திருநர்களுக்கான இட ஒதுக்கீடு பற்றிய செய்திகளை வழங்கும்போது இந்தியா முழுக்க பல மாநிலங்களில் உள்ள திருநர்கள் எப்படிப்பட்ட உரிமைகளைக் கோரியிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளவும். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின்படி, ஒன்றிய அரசு, மாநில அரசுகள், யூனியன் பிரதேசங்களின் அரசுகள் ஆகியவற்றுக்கு கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் பாதிக்கப்பட்டோருக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கும் இட ஒதுக்கீடு தர உரிமை உண்டு.

- வரலாற்று ரீதியாக இந்தியாவில் இருக்கும் திருநர் சமூகங்கள், அந்தந்த சாதிப் பிரிவுகளின்கீழ் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் கிடைமட்ட இட ஒதுக்கீடு வேண்டும் என்ற உரிமைக்குரலை எழுப்பியிருக்கின்றன. அதாவது, பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடியினர், பிற பிற்படுத்தப்பட்டோர், பொருளாதாரத்தில் பின் தங்கியோர் ஆகிய பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டுக்குள் உள் ஒதுக்கீடு, பொதுப்பிரிவில் திருநர்களுக்கான இட ஒதுக்கீடு ஆகியவை இதில் வரும். பிற பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் திருநர்களுக்கான இட ஒதுக்கீடு வேண்டும் என்று 2014 NALSA தீர்ப்பு பரிந்துரைத்திருந்தாலும் திருநர்கள் பல சமூகங்களிலிருந்து வரலாம் என்பதாலும், மத, சாதி அடையாளங்கள் மட்டுமல்லாமல் பாலின ரீதியாகவும் அவர்கள் விளிம்புநிலையில் இருக்கிறார்கள் என்பதால் அது சமநிலையற்றது/நியாயமற்றது என்ற விமர்சனம் எழுந்தது.

    - எடுத்துக்காட்டாக, உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான பிற பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டில் திருநர்களையும் சேர்ப்பதை ஒன்றிய அரசு பரிசீலித்து வருவதாக செப்டம்பர் 2021 இல் சொல்லப்பட்டது. இதை ஒரு செய்தியாக வெளியிடும்போது, திருநர்களுக்கான உரிமையை வழங்கும் ஒரு செயல்பாடாகவும், இதைத் திருநர்கள் வரவேற்பார்கள் எனவும் தெரியும். ஆனால் உள் இட ஒதுக்கீடு இல்லாததால், எல்லா சாதிகளைச் சேர்ந்த திருநர்களும் பெரிய அளவிலான பிற பிற்படுத்தப்பட்ட குழுவினரோடு போட்டி போடும் கட்டாயத்தை இது உருவாக்கும்.

- பாடத்திட்ட பரிந்துரைகள், மாற்றங்கள் ஆகியவை பற்றிய செய்திகளில் பால்புது செயற்பாட்டாளர்கள், பால்புது கல்வியாளர்கள், பால்புதுமையினர் என்று எல்லாரிடமிருந்தும் கருத்துகளை சேகரிக்கவும்.

    - எடுத்துக்காட்டாக, ஜனவரி 2023-இல் தேசியக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக் குழு *(National Council of Educational Research and Training - NCERT)* ஒரு கையேட்டை வெளியிட்டது. அனைத்துப் பாலினத்தவரையும் உள்ளடக்கியச் சூழலுக்கான பயிற்சிக் கையேடு இது. பல ஊடகங்கள் பால்புது செயற்பாட்டாளர்களிடம் பேசாமலேயே இதை ஒரு செய்தியாக மட்டும் வெளியிட்டன. இந்தக் கையேட்டில் பல தவறான கருத்துகள், திருநர்கள் மற்றும் ஊடுபால் நபர்கள் பற்றிய ஸ்டீரியோடைப் வழமையான புரிதல்கள் ஆகியவை இருப்பதாக பால்புது செயற்பாட்டாளர்கள் விமர்சித்தனர். ஒரு ஆவணம் என்ன சொல்கிறது என்பதை அப்படியே செய்தியாக வெளியிடாமல் பிரச்சனைக்குரிய வழிகாட்டுதல்களை சுட்டிக் காட்டுவது கல்விசார் செய்திகளை வழங்கும் ஊடகவியலாளர்களின் முக்கியப் பொறுப்பாகும்.

- பல்வேறு கல்வி நிறுவனங்கள் வழங்கும் பாலியல் கல்வித்திட்டம் பற்றிய செய்திகளில் பல்வேறு பாலினத்தவர், பாலீர்ப்புகள் ஆகியவை இருக்கின்றனவா என்று கவனிக்கவும். பாலியல் கல்வி பற்றிப் பேசும்போது எதிர்பாலீர்ப்பே வழமையானது என்ற கோணத்துக்கு அப்பாற்பட்டு அணுகவும்.

- பால்புது ஆசிரியர் அல்லது மாணவர் செய்திருக்கும் சாதனைகள் பற்றிய செய்திகளை ஆதிக்க மனநிலையோடு அணுகாதீர்கள். அவர்களது சாதனை பற்றிய செய்திகளைப் பாலீர்ப்பு அல்லது பாலினமாக மட்டும் சுருக்காதீர்கள். அது அவர்களது அடையாளத்தில் ஒரு பகுதி மட்டுமே.

    - எடுத்துக்காட்டாக ஒரு பால்புது நபர் சிவில் சர்வீஸ் தேர்வில் நல்ல தரவரிசையோடு வெற்றி பெற்றிருக்கிறார் என்றால் "முதல்முறையாக" என்பதான தலைப்புகளைத் தவிர்க்கவும். இதே தேர்வில் வெற்றிபெற்ற பல பால்புதுமையினர் வெளியில் தெரியாமலேயே இருக்கலாம். ஒரு பால்புது நபரின் வெற்றி வெளிச்சத்துக்கு வரும்போது சமூகத்தில் எங்களது இருப்பு இயல்பானதாக்கப் படுகிறது. பிற பால்புதுமையினருக்கு அது ஒரு எழுச்சி மனநிலையைத் தருகிறது. ஆனால், திறமைகளை விட்டுவிட்டு பால்புது அடையாளத்தை மட்டுமே முன்னிறுத்துவது ஒரு ஆதிக்க செயல்பாடாகும்.

# அறிவியல் புலத்தில் வரலாற்று ரீதியான பால்புதுமையின வெறுப்பும் குறைவான பால்புதுமையின பிரதிநிதித்துவமும்


அறிவியலும் கல்விப்புலமும் பாரபட்சமற்றவை என்பதே பரவலான பொதுக்கருத்தாகும். ஆனால் இது எப்போதுமே இப்படி இருப்பதில்லை என்று பல ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். அறிவியலில் மக்கள்தான் இயங்குகின்றனர். மக்களுக்கு சில அனிச்சையான மற்றும் தன்னுணர்வான பாரபட்சங்களும் இருக்கலாம் என்பதை அவர்கள் குறிப்பிடுகின்றனர். அறிவியல் மையங்களில் இருக்கும் வரலாற்று ரீதியான ஆழமான பால்புதுமையின வெறுப்பு, அங்கு பணிபுரியும் பால்புதுமையினருக்கு பாதுகாப்பற்ற சூழலை உருவாக்குகிறது. இது மட்டுமின்றி, அறிவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பாரபட்சமான மனநிலை ஆய்வுகளிலும் வெளிப்படுகிறது.

மனிதர்கள் மற்றும் விலங்குகளின் பாலினம் மற்றும் பாலீர்ப்பு பற்றிய பெரும்பாலான ஆராய்ச்சிகள் பாரபட்சமானவை என்று கண்டறியப்பட்டுள்ளது. இதனால் சில ஆய்வுக்குழுவினர் இந்தப் பிரச்சனை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளைத் தொடங்கியுள்ளனர். பால்புதுமையினரின் இருப்புக்கு ஊறு விளைவிக்காத வகையில் ஆராய்ச்சிகளை நடத்தவேண்டும். அதே நேரம் பாலினம் மற்றும் பாலீர்ப்பு பற்றிய விரிவான பார்வையும் தேவை. பாலினம், பால், பாலீர்ப்பு ஆகியவை பற்றிய கடுமையான சமூக சட்டகங்களுக்குள் மக்களை சுருக்குவது அறிவியலுக்கும் சமூக நீதிக்கும் எதிரானது.

எடுத்துக்காட்டாக, ஜர்னல் ஆஃப் என்விரான்மெண்டல் மேனேஜ்மெண்ட் என்ற ஒரு அறிவியல் ஆய்வு நூலில் சமீபத்தில் ஒரு ஆய்வுக்கட்டுரை வெளியானது. ஸ்பெயின் நாட்டில் உள்ள ஒரு மணற்குன்றுப் பகுதியில் தன்பாலீர்ப்பு கொண்ட ஆண்களின் செயல்பாடுகள் சுற்றுச்சூழலை பாதிக்கின்றன என்று அந்த ஆய்வு குறிப்பிட்டிருந்தது. இந்த ஆய்வுக்கட்டுரையில் தென்பட்ட பால்புதுமையினர் வெறுப்பு விமர்சிக்கப்பட்டது. சமூக வலைத்தளங்களில் கடும் எதிர்ப்பு எழுந்ததால் இந்தக் கட்டுரை திரும்பப் பெறப்பட்டது.

பல மருத்துவப் பாடநூல்கள் இப்போதும் தன்பாலீர்ப்பை பாலீர்ப்பு வழமையிலிருந்து விலகிய ஒரு அசாதாரண நிலையாகவே விவரிக்கின்றன. 1974 ஆம் ஆண்டு வரை அமெரிக்க மனநலக் கூட்டமைப்பின் பாடநூல்கள் தன்பாலீர்ப்பை ஒரு மனப்பிறழ்வு நிலையாக சித்தரித்திருந்தன. "Sociopathic Personality Disturbance" - அதாவது பிறரின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாத ஒரு ஆளுமைப் பிரச்சனையாக தன்பாலீர்ப்பு விவரிக்கப்பட்டது. மருத்துவம் சார்ந்த நூல்களில் பால்புதுமையின வெறுப்பைத் தவிர்ப்பதற்கு உலகமெங்கும் கடினமான போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. தேசிய மருத்துவ ஆணையம் அக்டோபர் 2021 இல் ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. கன்னித்தன்மை, பால்புதுமையின சமூகங்கள் மற்றும் அவர்களது பாலீர்ப்பு ஆகிய அம்சங்கள் பற்றிய அறியலுக்குப் புறம்பான, இழிவான மற்றும் பாரபட்சமான கருத்துக்கள் நிறைந்த கல்வித் திட்டங்களையும் நூல்களையும் மருத்துவ பல்கலைக்கழகங்கள், மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மையங்கள் ஆகியவை அங்கீகரிக்கக்கூடாது என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டிருந்தது. மருத்துவக் கல்வியில் பரலவாக இருக்கும் பால்புது வெறுப்பை சுட்டிக் காட்டும் சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அந்த உத்தரவில் மேற்கோள் காட்டப்பட்டிருந்தது. இது வரவேற்கத்தக்க ஒரு மாற்றம் என்றாலும், மருத்துவம் மற்றும் பிற அறிவியல் ஆய்வுகளில் இப்போதும் பால்புது வெறுப்பு நிலவுகிறது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பற்றிய செய்திகளை வழங்கும்போது அறிவியலாளர்களிடமும் அறிவியல் ஆராய்ச்சியிலும் நிலவும் பால்புதுமையினர் குறித்த பாரபட்சத்தை ஊடகவியலாளர்கள் எச்சரிக்கையுடன் கவனிக்க வேண்டும்.



# அறிவியல்

*பால்புதுமையினர் (LGBTQIA+ நபர்கள்) சம்மந்தப்பட்ட அறிவியல் ஆராய்ச்சிகள், பதிப்பகங்கள், கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பற்றி இந்த பகுதி விளக்குகிறது.*

- *பால்புதுமையினர் பற்றிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செய்திகளை வழங்கும்போது பரபரப்புத் தன்மையைத் தவிர்க்கவும். "கர்ப்பமான ஆண்", "மாதவிடாய்க்கு உள்ளாகும் ஆண்" போன்ற தலைப்புகள் தவறானவை மட்டுமல்ல, பால்புது வெறுப்பு கொண்டவை. இவை பால்புதுமையினரின் வாழ்க்கையைப் பரபரப்புக்கான கச்சாப்பொருளாகப் பயன்படுத்துகின்றன.*

- *பாலீர்ப்புத் தன்மையை மாற்றுவதாகக் கூறும் போலி மருத்துவம் பற்றிய தகவல்களைத் தவிர்க்கவும். அதில் இருக்கும் பால்புது வெறுப்பு பற்றியதாகக் கட்டுரை இருந்தால் மட்டுமே அதைக் குறிப்பிடவும்.*

- *நீங்கள் வாசிக்கும் அறிவியல் கட்டுரைகளில் போலி அறிவியல் இருக்கலாம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். பால்புதுமையினர் மற்றும் பாலினம் பற்றிய போலியான அறிவியல் கருத்துகள் அறிவியல் சொற்கள் மூலம் மூடி மறைக்கப்பட்டிருக்கலாம் என்பதையும் கவனத்தில் வைத்துக்கொள்ளவும். ஒரு பால்புதுமையினரோடு, முடிந்தால் பால்புது ஆராய்ச்சியாளரோடு இந்தக் கட்டுரைகளைப் பகிர்ந்து அவரிடம் இவற்றின் நம்பகத்தன்மை குறித்துக் கேட்டறியவும்.*

- *"மூன்றாம் பாலினம்" போன்ற சொற்களைப் பயன்படுத்துவது, திருநர்களின் வழங்கப்பட்ட பெயர்களைக் குறிப்பிடுவது, எதிர்பாலீர்ப்பே வழமையானது என்பதான கோணங்கள், அறிவியல் கட்டுரைகளில் உள்ள பால்புதுமையின வெறுப்பு மற்றும் பாரபட்சத்தை அடையாளம் காண உதவும். (சரியான பதங்களுக்கு சொற்களஞ்சியத்தைப் பார்க்கவும்)*

- *சில அறிவியல் ஆய்வேடுகள் மற்றும் மருத்துவப் பாடநூல்களில் பால்புதுமையினர் மீதான வெறுப்புணர்வு அல்லது இழிவாக சித்தரிக்கும் போக்கு இருக்கலாம். இவற்றிலிருந்து*

எந்த ஒரு தகவலையும் செய்திகளிலோ காணொளிகளிலோ பயன்படுத்துவதற்கு முன்பு பால்புதுமையினருடன் கலந்து ஆலோசிக்கவும்.

- போலிமருத்துவம், ஒருபால் புணர்ச்சி, ஒருபால் எண்ணங்களின் தோற்றம், பால்புதுமையினரிடம் பரவி இருக்கும் பண்புகள் போன்றவற்றைப் பற்றி எழுதப்படும் கட்டுரைகள் பெரும்பாலும் ஒருதலைப் பட்சமானதாகவே இருக்கும். அவற்றை மேற்கோள் காட்டுவதைத் தவிர்க்கவும்.
- உங்களது செய்திகளில் பேட்டி காணப்படுபவர்களின் பால்புது அரசியலை சரிபார்ப்பது அவசியம். அரசியல் ரீதியாக மிகச்சிறப்பாகவும் சரியாகவும் இருக்கும் ஒருவரைக் கண்டுபிடிப்பது இயலாத காரியம்தான். ஆனாலும் பால்புதுமையினர் உரிமை மற்றும் அனைவரையும் உள்ளடக்கியத் தன்மை ஆகியவை குறித்த அவர்களது பார்வையை சரிபார்ப்பது அவசியம், அப்போதுதான் பால்புதுமையினருக்கு எதிரான சமூக பாரபட்சங்களைத் தடுக்க முடியும்.
- ஒரு அறிவியல் கட்டுரையிலோ சொற்பொழிவிலோ, பால்புதுமையினர் பற்றிய தர்க்க ரீதியான ஒரு வாதத்தை வல்லுநர் முன்வைக்கிறார் என்பதாலேயே அது அறிவியல் ரீதியாக சரியானது என்றும் அனைவருக்குமானது என்றும் எடுத்துக்கொள்ள முடியாது.
    - எடுத்துக்காட்டாக, “பாலியல் ரீதியான சீண்டலுக்கு ஆளான பெண்களுக்கு ஆண்கள் மீதான வெறுப்பு ஏற்படுகிறது, அவர்கள் தன்பாலீர்ப்பு கொண்ட பெண்களாக மாறுகின்றனர்” என்ற வாக்கியம் சிலருக்கு தர்க்க ரீதியாக சரியானதாக இருக்கலாம். ஆனால் இது அறிவில் ரீதியாக உண்மையல்ல. இது அரசியல் சரிநிலையும் அல்ல.
- பாலினம் மற்றும் பெண்மை/ஆண்மை பற்றிய வழமைகள் ஆகியவை சமூகக் கட்டமைப்புகள் என்பதைப் புரிந்துகொள்ளவும். இவற்றை சொற்கள் அல்லது காட்சிகள் மூலம் தொடர்ந்து பரப்புவது பாலினப் பங்களிப்பு பற்றிய இருமையை நிலைநிறுத்துகிறது. பாலினத்தின் பரந்துபட்ட தன்மையை இது மறுதலிக்கிறது.
- விலங்குகள், இயற்கைக் கூறுகள், செயற்கைப் பொருட்கள் ஆகிய பாலினமற்ற அம்சங்களுக்குப் பாலின அடையாளங்கள் வழங்குவதைத் தவிர்க்கவும்.
- ஒரு அறிவியல் கட்டுரையைப் படிக்கும்போது அதில் பால்புதுக் கருத்ததாக்கத்தைப் (Queer Theory) பொருத்திப் பார்க்கவும். குறிப்பிட்ட கட்டுரையில் பால்புதுமையின வெறுப்பு இருக்கிறதா என்று கண்டறிவதற்கு இது உதவும்.

**அறிவியல் கட்டுரைகள் பற்றிய செய்திகளை வழங்குவதற்கான துணை நூல்கள்/கட்டுரைகள்:**


- *Queer Theory - An Introduction*, Annamarie Jagose, 1997.
- *Evolution's rainbow - Diversity, Gender and Sexuality in Nature and People*, 2009.
- *Queerphobic Immunopolitics in the Case of HIV/AIDS: Political Economy, the dark legacy of British Colonialism and Queerphobia in Sub-Saharan Africa* , Danil LR, 2021, Sexuality and Culture.



# பொழுதுபோக்கு

பொழுதுபோக்கு என்பதில் திரைப்படங்கள், நாடகங்கள், நாட்டிய நிகழ்ச்சிகள், நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சி, தொலைக்காட்சி நிகழ்ச்சி மற்றும் இலக்கியப் படைப்புகள் ஆகியவை அடங்கும்.

பால்புதுமையினர் சம்மந்தப்பட்ட பொழுதுபோக்கினை இரண்டு வகையாகப் பார்க்கலாம்.

- பால்புதுமையினரின் பங்கேற்போடு முழுக்க முழுக்க பால்புதுமையினரால் உருவாக்கப்படும் படைப்புகள்.
- மற்றவர்கள் உருவாக்கும் பால்புதுமையினரின் கதாப்பாத்திரங்கள் மற்றும் வாழ்வியலை உள்ளடக்கிய படைப்புகள்.

மற்ற பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதைப்போலவே பொழுதுபோக்குப் பிரிவிலும் அவர்களுக்கு வழங்க வேண்டிய மரியாதையை வழங்க வேண்டும்.

**பால்புதுமையினரால் உருவாக்கப்படும் படைப்புகள்**

- பால்புதுமையினரால் படைக்கப்படும் நாடகங்கள், அரங்க நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் பால்புதுமையினர் சார்ந்ததாகவோ பால்புதுமையினர் அல்லாத மற்றைய பொதுச் சமூகத்தினர் குறித்ததாகவோ இருக்கலாம். அந்த செய்திகளை எழுதும்போதோ அவர்களின் படங்களை விமர்சிக்கும்போதோ படைப்பாளியின் பால்/பாலின அடையாளத்தைக் கடந்து ஏனைய படைப்பாளிகளின் படைப்புகளைப் பற்றிய செய்திகளை எழுதுவது போலவே செய்திகளை எழுதுவதும், ஏனைய படைப்பாளிகளின் படைப்புகளை விமர்சனம் செய்வது போலவே விமர்சிப்பதுமே சரியானதாக இருக்கும். இருப்பினும் மற்றவர்களுக்கு பொழுதுபோக்குத்துறையில் கிடைக்கும் வாய்ப்பு, பால்புது சமூகத்தினைச் சார்ந்த ஒருவருக்கு கிடைக்கும்போது அதனை அடைய மற்றவர்களை விட பால்புது நபர் அதிக சிரமங்களை அனுபவித்திருக்கலாம் என்மதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

- பால்புதுமையினர் பொழுதுபோக்குத்துறையில் தங்களுக்கான இடத்தை உருவாக்குவது கடினமாக இருக்கும் காலகட்டத்தில் அந்த படைப்பினை உருவாக்குவதற்கு பின்னான கதைகளை பதிவு செய்வது அவசியமானால் ஒப்புதலோடு அதனை செய்யவும்.
- பால்புதுமையினரின் படைப்புகளிலும் படைப்பையும் படைப்பாளியையும் பிரித்துப் பார்ப்பது அவசியம்.
    - எடுத்துக்காட்டாக ஒரு எதிர்பாலீர்ப்பு கொண்ட ஆண் இயக்குனரின் திரைப்படத்தையோ படைப்பையோ விமர்சிக்கும்போது அவரது பாலினத்தைத் தாண்டி அவரை இயக்குனராக பார்க்கும் வழமையையே பால்புதுமையினரின் படைப்புகளிலும் பின்பற்ற வேண்டும்.
- பால்புதுமையினர் சமூகத்தைச் சார்ந்த எழுத்தாளர் ஒருவர் பால்புதுமையினர் சமூகத்தைச் சார்ந்த ஒருவரை முதன்மைக் கதாபாத்திரமாக கொண்ட புனைவுக்கதையினை எழுதும்போது அதனை ஒரு கற்பனைக் கதாபாத்திரமாக பார்க்க வேண்டுமே தவிர எழுத்தாளருடன் தனிப்பட்ட முறையின் அந்த பாத்திரத்தை தொடர்பு படுத்தி எழுதுவதையோ விமர்சிப்பதையோ செய்யக்கூடாது.
- ஒரு எழுத்தாளரின் தன்வரலாறு புத்தகமாக எழுதப்படும்போதோ, ஒரு கலைஞரின் வாழ்க்கைக்கதை நாடகமாகவோ, திரைப்படமாகவோ எடுக்கப்படும்போதோ மட்டுமே அவர்களது பாலின/பாலியல் அடையாளத்தை வெளிப்படையாக வாசகருக்கு தெரிவிக்கலாம். மற்றைய அனைத்து படைப்புகளுக்கும் படைப்பாளியின் ஒப்புதம் மிகவும் அவசியம். இந்த தகவல்களை வெளிப்படுத்தும்போது மரியாதையான பதங்களை பயன்படுத்துவதும் அவற்றை படைப்பாளிக்கு முன்னரே தெரிவிப்பதும் அவசியம்.
- பால்புதுமையினரின் கதாப்பாத்திரங்கள் மற்றும் வாழ்வியலை உள்ளடக்கிய படைப்புகள்: பொழுதுபோக்குத் துறையில் பால்புதுமையினருக்கான இடம் மிகக்குறைவாகவே இருக்கும் சூழ்நிலையில் பால்புதுமையினர் அல்லாத மற்றவர்களாலேயே பெரும்பாலான பால்புதுமையினர் பற்றிய படைப்புகள் உருவாக்கப்படுகின்றன.
    - பால்புதுமையினரை உள்ளடக்கி உருவாக்கப் பட்டிருக்கிறது என்பதாலேயே அந்த படைப்பு சிறந்த சரியான படைப்பாகத் தான் இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை.
    - பால்புதுமையினரை கதாபாத்திரங்களாக கொண்டு உருவாக்கப்படும் இம்மாதிரியான படைப்புகளில் கதாபாத்திரங்கள் நேர்மையாகவும் கண்ணியமான முறையிலும் சித்தரிக்கப்படவில்லை எனும் கண்டனங்கள் பால்புதுமையினர் சமூகத்தில் இருந்து எழும்போது அவர்கள் பக்கமிருந்து அந்த படைப்புகளை விமர்சிப்பதே அறமாகும்.
    - குறிப்பிட்ட பால்புதுமையினரின் அடையாளங்கள் கதையோட்டத்தில் தேவைப்பட்டிருக்கிறதா அல்லது நகைப்புக்காக பயன்படுத்தப்பட்டிருக்கிறதா

என்பதனை நன்கு ஆராய்ந்து செய்திகளை எழுதுவதும் ஒரு ஊடகவியலாளரின் கடமையாகும்.

- பால்புதுமையினரின் உடல் அசைவுகள், நடவடிக்கைகள், ஒப்பனைகளை கேலிசெய்யும் விதமாகவும் நகைப்பை ஏற்படுத்தும் விதமாகவும் ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கண்டிப்பதும் ஊடகவியலாளரின் முக்கியப் பணியாகும்.

**நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சி**

- திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இலக்கியப்படைப்புகள் மட்டும் அல்லாது சிறுநகரங்கள் மற்றும் கிராமங்களில் நடைபெறும் பெரும்பாலான பொழுதுபோக்கு நிகழ்வுகளில் பால்புதுமையினரின் கலைநிகழ்ச்சிகள் காலம்காலமாக நடந்து வருகின்றன.

  எடுத்துக்காட்டு; தெருக்கூத்து, கரகாட்டம், மேடை நடனங்கள்.

- மேற்கூறிய நிகழ்வுகள் நடக்கும்போது அதனை பல்புதுமையினர் அல்லாத கலைஞர்கள் பங்கெற்கும் நிகழ்வினைப் பற்றி எழுதும் தொனியிலேயே எழுத வேண்டும்.

- அவசியம் என நினைத்தால் நிகழ்ச்சி நடத்தும் கலைஞர்களின் கலைப்பங்களிப்பைக் குறித்தும், குறிப்பிட்ட கலைவடிவம் வளர்ச்சியடைய அவர்கள் செய்த பணிகளைக் குறித்தும் எழுதவேண்டும்.

- பால்புதுக் கலைஞர்கள் பங்கேற்கும் நிகழ்வுகளில் சட்டப்பாதுகாப்பின் போதாமை காரணமாக நடைபெறும் குற்ற நிகழ்வுகளை மற்ற குற்றநிகழ்வுகளைக் குறித்து எழுதுவது போலவே எழுத வேண்டும். இதற்கான நடைமுறைகளை குற்றம் பகுதியில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

- முக்கியமாக, கலைத்துறையிலோ பொழுதுபோக்குத் துறையிலோ இருக்கும் பால்புதுமையினரைப் பற்றிய செய்தியினை சேகரிக்கும்போது அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் செய்திகளை சேகரிக்க வேண்டும்.

# திருநர்கள் மற்றும் ஊடுபால் கொண்ட தடகள வீரர்களைப் பற்றி அறிவியல் சொல்வது என்ன?

**சயந்தன் தத்தா**

1985 இல் ஸ்பெயினைச் சேர்ந்த தடகள வீரரான மரியா ஹோஸ் மார்டினெஸ்-படினோ உலக பல்கலைக்கழக விளையாட்டுகளில் கலந்து கொள்வதற்காக ஜப்பானின் கோபேவுக்குச் சென்றிருந்தார். அங்கு அவருக்கு இரண்டாவது "பெண்மை சோதனை" நடத்தப்பட்டது. அவரது கன்னத்தின் உட்புறத்திலிருந்து சில செல்கள் சேகரிக்கப்பட்டு, அவருக்கு இரண்டு எக்ஸ் மரபிழைகள் (Chromosomes) இருக்கின்றனவா என்ற சோதனை நடத்தப்பட்டது. பந்தயத்துக்கு முதல் நாள் இரவு அவரது சோதனையில் ஒரு பிரச்சனை இருப்பதாக மருத்துவர் தெரிவித்தார். மறுநாள் நடக்க இருக்கும் பந்தயத்தில் அவர் பங்குபெறுவதற்குத் தடை ஏற்பட்டிருப்பதாகவும் கூறினார்.

இரண்டு மாதங்கள் கழித்து அவரது சோதனை முடிவுகள் ஸ்பெயினின் விளையாட்டுக் கூட்டமைப்பை சென்றடைந்தன. அவரது உடலில் எக்ஸ்-எக்ஸுக்கு பதிலாக எக்ஸ்-ஒய் இருப்பதாக வந்த அறிவிப்பு அவரது உலகத்தையே நொறுங்கவைத்தது.

1986 இல் ஒரு தடை ஓட்டத்தில் அவர் வெற்றி பெற்றபோது அவரைப் பற்றிய விவரங்கள் ஊடங்களில் கசிந்தன. அவர் எதிர்காலத்தில் பந்தயத்தில் கலந்துகொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டது, அவரது விளையாட்டு ஊக்கத்தொகை திரும்பப் பெறப்பட்டது. தடகள ஆவணங்களிலிருந்து அவரது பந்தய விவரங்கள் அழிக்கப்பட்டன. எக்ஸ்-எக்ஸ் மரபிழைகளைக் கொண்ட பிற பெண்களோடு ஒப்பிடும்போது அவரது மரபிழை அமைப்பு அவருக்குத் தேவைக்கதிகமான சாதகத்தைத் தந்துவிடுகிறது என்ற நம்பிக்கையே அவருக்கு எதிராக நடந்த அநீதிக்குக் காரணம்.

## ஆண்டீரோஜன் எங்கே?

மனிதர்களில் உள்ள ஒய் மரபிழையில் "பால் என்ன என்பதை உறுதி செய்யும் பகுதி" இருக்கிறது. இதை சுருக்கமாக sry என்பார்கள். தாயின் கருவறையில் ஒரு கரு வளரும்போது இந்த மரபணு ஒரு புரதத்தை உருவாக்குகிறது, இதுவே விந்தகம் வளர்வதற்குக் காரணமாக

அமைகிறது. "ஆண் ஹார்மோன்" என்று அழைக்கப்படும் டெஸ்டோஸ்டிரோனை விந்தகம் உருவாக்குகிறது.

பருவமடையும்போது டெஸ்டோஸ்டிரோன் அளவுகள் உச்சத்தை அடைகின்றன. இதனால் எலும்புகளின் நீளமும் பலமும் அதிகரிக்கிறது. தசைகளின் நிறையும் பலமும் அதிகரிக்கின்றன, ஹீமோக்ளோபின் ஓட்டம் அதிகரிக்கிறது, சில நேரங்களில் உளவியல் மற்றும் நடத்தைசார்ந்த மாறுபாடுகளும் ஏற்படலாம். சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால், ஆண்களின் உடலில் டெஸ்டோஸ்டிரோன் அளவு உச்சமடையும்போது தடகளம் மற்றும் விளையாட்டுகளில் பங்குபெறும் பெண்களைவிட சாதகங்கள் ஏற்படலாம்.

இந்த யூகத்தில் ஒரு பிரச்சனை இருக்கிறது. பல உயிரியல் மூலக்கூறுகளைப் போலவே டெஸ்டோஸ்டிரோன் ஹார்மோனும் இயங்குவதற்கு ஏற்பிகள் (Receptors) தேவை. 12 வாரங்கள் தொடர்ந்த பலம்சார் பயிற்சியில் ஈடுபட்ட ஆண் உடல்களில் யாருக்கு அதிகமான தசை நிறை ஏற்பட்டதோ, அவர்கள் மிக அதிகமான டெஸ்டோஸ்டிரோன் அளவு கொண்டவர்கள் அல்ல என்பதும் அதிகமாக டெஸ்டோஸ்டிரொன் ஏற்பி கொண்டவர்கள் என்பதும் உறுதியாகியிருக்கிறது. இந்த ஏற்பிகளை Androgen receptors என்று அழைக்கிறார்கள்.

மார்டினஸ்-படினோவுக்கு ஆண்ட்ரோஜென் உணர்வின்மை (Androgen insensitivity) இருந்தது. அதாவது, அவரது உடலில் இருந்த ஆண்ட்ரோஜென் ஏற்பிகள் டெஸ்டோஸ்டிரோனோடு எந்தவகையிலும் இணையவில்லை. ஆகவே, மருத்துவ அறிக்கையில் மட்டுமே பால்தன்மை குறிப்பிடப்பட்டிருந்தது என்றாலும் அவரது மரபிழைகள் எந்தவகையிலும் அவரது பால்தன்மையை நிர்ணயிக்கவில்லை. விஞ்ஞானிகள், செயற்பாட்டாளர்கள், பத்திரிக்கையாளர்கள் ஆகியோரின் ஆதரவால் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவரது நிலை மாறியது. 1988 இல் சர்வதேச தடகள கூட்டமைப்பு அவருக்கு பந்தயத்தில் பங்கேற்க அனுமதி வழங்கியது.

ஆனால் ஒரு விஷயம் மாறாமல் இருந்தது: அதிகமான டெஸ்டோஸ்டிரோன் இருப்பவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளில் சாதகங்கள் அதிகம் என்ற நம்பிக்கை மாறவேயில்லை. இந்த நம்பிக்கை காரணமாக திருநங்கைகள், ஊடுபால்தன்மை கொண்டவர்கள், ஏற்கப்பட்ட அளவுகளை விடவும் கூடுதலான டெஸ்டோஸ்டிரோன் கொண்டவர்கள் ஆகியோர் தடகள நிகழ்வுகளிலிருந்து விலக்கப்பட்டு வருகின்றனர்.

மார்டினெஸ் படினோவிற்கு நடந்த அனைத்துமே சாந்தி சௌந்தரராஜனுக்கு நடந்ததை நினைவுபடுத்துகிறது. தோஹாவில் 2006 இல் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வாங்கிய முதல் பெண் இவர். ஆனால் இவருக்கு பால்தன்மை சோதனை நடத்தப்பட்டது. அதில் அவர் தோற்றதால் அவரிடமிருந்து பதக்கம் பறிக்கப்பட்டது, விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுக்க அவருக்குத் தடை விதிக்கப்பட்டது.

மார்டினெஸ் படினோவைப் போலவே சாந்தி சௌந்தரராஜனுக்கும் ஆண்ட்ரோஜென் உணர்வின்மை இருந்தது.

## அறிவியல் என்ன சொல்கிறது?

சாந்தி சௌந்தரராஜன், மார்டினஸ் படினோ, பிங்கி ப்ரமாணிக், டூட்டி சந்த் போன்ற பலருக்கு நடந்த நிகழ்வுகளின் அடிப்படையில் இரண்டு சர்ச்சைக்குரிய, பிரபலமான நம்பிக்கைகள் இருக்கின்றன: முதலாவது, ஒரு நபரின் பால் ஆண் அல்லது பெண் ஆகிய இரண்டில் ஒன்றாகத்தான் இருக்க முடியும். இரண்டாவது, மரபிழைகள் மற்றும் ஹார்மோன்களின் தொகுதியை வைத்து ஆண்தன்மை அல்லது பெண்தன்மையை சரியாக அளக்க முடியும்.

*Sex/Gender: Biology in a Social World* (2012) என்ற நூலில், உயிரியலாளரும் பெண்ணியவாதியுமான ஆன் ஃபாஸ்டோ-ஸ்டெர்லிங், உயிரியல் பால்தன்மையின் பல அடுக்குகளை பிரித்து விளக்குகிறார். இந்த அடுக்குகள் 1950கள், 60களில் மருத்துவர்/செக்ஸாலஜிஸ்ட் ஜான் மோனேவால் தரப்பட்டவை. “பாலின அடுக்குகள்” என்று அழைக்கப்படும் இந்த மாதிரியின்படி ஒவ்வொரு தனிநபரும் எக்ஸ் மற்றும் ஒய் ஆகிய மரபிழைகளின் ஒரு சரியான தொகுப்பு காரணமாக மரபிழை பாலுடன் (Chromosome sex) தங்களுடைய வாழ்க்கையைத் தொடங்குகிறார்கள். ஆனால் கருவுக்கு 8-12 வாரம் வயது ஆனபிறகு “வேறுபாடற்ற பால்தன்மை” தோன்றும். பால் மரபிழைகளில் சில குறிப்பிட்ட மரபணுக்கள் வெளிப்படும்போதுதான் கருவின் உடலில் பாலுறுப்புகள் தோன்றும். இதையே “கருவின் பாலுறுப்புப் பால்” (Foetal Gonadal Sex) என்று ஃபாஸ்டோ-ஸ்டெர்லிங் விளக்குகிறார்.

பாலுறுப்புகள் “செக்ஸ் ஹார்மோன்களை” சுரக்கின்றன. இதன்மூலம்தான் கருவின் பாலுறுப்பு பால் உருவாகிறது. இதன்மூலம் ஃபலோபியன் குழல்கள், அண்டகம், விந்தகம், செமினல் குழல்கள் போன்ற பாலுறுப்புகள் உருவாகின்றன. இந்த சூழலில் கருவுக்கு உள்ளார்ந்த இனப்பெருக்கம் சார்ந்த பால்தன்மை வந்துவிடுகிறது. கரு வளர்ச்சியின் நான்காவது மாதத்தில் பிறப்புறுப்புகள் உருவாகின்றன, இதனால் கருவிற்கு பிறப்புறுப்பு சார்ந்த பால்தன்மை வருகிறது.

இதைப் போலவே பருவமடையும்போது பால்சார்ந்த ஹார்மோன்கள் உச்சத்துக்கு வரும்போது ஒரு தனிநபருக்கு பருவம்சார் ஹார்மோன் பால்பண்பு வருகிறது, அவர்களது வெளிப்புற உடல் அமைப்பை நிர்ணயம் செய்வதில் இதற்கும் பங்கு உண்டு. ஃபாஸ்டோ-ஸ்டெர்லிங் இதை பருவம்சார் உடலமைப்பு பால் என்று அழைக்கிறார்.

இந்த அடுக்குகள் ஒன்றோடொன்று இயைந்து இருக்க வேண்டியதில்லை என்று அவர் எச்சரிக்கையுடன் குறிப்பிடுகிறார். இவை தனிச்சையாகவும் ஒன்றோடொன்று தொடர்பில்லாமலும் உருவாகலாம் என்கிறார். ஆண்ட்ரோஜன் உணர்வின்மை இதற்கு ஒரு உதாரணமாகும். இந்த நிலை ஏற்படும்போது மரபிழைகளின் பால்தன்மையும் கருவின் பாலுறுப்புப் பால்தன்மையும் ஒரு நபரின் பிற பால் அடுக்குகளோடு இயைந்து செயல்படாமல் இருக்கும்.

ஆகவே உயிரியல் ரீதியான பால்தன்மை என்பது மரபிழைகள், இனப்பெருக்க உறுப்புகள், ஹார்மோன்கள் என எதனாலும் நேரடியாக நிர்ணயிக்கப்படுவதில்லை. எல்லா பால் அடுக்குகளும் ஒன்றோடொன்று பொருந்திப்போகும்போது ஒரு நபரை “ஆண்” மற்றும்

“பெண்” என மரபு ரீதியாகக் குறிப்பிடுகிறோம். ஆனால் வழக்கத்துக்கு மாறாக இவை ஒன்றோடொன்று இணையும்போது ஊடுபால் நபர்கள் பிறக்கிறார்கள்.

முப்பதுக்கும் மேற்பட்ட ஊடுபால் வகைமைகள் இதுவரை ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாகக் கணக்குகள் குறிப்பிடுகின்றன. ஆண்ட்ரோஜன் உணர்வின்மையின்போது ஒரு நபரின் மரபிழைப் பாலானது எக்ஸ்-ஒய் என்பதாகவே இருக்கும். ஆனால் டெஸ்டோஸ்டிரோனுக்கு அவர்கள் எதிர்வினை புரியாவிட்டாலோ எதிர்ப்புத்தன்மை கொண்டிருந்தாலோ கருவின் பாலுறுப்பு பால், உள்ளார்ந்த இனப்பெருக்கம் சார்ந்த பால், பருவம்சார் ஹார்மோன் பால் ஆகியவை குறிப்பிடத்தக்க வகையில் மாறுபடும்.

பெண்களுக்கான தடகளப் போட்டிகளில் திருநங்கைகள் பங்கெடுப்பதற்குத் தடை விதித்து 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த குடியரசுக் கட்சியினர் வாக்களித்தனர் என்று நியூயார்க் டைம்ஸ் தெரிவிக்கிறது. இந்த மசோதா நிறைவேற்றப்படுவதற்கோ அதிபரின் ஒப்புதலை பெறுவதற்கோ எந்த வாய்ப்பும் இல்லை. ஆனால் தங்களது பாலின அடையாளத்துக்கு ஏற்ற வகைமையில் திருநங்கைகள் பங்கேற்பதைப் பற்றிய சர்ச்சையில் இதுவும் முக்கியமானதுதான்.

திருநங்கைகள் ஹார்மோன் மாற்று சிகிச்சை மேற்கொள்ளும்போது டெஸ்டோஸ்ட்ரோனைத் தடுக்கும் ஒரு வேதிப்பொருளும் ஈஸ்ட்ரோஜென் சேர்மமும் தரப்படுகிறது என்பதால் அவர்களது டெஸ்டோஸ்டிரோன் அளவு பெருமளவில் குறைகிறது, இது சிஸ் பெண்களின் உடலில் உள்ள டெஸ்டோஸ்டிரோன் அளவுக்கு உட்பட்டே இருக்கிறது என்பதை அங்கீகரித்து சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி 2004 இல் திருநர்களும் ஒலிம்பிக்ஸில் பங்கேற்கலாம் என்று அறிவித்தது. இது வரலாற்று சிறப்புமிக்க ஒரு அறிவிப்பாகும்.

பங்கேற்க விரும்பிய திருநங்கைகளுக்குக் கீழ்க்கண்ட வழிகாட்டுதல்கள் தரப்பட்டன: அவர்கள் பாலின உறுதி அறுவைசிகிச்சை மேற்கொண்டிருக்க வேண்டும், அதிகாரபூர்வமாக அவர்களது பாலினம் அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும், இரண்டு ஆண்டுகள் உறுதிசெய்யத்தக்க ஹார்மோன் மாற்று சிகிச்சை மேற்கொண்டிருக்க வேண்டும் என சயின்ஸ் ஆய்வேட்டில் 2018 இல் குறிப்பிடப்பட்டிருந்தது,

இந்த வழிகாட்டுதல்கள் வந்த பிறகும், முன்பு டெஸ்டோஸ்டிரோனை எதிர்கொண்டவர்கள் என்பதாலேயே சிஸ் பெண்களோடு ஒப்பிடும்போது ஹார்மோன் மாற்று சிகிச்சைக்குப் பிறகும்கூட திருநங்கைகளுக்குப் போட்டித் தகுதி அதிகம் என்ற யூகம் தொடர்ந்தபடியே இருக்கிறது.

2021 இல் அமெரிக்காவைச் சேர்ந்த இரண்டு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்கள் இணைந்து ஒரு ஆய்வறிக்கையை வெளியிட்டனர். இரண்டு ஆண்டுகள் ஹார்மோன் மாற்று சிகிச்சை பெற்றபிறகு திருநங்கைகளின் உடற்பயிற்சித் திறன் சிஸ் பெண்களின் உடல் தகுதியை ஒத்திருந்தது என்று அவர்கள் உறுதிப்படுத்தினர். ஆனால் டெஸ்டோஸ்டிரோன் தடுப்பு வேதிப்பொருள், ஈஸ்ட்ரோஜென் சேர்மம் ஆகியவை இரண்டு ஆண்டுகள் தரப்பட்டபின்பும் உடற்பயிற்சி செய்யும் வேகம் 12% கூடுதலாக இருந்ததாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டது.

டெஸ்டோஸ்டிரோனை எதிர்கொண்டதால் தடகளப் போட்டிகளில் திருநங்கைகளுக்குக் கூடுதல் சாதகங்கள் ஏற்படலாம் என்ற முடிவுக்கு உரம் சேர்ப்பதாக இது தெரியலாம். ஆனால் இந்த ஆய்வில் பல வரையறைகள் இருந்தன. ஆய்வாளர்களே இதை ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிட்டிருக்கின்றனர். இதில் முக்கியமானது என்னவென்றால், ஹார்மோன் மாற்று சிகிச்சை மேற்கொள்ளாத திருநங்கைகள் இந்த ஆய்வில் ஒப்பீட்டுக்காக சேர்க்கப்படவில்லை. ஆகவே இந்த முடிவுகள், திருநங்கைகளின் உடலில் மிச்சமிருக்கும் டெஸ்டோஸ்டிரோனை மட்டுமே பிரதிபலிக்கின்றனவா என்ற கேள்வி எழுகிறது. இந்த முடிவுகள் காலமாற்றத்தால் செயல்திறனில் ஏற்பட்ட மாற்றத்தையும் காட்டியிருக்கலாம்.

திருநங்கையும் தடகள வீரருமான ஜோயனா ஹார்பர் 2021 இல் ஒரு ஆய்வுக்கட்டுரையை தனது தலைமையிலான ஆய்வுக்குழுவினருடன் வெளியிட்டார். இதில் ஹார்மோன் மாற்று சிகிச்சை ரத்தத்தில் ஹீமோக்ளோபினின் அளவைக் குறைப்பதாக ஒரு கருதுகோளை முன்வைத்தார். ஹீமோக்ளோபின் என்பது ரத்தத்தில் ஆக்சிஜனை எடுத்துச் செல்லும் ஒரு மூலக்கூறாகும். திருநங்கைகளின் உடலில் ஹீமோக்ளோபின் குறைந்திருந்தாலும் பலம், கொழுப்புக்கு அப்பாற்பட்ட உடல் நிறை, தசைகளின் பரப்பளவு ஆகியவை சிஸ் பெண்களுடையதை விட அதிகமாக இருக்கிறது என்று கூறினார். ஹார்மோன் சிகிச்சைக்கு முந்தைய அளவை விட இந்த அளவுகள் ஒப்பீட்டளவில் குறைந்திருந்தாலும் சிஸ் பெண்களுடன் ஒப்பிடும்போது இந்த அளவுகள் அதிகமாக இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஏப்ரல் 2023 இல் சயின்ஸ் சஞ்சிகையில் வெளியான ஒரு ஆய்வுக்கட்டுரையில், "தடகள வீரர்களின் ஹீமோக்ளோபின், தசை நிறை ஆகியவற்றை வைத்து திருநங்கைகளால் கூடுதல் வேகத்துடன் ஓட முடியுமா, அதிக உயரம் தாண்ட முடியுமா, அதிக தூரம் தூக்கிப் போட முடியுமா என்றெல்லாம் சொல்ல முடியாது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

2015 இல் தடகளத்தில் திருநங்கைகளின் செயல்திறன் பற்றிய முதல் ஆய்வு ஹார்பரால் வெளியிடப்பட்டது. ஆய்வுக்குழுவில் இல்லாத ஒரு விஞ்ஞானி இதை "எல்லாவற்றையும் புரட்டிப் போடும் ஆய்வு" என்று குறிப்பிட்டார். "ஹார்மோன் மாற்று சிகிச்சைக்கு முன்பாக ஆண் தடகள வீரர்களுடன் இவர்கள் போட்டியிட்டிருக்கின்றனர். ஹார்மோன் சிகிச்சைக்குப் பிறகு சிஸ் பெண் தடகள வீரர்களுடன் இதே திருநங்கைகள் போட்டியிட்டனர். செயல்திறனில் இவர்களிடம் எந்த மாற்றமும் தென்படவில்லை" என்று அவர் கண்டறிந்தார். அதாவது ஹார்மோன் சிகிச்சை பெற்ற திருநங்கைகள் சிஸ் பெண்களுடன் ஒப்பிடும்போது எந்தவிதமான தனிப்பட்ட பயன்களையும் பெற்றிருக்கவில்லை.

உடலில் அதிக டெஸ்டோஸ்டிரோன் இருப்பவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பாக இயங்குவார்கள் என்பதை நம்பினால், ஹார்மோன் மாற்று சிகிச்சைக்காக டெஸ்டோஸ்டிரோன் எடுத்துக்கொள்ளும் திருநம்பிகளின் நிலை என்ன?

டெஸ்டோஸ்டிரோனை எடுத்துக்கொண்டாலும் சிஸ் ஆண்களோடு ஒப்பிடும்போது திருநம்பிகளுக்கு எந்தவிதமான கூடுதல் பயனும் இல்லை என்று நம்பப்படுகிறது. சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் திருத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் (2015), "ஆண்களுக்கான

போட்டிகளில் திருநம்பிகள் கலந்துகொள்வதில் எந்தக் கட்டுப்பாடும் இல்லை" என்று அறிவித்திருந்தன, இந்த வழிகாட்டுதல் அதையே பிரதிபலிக்கிறது.

ஆனால் மேலே குறிப்பிடப்பட்ட 2021 ஆய்வுக்கட்டுரையில் ஒரு ஆண்டு டெஸ்டோஸ்டிரோன் எடுத்துக்கொண்டபிறகு சிஸ் ஆண்களோடு ஒப்பிடும்போது திருநம்பிகளின் சிட்-அப் உடற்பயிற்சிகள் மேம்பட்டதாக இருந்தன என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஒலிம்பிக் கமிட்டியின் வழிகாட்டுதல் இதனோடு முரண்படுகிறது.

ஆகவே டெஸ்டோஸ்டிரோன் அல்லது தற்போது அதிகமாக விமர்சிக்கப்படும் அறிவியல் தரவுகள் ஆகியவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டு, பெண் உடல் பலவீனமானது, ஆண் உடல் பலம் வாய்ந்தது என்ற வழமையான புரிதலே பிரச்சனையின் மையப்புள்ளி. இதைவிட முக்கியமானது என்னவென்றால், டெஸ்டோஸ்டிரோனின் செயல்திறன் சார்ந்த பயன்கள் பற்றிய சொல்லாடல்கள் இப்படிப்பட்ட பார்வைகள் இயற்கையானவை தான் என்றும் நிறுவ முயற்சி செய்கின்றன.

உயிரியல் ரீதியான கணக்கெடுப்புகள் தவிர பிற தரவுகளை வைத்துக்கொண்டு தடகளப் போட்டிகளில் சிஸ் பாலினத்தவருக்கும் திருநர்களுக்கும் வேறுபாடு இருக்கிறதா என்பதைப் புரிந்துகொள்ள முடியும். எடுத்துக்காட்டாக 2022 இல் அமெரிக்காவின் பல்கலைக்கழக நீச்சல் போட்டிகளில் கோப்பை வென்ற திருநங்கையான லியா தாமஸ், பிற சிஸ் நீச்சல் வீராங்கனைகளோடு ஒப்பிடும்போது கூடுதல் செயல்திறனுடன் இருக்கிறார் என்று நாம் வாதாடலாம். ஆனால் அதற்கு முந்தைய நீச்சல்களை ஈர்க்கக்குடிய அளவில் அவர் செய்திருந்தாலும் அவர் முன்பு எடுத்துக்கொண்ட நேரம் பெரிய சாதனைகள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

திருநங்கையான லாரல் ஹப்பார்ட் 2020 டோக்யோ ஒலிம்பிக்ஸில் பெண்கள் பளு தூக்கும் போட்டியில் பங்கெடுத்தார், ஆனால் அவரால் மூன்று நிலைகளிலும் பளுவைத் தூக்க முடியாததால் போட்டியை விட்டு வெளியேற்றப்பட்டார்.

இந்த உதாரணங்கள் போதாது என்றால் சமீபத்திய லண்டன் மாரத்தானை எடுத்துக்கொள்வோம். திருநங்கையான க்ளெனிக் ஃப்ராங்க், தரவரிசைப் பட்டியலில் 6159 ஆவது இடத்தைப் பிடித்தார். அவரது செயல்திறன் சுமாரானதாக இருந்தாலும், பட்டியலில் அவருக்கு மேலே இருந்த 6,000+ பெண்களை முன்னிறுத்தாமல், ஊடகங்கள் அவருக்குப் பின்னால் இருந்த 14,000+ பெண்களையே மையப்படுத்தின.

தாங்கள் எந்தப் பாலினமாக உணர்கிறோமோ அந்தப் பாலின வகைமையில் திருநர்கள் போட்டியிடுவது சிஸ் பாலினத்தவருக்கு நியாயமானதல்ல என்ற நம்பிக்கை வேறுபாட்டை உருவாக்குவது. தவறானதும்கூட.

ஒருவரது உடலில் இருக்கும் டெஸ்டோஸ்டிரோன் அளவுகளை மட்டும் வைத்து ஒருவரது உயிரியல் பால்தன்மையை நிர்ணயிப்பது யாருக்கு சாதகம் அதிகம் என்பதை நிர்ணயிக்காது. சொல்லப்போனால் சிஸ் பெண்கள் உட்பட பலருக்கு இது பாதகமாகவே இருக்கிறது

எடுத்துக்காட்டாக 2021 இல் நமீபியாவைச் சேர்ந்த ஓட்டப்பந்தய வீரர்களான க்றிஸ்டின் ம்போமா மற்றும் பியாட்ரிஸ் மாசிலிங்கி ஆகிய இருவரும் ஒலிம்பிக்ஸில் போட்டியிடத் தடை விதிக்கப்பட்டது. அவர்களது உடலில் அதிகமான டெஸ்டோஸ்டிரோன் இருந்தது ஒரு காரணமாக சொல்லப்பட்டது. "ஒரு பெண்ணாக யார் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள் என்பதில் எப்போதுமே இனவாதம் இருந்திருக்கிறது" என அமெரிக்கன் சிவில் சுதந்திர யூனியன் இதை விமர்சித்தது.

வெள்ளை இனத்தவரோடு ஒப்பிடும்போது கறுப்பின ஆண்/பெண்களின் உடலில் அதிகமான டெஸ்டோஸ்டிரோன் உண்டு என்பதும் பரவலான நம்பிக்கையாக இருக்கிறது. ஆனால் 2013 இல் கேன்சர் காசஸ் & கன்சர்ன்ஸ் ஆய்வேட்டில் வெளிவந்த ஒரு ஆய்வில் கறுப்பின ஆண்களைப் பொறுத்தவரை இது உண்மையல்ல என்று தெரிவிக்கப்பட்டது.

ஆகவே டெஸ்டோஸ்டிரோன் என்பது ஒரு ஹார்மோன் மட்டுமல்ல, கடந்த காலத்தின் இனவாதம் மற்றும் பாலின பேதத்தையும் தாங்கி வரும் ஒரு கோரமான விலங்கு. அதனால்தான் டெஸ்டோஸ்டிரோனே ஆண்மையின் சாரம் என்ற நம்பிக்கையை உடைக்கும் தன்னுடைய புத்தகத்துக்கு தத்துவவியலாளர் கார்டலியா ஃபைன் "டெஸ்டோஸ்டிரோன் ரெக்ஸ்" என்று பெயரிட்டார். இது சாதாரண டைனோசர் மட்டும் அல்ல, வேட்டையாடியும்கூட.

பெண் தன்மையை வரையறுக்கத் தொடர்ந்து டெஸ்டோஸ்டிரோன் பயன்படுத்தப்படும்போது வெள்ளை இனத்தைச் சேர்ந்த சிஸ் பெண்கள் மட்டுமே பெண்களாக அங்கீகரிக்கப்படுவார்கள். மீதமிருக்கும் எல்லா பெண் தன்மைகளும் கட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கப்படும், இந்த குறுகிய வரையறைக்குள் தங்களைப் பொறுத்திக்கொள்ள கறுப்பினப் பெண்களும் திருநங்கைகளும் தங்களது உடலை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும்.

## நம்பிக்கைக் கீற்றுகள்

2015 இல் சர்வதேச ஒலிம்பிக்ஸ் கமிட்டி திருநங்கைகள் போட்டியில் பங்கெடுப்பது பற்றிய வழிகாட்டுதல்களைத் திருத்தியமைத்தது. இரண்டு ஆண்டுகளுக்கு பதிலாக ஒரு ஆண்டுகால ஹார்மோன் மாற்று சிகிச்சை மேற்கொண்டால் போதும் என்று சொல்லப்பட்டது. பாலின உறுதி அறுவைசிகிச்சையும் கட்டாயமில்லை என்று சொல்லப்பட்டது.

இதற்கு முன்பாக, அதே 2015 ஆம் ஆண்டில் விளையாட்டுக்கான நீதிமன்றத்தில் (Court of Arbitration for Sports) இந்திய தடகள கூட்டமைப்புக்கு எதிரான வழக்கில் ஓட்டப்பந்தய வீரர் டூட்டி சந்த் வெற்றிபெற்றார். உடலில் அதிகமான டெஸ்டோஸ்டிரோன் மற்றும் பிற ஆண் ஹார்மோன்கள் இருந்ததால் அவருக்கு அதீத ஆண்ட்ரோஜெனிஸம் இருப்பதாகக் கூறி இடைக்காலத் தடை செய்யப்பட்டதை எதிர்த்து டூட்டி சந்த் வழக்கு தொடுத்திருந்தார். சந்துக்கு சாதகமாக தீர்ப்பளித்த CAS, அதீத அண்ட்ரோஜெனிசம் காரணமாக விதிக்கப்பட்டிருந்த தடைகளை இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்தி வைத்தது.

விளையாட்டுச் செயல்திறன் மீது டெஸ்டோஸ்டிரோனுக்குத் தாக்கம் இல்லை என்பதில் அறிவியல்ரீதியாக ஒருமித்த கருத்து இல்லாததால் சென்ற ஆண்டு சர்வதேச ஒலிம்பிக்ஸ் கமிட்டி மேலும் சில வழிகாட்டுதல்களை வழங்கியது. "ஒரு தடகள வீரரின் பாலினத்தை

உறுதி செய்யும் கொள்கை ஆபத்தானது, இது எல்லா வீரர்களையும் துன்புறுத்தலுக்குள் ளாக்கக்கூடியது. எல்லா பெண்களையும் பாதிக்கக்கூடியது. தடகள வீரர்களின் உடலைக் கட்டுப்படுத்துவதற்கு பதிலாக எல்லா பெண்களையும் எப்படி இதில் சேர்ப்பது என்பதற்கான வழிகளைக் கண்டறிய வேண்டும், யாருக்கும் அதிகமான சாதகம் இல்லை என்பதையும் உறுதி செய்யவேண்டும்''.

ஆனாலும் திருநர்களான விளையாட்டு வீரர்கள் மீது இருக்கும் தடை தொடர்கிறது. அடிப்படையே ஆட்டமாக இருக்கிற, புகைமூட்டமான அறிவியல் ஒரு முகமூடியாகப் பயன்படுத்தப்படுகிறது. இதன்மூலம் ஆண் மற்றும் பெண் உடல்கள் பற்றிய ஆண்மைய போலி நம்பிக்கைகள் பரப்பப்படுகின்றன. சிஸ் பாலினத்தவராக இல்லாதவர்கள் விளையாட்டுகளில் பங்கெடுப்பதை இது தடுக்கிறது. இவர்களது உடலும் தனியுரிமையும் அத்துமீறப்படுகிறது என்பதால் திருநர்கள் சக போட்டியாளர்களோடு மட்டுமில்லாமல் அவர்களை மாறச்சொல்லும் வழமைகளோடும் போராட வேண்டியிருக்கிறது.

இத்தனை தடைகளையும்மீறி திருநர்கள் தங்களது கனவுகளை நோக்கி ஓடுகிறார்கள், தாவுகிறார்கள், பந்தயத்தில் முன்னேறுகிறார்கள்.

சயந்தன் தத்தா ஒரு குயர்-திருநர்-அறிவியல் பத்திரிக்கையாளராவார். அறிவியல், உடல்நலம், பாலினம், பாலீர்ப்பு, சாதி ஆகியவற்றைப் பற்றி எழுதிவருகிறார். க்ரியா பல்கலைக்கழகத்தின் எழுத்து மற்றும் கற்றல் மையத்தில் ஆசிரியராக இருக்கிறார்.



# விளையாட்டு

*விளையாட்டுகளில் உள்ள பால்புதுமையினர் (LGBTQIA+ நபர்கள்) பற்றி இந்தப் பகுதி விவாதிக்கிறது.*

- *பால்புதுத்தன்மை அல்லது திருநராக இருக்கும் தன்மை ஆகியவற்றை விளையாட்டுத் துறையின் ஒரு மாறுபாடாகக் கருதவேண்டாம். ஒரு பால்புது நபர், ஊடுபால் நபர் அல்லது திருநரின் உடல் உங்களது நிலைப்பாடுகளை சரிபார்த்துக் கொள்ளும் இடம் அல்ல. ஒரு விளையாட்டுப் போட்டியில் ஒரு வீரரின் எதிர்பாலீர்ப்பையோ சிஸ் தன்மையையோ மையப்படுத்துவோமா என்ன?*

- *அவர்களது பால்சார்ந்த மாறுபாடுகளைப் பற்றிய குறுக்கிடும் கேள்விகளைக் கேட்கவேண்டாம்.*

    - *எடுத்துக்காட்டாக, ஹார்மோன் சிகிச்சையைத் தொடங்கப் போகிறீர்களா, பாலின உறுதி அறுவை சிகிச்சை செய்யப்போகிறீர்களா என்று கேட்காதீர்கள். பால்புது மக்களின் உடல்மீது நமக்கு இருக்கும் பிடிவாதத்தைத் தவிர்க்க வேண்டும்.*

- *பிறரின் அடையாளங்களை அதீதமானவையாக சித்தரிக்காதீர்கள். அவர்களுக்கு அது அன்றாட வாழ்க்கை. "இந்தியாவிலிருந்து ஒலிம்பிக்ஸில் பங்கேற்ற முதல் திருநங்கை" போன்ற தலைப்புகள் நாமாகவே பரப்பும் விளிம்புநிலைத் தன்மையிலிருந்து வருபவையே.*

    - *எடுத்துக்காட்டாக நியூசிலாந்தைச் சேர்ந்த பளு தூக்கும் வீராங்கனை லாரல் ஹப்பார்ட் ஒலிம்பிக்ஸில் பங்கேற்றபோது "ஒலிம்பிக்ஸில் பங்கேற்ற முதல் திருநங்கை" என்பதுபோன்ற சித்தரிப்புகளை அவர் விரும்பவில்லை என்பது தெளிவாக இருந்தது. ஆனால் பெரும்பாலான செய்திகள் அவரது அடையாளத்தையே முன்னிறுத்தின. ஒரு விளையாட்டு வீரராக அவர் எப்படிப்பட்டவர், பளுதூக்குதல் அவருக்கு எவ்வளவு முக்கியம் போன்ற எதுவுமே நமக்குத் தெரியவரவில்லை. திருநராக இருப்பது பரபரப்புச் செய்தியல்ல.*

- சிஸ் ஆதிக்கம் நிறைந்த, எதிர்பாலீர்ப்பே வழமையானது என்பதை மையப்படுத்துகிற விளையாட்டுக் களங்களைப் பால்புது வீரர்கள் எப்படி சமாளிக்கிறார்கள் என்பதை கவனித்து, பால்புது கோணத்தில் விளையாட்டுகளை விமர்சிக்கவும்.

- விளையாட்டு மரபுகள் அடையாளங்களை எவ்வாறு ஒடுக்கி அழிக்கின்றன என்பதை கவனிக்கவும். இதில் இருக்கும் பாலின வழமைகளைப் பற்றிப் பேச எந்த அளவுக்கு வாய்ப்பு குறைவாக இருக்கிறது என்பதை கவனிக்கவும்.

- தங்களது அடையாளங்களைத் தனிநபர்கள் வெளிப்படுத்திக் கொள்வதைக் கடந்தும் செய்திகளை எழுதவும். வெளிவருதலைப் பற்றி மட்டுமே பேசும்போது, பால்புதுமையினரின் வருகையால் வீரர்கள் விளையாட்டை அணுகும் முறையில் ஏற்படும் வேறுபாடுகள் கொண்டாடப்படுவது கண்டுகொள்ளப்படாமலேயே போகிறது.

- வீரர்களின் அன்றாட வாழ்வில் பாலினம் சார்ந்த அடிப்படை விதிமுறைகள் பலவும் அவர்களது அடையாளத்தின்மீது வைக்கப்படுகின்றன. இவற்றுக்கு உள்ளேயும் இதற்கு அப்பாற்பட்டும் வீரர்கள் இயங்கும் விதத்தை விளையாட்டுக் களம் எப்படி மாற்றுகிறது என்பதை கவனிக்கவும்.

- சூழ்நிலையை கவனிக்கவும். சில பால்புது விளையாட்டு வீரர்கள் தங்களது விளையாட்டு அடையாளத்தைப் பிற அடையாளங்களிலிருந்து தனிப்பட்டே அணுகுவார்கள். வலுக்கட்டாயமாக பாலினம், பாலீர்ப்பு ஆகியவை பற்றிப் பேசாமல், விளையாட்டு பற்றி அவர்களிடம் உரையாடுங்கள்.

- விளிம்புநிலை அடையாளங்கள் கொண்ட வீரர்களுக்கு எதிரான களமாக இருக்கும் விளையாட்டுத் துறையில் கட்டுப்படுத்தப்படுவதற்கு பதிலாக, அவர்கள் சாதிக்கும்போது அந்தக் களமே அவர்களுக்கான இதம் தரும் இடமாக மாறுகிறது, அது எப்படி நிகழ்கிறது என்று பாருங்கள்.

- ஒருவரது உடல் பாகங்களை வைத்து நீங்கள் யாருடன் விளையாடலாம், எத்தனை சம்பளம் வாங்குவீர்கள், உங்களது தகுதி என்ன என்று நிர்ணயிக்கும் இடமாக விளையாட்டு இருக்கிறது. இந்த நிலை மாற என்ன செய்யலாம் என்ற கேள்வியை எழுப்புங்கள்.

- ஆபத்தான ஆண்தன்மை மற்றும் ஆண்மைய பெண்தன்மை ஆகியவை நிலைநிறுத்தப்படுவதற்கு பதிலாகக் கரைந்துபோகும் இடமாக விளையாட்டு மாறியிருக்கும் நிகழ்வுகளை மையப்படுத்தவும்.

- செய்தி வழங்கும்போது பாலின சமத்துவத்துக்கு விளையாட்டு எப்படி உதவமுடியும், எப்படி முன்னுதாரணமாக இருக்க முடியும் என்பதான கேள்விகளை எழுப்புங்கள்.



# வணிகம் மற்றும் வேலைவாய்ப்பு

*பால்புதுமையினரின் (LGBTQIA+ நபர்கள்) வணிகம், வேலைவாய்ப்பு மற்றும் வேலைசெய்யும் இடங்களைப் பற்றி இந்த பகுதி விளக்குகிறது.*

மிகவும் அமைதியான தொழிற்துறைகளில்கூட பணியிடம் என்பது பல்வேறு சவால்கள், பதற்றங்கள், எரிச்சல்கள் மற்றும் ஆபத்துகள் நிறைந்ததாக இருக்கலாம். தங்களது அடையாளத்தை மாற்றிக்கொண்டால்தான் பாதுகாப்பாகவும் அமைதியாகவும் தொடர்ந்து வேலை செய்ய முடியும் என்ற கட்டாயத்தில் இருக்கும் பால்புதுமையினர், பணியாளர்களாகவோ மேலாளர்களாகவோ இருக்கும்போது இவை மேலும் அதிகரிக்கும்.

ஒரு வர்த்தகம் என்றால் என்ன? மிகப்பெரிய அதிகாரிகள் நிறைந்திருக்கும் ஒரு அறையை நாம் கற்பனை செய்து கொள்வோம். ஆனால் நிஜத்தில் ஒரு வர்த்தகம் என்பது பலதரப்பட்ட பணியிடங்கள் மற்றும் பணி சூழல்கள் கொண்டது. அதில் தனிப்பட்ட அலுவலகங்கள், அரசு அலுவலகங்கள், உங்களது வீடுகள், பிறரது வீடுகள் என்று எல்லாமே இருக்கும்.

வர்த்தகம் செயல்பாடுகளை பணியமர்த்துதல், பணி நீக்கம், தொழில் கூட்டுறவு, ஒரு நிறுவனத்தைக் கையகப்படுத்துதல், மக்கள் தொடர்புப் பிரச்சனைகள் என்று சுருக்கிவிட முடியாது. தூய்மைப் பணியாளர்கள், வீடுகளில் பணி செய்பவர்கள், செயற்பாட்டாளர்கள் ஆகியோரும் வர்த்தகத்தில் இருப்பவர்கள்தாம் என்பதைத் தொகுப்பாசிரியர்கள் மறந்துவிடுகிறார்கள். இதுபோன்ற சூழல்களில் இருக்கும் பால்புதுமையினர் பற்றிய செய்திகளை வழங்கும் ஊடகவியலாளர்கள் தலைப்புகளைத் தாண்டியும் யோசிக்கவேண்டும். தகவல்களைத் தரும்போது அவை சரியானவையா என்பதை மட்டும் பார்க்காமல் அவற்றை உணர்வுரீதியாகவும் ஊடகங்களின் தீவிரத்தன்மையுடனும் நுண்ணுணர்வுடனும் அணுகவேண்டும்.

தொழிலாளர்கள், பணியமர்த்துபவர்கள், சிறப்பு நிபுணர்கள், வணிக நட்சத்திரங்கள், புலம்பெயர்ந்தோர், வெளிநாட்டவர், இன்ஃப்ளூயென்சர் என பலதரப்பட்ட விதங்களில் வணிகத் தளங்களில் பங்காற்றும் பால்புதுமையினரைப் பற்றிய தகவல்களைத் தரும்போது பத்திரிக்கையாளர்களும் தொகுப்பாசிரியர்களும் பின்பற்றவேண்டிய அடிப்படைகள் இந்தப் பகுதியில் தரப்பட்டிருக்கின்றன.

- குற்றம் சார்ந்த செய்திகளை வழங்கும் பத்திரிக்கையாளர்களோடு ஒப்பிடும்போது தொழில்துறையில் உள்ள பால்புதுமையினரைப் பற்றிய செய்திகளை வழங்கும் பத்திரிக்கையாளர்கள் சட்டரீதியான கட்டுப்பாடுகள் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று ஒரு தவறான புரிதல் இருக்கிறது. வர்த்தக சூழலிலும் பால்புது அடையாளங்களுக்கு உணர்வுரீதியான புரிதலையும் மரியாதையையும் கொடுக்கவேண்டும். உங்களுக்கு செய்திகளைத் தருபவர்கள், உடன் பணியாற்றுபவர்களிடமோ தங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்களிடமோ மேலதிகாரிகளிடமோ தங்களது அடையாளங்களை வெளிப்படுத்தாமலிருப்பதற்கான வாய்ப்பு உண்டு என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவும். தவறுதலாக அந்த அடையாளத்தை வெளிப்படுத்திவிட்டால் ஆபத்தாகிவிடும், அல்லது மன உளைச்சலையும் தரக்கூடும். போர்க்களத்திலும் சரி, அலுவலகச் சூழலிலும் சரி, செய்தி வழங்குபவர்களைப் பாதுகாப்பது பத்திரிக்கையாளர்களின் கடமை.

- ஒரு பெருநிறுவன சூழலில் தென்படும் திருநர் வெறுப்பு, பால்புது வெறுப்பு ஆகியவற்றை சுட்டிக்காட்டுவதும் சவாலானது. ஏனென்றால் வெறுப்புடன் நடந்துகொள்பவர்கள் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக உயர்ந்த இடத்தில் இருக்கலாம். ஆகவே பால்புது நபர்களிடம் பேசும்போது பத்திரிக்கையாளர்கள் நம்பிக்கையுடனும் புரிந்துணர்வுடனும் செயல்படவேண்டும். சுருக்கமாக சொல்லப்போனால் அனுபவமற்ற பத்திரிக்கையாளர்களுக்கு இந்தப் பணி உகந்ததல்ல.

- பால்புது நபரிடம் பேசி கேள்விகள் கேட்பதற்கு முன்னதாக சில விஷயங்களை செய்ய வேண்டும். உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளவும், உங்களது நிறுவனத்தைக் குறிப்பிடவும், அவரது பெயர் மற்றும் வயதை எழுதிக்கொள்ளவும் (சரியான எழுத்துகளை அவரிடமே கேட்டு உறுதிப்படுத்திக்கொள்ளவும்), அவரது பெயர்விகுதிகள் மற்றும் பணி பற்றிய விவரங்களை எழுதிக் கொள்ளவும். அவர்கள் சௌகரியமாக உணர்கிறார்களா, உங்களிடம் ஆர்வமாகப் பேச ஒப்புதல் அளிக்கிறார்களா, நீங்கள் கேட்கப்போகும் கேள்விகளுக்கு பதிலளிக்கத் தயாராக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

- உங்களுக்குத் தகவல் தருபவர் ஒரு தனிநபராக இருக்கிறாரா அல்லது நிறுவனம்/ தொழில்துறையின் பிரதிநிதியாக இதைப் பேசுகிறாரா என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு அதை எழுத்திலும் பதிவு செய்வது அவசியம். நீங்கள் எழுதும் கட்டுரை எப்படிப் பார்க்கப்படும் என்பதை இது பெருமளவில் மாற்றியமைக்கும். மேலும், அந்த நிறுவனத்தின் ஊடகம் சார்ந்த கொள்கைகளை அவர் அறிந்திருக்கிறாரா என்பதையும் கவனிக்கவும். அப்போதுதான் உங்களிடம் பேசும்போதும் மேற்கோள் தரும்போதும் அவர் கொள்கைகளுக்குக் கட்டுப்படுகிறாரா அல்லது அவற்றை உடைக்கிறாரா என்பதை அறிந்துகொள்ள முடியும். உங்களிடம் பேசுவதை அவர் சார்ந்த நிறுவனத்தின் மக்கள் தொடர்புத் துறை ஒப்புக்கொள்கிறதா என்று கேட்கவும். உங்களது கட்டுரை பொதுநலம் பற்றியதாக இருந்தாலோ பேசுபவர் ஒப்புதல் வாங்குவதை விரும்பவில்லை என்றாலோ அது தேவையில்லை. ஆனால் இதைப் பின்பற்றுவது அவருக்கும் உங்களுக்கும் கூடுதல் பாதுகாப்பை வழங்கும்.

- தொழில்துறையில் உள்ள பால்புதுமையினர் பற்றி எழுதும்போது "வறுமையிலிருந்து மேலே வந்தவர்" அல்லது "மனதுக்கு உத்வேகம் அளிக்கும் கதை" போன்ற தலைப்புகளோடு மற்றும் அவர்களது வாழ்க்கையை நிறுத்திக்கொள்ள வேண்டாம். விளிம்புநிலை மக்களின் வாழ்க்கை அவ்வளவு எளிமையானது அல்ல, உங்களது அறிக்கைகளில் ஓரளவாவது நுண்ணுணர்வு வேண்டும்.

- பால்புது நபருக்கு வேலையில் பிரச்சினை இல்லை என்பதாலோ அவர் வேலையில் சாதனைகள் செய்திருக்கிறார் என்பதாலோ அவருக்கு வேலைப் பாதுகாப்பு இருக்குறது என அர்த்தமில்லை.

- பால்புது அடையாளங்கள் வர்க்கம், சாதி, தோலின் நிறம், மதம், உடல் சவால், மன நலம், பொருளாதாரப் பின்னணி ஆகியவற்றோடும் பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளவும். பேட்டி தருபவரின் ஒரு அடையாளத்தை மட்டுமே முன்னிறுத்தி பிற அம்சங்களை மழுங்கடிக்கிறீர்களா என்று பார்க்கவும். ஒரு அடையாளத்தோடு சுருக்கிவிடாமல் அவர்களது முழுமையான ஆளுமையைப் பற்றிப் பேசவேண்டும் என்பதால் அவர்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் கேட்டு அறியவும்.

- ஒரு பால்புது நபரைப் பற்றிய செய்தி அல்லது கட்டுரையை வழங்கும்போது அவர்களது பால்புது அடையாளம் கட்டுரைக்கு முக்கியமானதா என்று பார்க்கவும். மக்களுக்கு அந்த அடையாளத்தைத் தெரியப்படுத்துவது அவசியமா என்று யோசிக்கவும்.
  - எடுத்துக்காட்டாக, பணியமர்த்துதல்/பணிநீக்கம்/நிறுவனங்களுக்கு இடையிலான கூட்டுறவு/கையகப்படுத்துதல் பற்றிய கட்டுரையில் அவரது பால்புது அடையாளத்தை மையப்படுத்த வேண்டுமா? இதே சூழலில் ஒருவரது சிஸ்/எதிர்பாலீர்ப்பு அடையாளத்தைப் பற்றிப் பேசுவீர்களா? அது விநோதமாக இருக்குமானால் பால்புது நபரையும் அப்படியே நடத்துவதைத் தவிர்க்கவும்.

- தொழில்துறையில் உள்ள பால்புதுமையினர் பற்றிய எதிர்மறை செய்திகளை வழங்கும்போது அவர்கள் மீது வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கும் அவர்களது பால்புது அடையாளத்துக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்கிறதா என்று பார்க்கவும் (பாலியல் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர் அல்லது குற்றம்சாட்டப்பட்டவரின் இடத்தில் பால்புதுமையினர் இருந்தால் அதை எப்படி அணுகவேண்டும் என்று குற்றம் பற்றிய பகுதியில் தரப்பட்டுள்ளது)

- சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் அறிக்கைக்கு சம்பந்தம் இல்லாதபட்சத்திலோ மையக்கருத்திலிருந்து அது திசைதிருப்பும் என்றாலோ பால்புதுமையினரின் அடையாளத்தைத் தேவைக்கு அதிகமாகப் பெரிதுபடுத்தவேண்டாம்.

- செய்தி தருபவரின் அடையாளத்தை ரகசியமாக வைப்பது பத்திரிக்கையாளரின் அடிப்படையான கொள்கை. தங்களது பால்புது அடையாளத்தை வெளிப்படுத்திக் கொள்ளாதவர்களிடம் பேசும்போது அதை நீங்கள் வெளிப்படுத்திவிட்டால் அவர்களது தற்போதைய வேலை மட்டுமல்லாமல் எதிர்கால வேலைவாய்ப்பும் பாதிக்கப்படும் என்பதை மனதில் வைத்துக்கொள்ளவும். சட்டரீதியாகவும் அறம்சார்ந்தும் தேவைப்படும்

இடங்களில் அவரது பெயரைக் குறிப்பிடாமல் இருக்கவும். அதற்கான எல்லா முயற்சிகளையும் செய்யவும்.

- உங்களுக்கு செய்தி வழங்குபவரிடம் அலுவலக தொலைபேசி எண்கள், வணிகக் கணக்குகள், வணிக மின்னஞ்சல் முகவரிகளில் தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்.

- நீங்களும் உங்களுக்கு செய்தியளிப்பவரும் சந்திக்கும் பாதுகாப்பான இடங்களைப்பற்றி முதலியேலே பேசி ஆலோசனை செய்து கொள்ளுங்கள்.

- ஒருவரின் அடையாளத்தைக் குறிப்பிட்டால் அவர்கள் வெளிப்பட்டு விடுவார்களா என்பதை உறுதி செய்யவும். வேலை செய்யும் அனைவருமே ஒருவரை ஒருவர் தெரிந்து வைத்திருக்கும் சிறு நிறுவனங்களில் இது ஒரு பெரிய ஆபத்து. பெயர் குறிப்பிடாமல் ஒருவரைப் பற்றி எழுதினால்கூட அவர்கள் யாரென்று நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் யூகித்துவிடுவார்கள்.

- செய்திகளைத் தருபவர் உங்களுக்கு ஒப்புதல் அளித்திருந்தாலும் அவரது அடையாளம் வெளிப்படுவதற்கும் நிறுவனத்தில் அவர்மீது சந்தேகம் வருவதற்கும் கேள்விக்குட்படுத்தப்படுவதற்கும் வாய்ப்புகள் உண்டு. வெளிப்பட்டுவிடுவது, தனிமைப்படுத்தப்படுவது, சட்டரீதியான நடவடிக்கையை சந்திப்பது உள்ளிட்ட பின்விளைவுகளை அவர்கள் சந்திக்க நேரிடும் என்று பேட்டியளிப்பவர்கள் புரிந்துகொண்டிருக்கிறார்களா? அதை உறுதி செய்துகொள்ளவும்.

- "*Off the Record*" மேற்கோள்கள், கருத்துகள் ஆகியவற்றின் எல்லைகளைப் பற்றி அவர்களிடம் விரிவாகக் கூறுங்கள். இருதரப்பினருமே இதை ஏற்றுக்கொண்டால்தான் பேட்டியைத் தொடங்க முடியும்.

- பெருநிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் அரசுகளோடு தொடர்பு உடைய சுயமரியாதை நிகழ்வுகளை விமர்சனப்பூர்வமாகவும் கவனமாகவும் அணுகவும். அப்படி செய்யாவிட்டால், துல்லியமாகவும் பாரபட்சமின்றியும் நல்லவிதமாகவும் எழுதப்படவேண்டிய ஒரு அறிக்கையின் தன்மை மாறிவிடும். நிகழ்வு ஒருங்கிணைப்பாளர்களுக்கான பத்தரிக்கைச் செய்தியாக அது மாறிவிடும். இதன்மூலம் பால்புது அடையாளம் மட்டுமல்லாமல் சாதி, தோலின் நிறம், மதம், உடல் சவால் ஆகியவற்றாலும் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டிருப்பவர்களின் குரல் ஒடுக்கப்படும். சுருக்கமாக சொல்லப்போனால், பால்புது பணியாளர்கள் இருக்கிறார்கள் என்பதனை வெளிப்படுத்த நினைக்கும் ஒரே காரணத்துக்காக நிறுவனங்களைப் பாராட்டிவிட முடியாது. இந்த பண்புகளை உண்மையாகவே பிரதிபலிக்கும்படி அவர்களது கொள்கைகளும் நடைமுறையும் இருக்கிறதா என்பதை பத்திரிக்கையாளர்கள் ஆராய வேண்டும்.

- கூடியவரையில் பெருநிறுவனங்களின் சுயமரியாதை அல்லது பால்புது நிகழ்வுகளை செய்தியாக்குவதைத் தவிர்க்கவும். நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர்கள் மட்டுமல்லாமல் சம்பந்தப்பட்ட பலதரப்பினர், பார்வையாளர்கள், பங்கேற்பாளர்கள் ஆகியோரிடம் பேசி சரியான தகவல்கள் கிடைத்தால் இதுபோன்ற அறிக்கைகளை வெளியிடலாம்.

- ஒரு நிறுவனத்தின் பால்புது பன்முகத்தன்மை, சமத்துவம், அனைவரையும் உள்ளடக்கிய கொள்கைகள் ஆகியவற்றை அனுபவபூர்வமாக உணர்ந்தவர்களுக்குத் தங்களை வெளிப்படுத்திக்கொள்ள ஒரு தளம் கிடைத்திருக்கிறது என்பதை உறுதி செய்துகொள்ளவும். பிரச்சனைக்கு அருகில் இருப்பவர்களின் குரலை நிபுணர்களின் குரல் ஒடுக்கிவிடாமல் பார்த்துக்கொள்ளவும்.

- வணிகத்துறையில் இருக்கும் பால்புதுமையினரிடம் குடும்பம்/இணையர்கள் போன்ற தனிப்பட்ட தகவல்களைக் கேட்பதற்கு முன்பு அவர்களிடம் ஒப்புதல் பெறவும். அவர்கள் தரும் தகவல்கள் "*Off the Record*" என்ற நிபந்தனைக்குள் வருமா என்பதையும் தெளிவுபடுத்திக்கொள்ளவும்.

- தனிப்பட்ட பிரச்சனைகள், காயங்கள், துன்புறுத்தல்கள், குடும்ப வன்முறை ஆகியவை பற்றி அவர்கள் பேசும்போது, அது சட்டரீதியான கட்டுப்பாடுகளுக்குள் வரும்போது அவர்களிடம் எழுத்துரீதியான ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளவும்.

- மாணவர்களாக இருக்கும் பால்புது நபர்களிடம் பேசும்போது கவனமாக இருக்கவும். செய்தியில் தோன்றுவதில் உள்ள ஆபத்துகளை அவர்களிடம் தெரிவிக்கவும். அவர்களை வெளிப்படுத்துவதில் உள்ள ஆபத்தை உணர்ந்து அவர்களின் புகைப்படம்/அடையாளம்/வீடியோ ஆகியவற்றை வெளிப்படுத்துவதைத் தவிர்க்கவும்.

- இந்தத் தகவல் வைரலானாலோ பலரால் கவனிக்கப்பட்டாலோ என்ன ஆபத்து உருவாகும் என்பதை நீங்களோ பேட்டி தருபவரோ உணர்ந்திருக்கிறீர்களா? அப்படி நேரும்போது அறிக்கையைத் திரும்பப் பெறாமலேயே அதை சமாளிக்கத் தயாராக இருக்கிறீர்களா? பேட்டி தருபவரின் தனிப்பட்ட அல்லது தொழில்ரீதியான தகவல்களைக் கவனப்படுத்துவதற்கான ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளவும்.

- நீங்கள் தரும் வணிக ரீதியான தகவல்களை அவர்களது பால்புது அடையாளம் அல்லது தனிப்பட்ட வாழ்க்கைத் தகவல்கள் மழுங்கடிக்கவில்லை என்பதை உறுதி செய்துகொள்ளவும். (விதிவிலக்கு: நீங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை மையப்படுத்தி ஒரு கட்டுரையை எழுதுகிறீர்கள், அதற்கான தகவல்களை அவர்களே தருகிறார்கள் என்றால் இது ஏற்றுக்கொள்ளத்தக்கது).

- வணிகத்துறையில் இருக்கும் பால்புதுமையினரைப் பற்றிய உங்களது அறிக்கை, அவர்களது குடும்பம், நண்பர்கள், சக பணியாளர்கள், தெரிந்தவர்கள், இணையர்கள் ஆகியோரிடம் அவர்களைத் தவறுதலாக வெளிப்படுத்தவில்லை என்பதை உறுதி செய்துகொள்ளவும்.



# மதம் மற்றும் ஆன்மீகம்

*இந்தப்பகுதியில் பால்புதுமையினரின் (LGBTQIA+ நபர்கள்) நம்பிக்கை, மதாமைப்பு, நம்பிக்கைக்கும் பால்புதுமையினருக்குமான உறவு, மதப் புராணக்கதைகள் மற்றும் அவற்றுக்கும் பால்புதுமையினருக்குமான தொடர்பு, கலாச்சார விழாக்கள், மதங்களில் இருக்கும் பால்புதுமையினர், அவர்களின் எல்லைகள், பெரும்பான்மைவாதம் ஆகியவை விவாதிக்கப்படுகின்றன.*

மதம் மற்றும் மதம் சார்ந்தவர்களைப் பற்றிய செய்திகளை வழங்கும்போது பால்புதுமையினர் பிரச்சனை போன்ற அரசியல் கொள்கைகளில் அவர்களது அணுகுமுறை பற்றிய விமர்சனப் பார்வையை எடுத்துக்கொள்வது சவாலானது. ஏனென்றால் சம்பந்தப்பட்டவர்கள், வாசகர்களின் உணர்வுகளை கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். பால்புதுமையினர் மீதான முன்முடிவுகள், அதனால் அவர்களுக்கு வரும் பாதிப்புகளையும் கவனிக்கவேண்டும். மதம்சார்ந்த உணர்வு, மதசார்பின்மைக் கொள்கைகள், மத சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு, பால்புதுமையினரின் உரிமைகளைப் பேணுவது என எல்லாவற்றையும் சமநிலையில் வைக்கவேண்டும், இது ஒரு நுணுக்கமான செயல்பாடு.

பால்புதுமையினரின் மதம், மதங்களுடன் அவர்களுக்கு இருக்கும் தொடர்பு ஆகியவை பற்றிய செய்திகளை வழங்கும்போது, ஒரு தனிநபரின் நம்பிக்கைகள் அவர்களது சொந்த பாலின/பாலீர்ப்பு அடையாளத்துக்கே எதிரானவையாக இருக்கும் சூழலை நீங்கள் எதிர்கொள்ளலாம். ஆகவே அவரைப் பொறுத்தவரை நம்பிக்கை என்பது என்ன, அவர்களது தனிப்பட்ட நம்பிக்கை என்ன என்பனவற்றை நீங்கள் கவனமாக அணுகிப் புரிந்துகொள்வது அவசியம்.

- எந்த மதம் பற்றிய செய்திகளைத் தரும்போதும் அந்த மதத்தைச் சேர்ந்தவர்களிடம் பேசுவது முக்கியமானது. ஒரே நம்பிக்கையுடன் பல பால்புதுமையினர் இருக்கும்போது அவர்கள் எப்படி இயங்குகிறார்கள், அவர்களிடையே இருக்கும் வேற்றுமைகள், ஒற்றுமைகளை முன்னிறுத்துவது அவசியம். ஒரு முழு சமூகத்தையும் பொதுமைப்படுத்துவது பிரச்சனைக்குரியது.

  - எடுத்துக்காட்டாக, குயர் மக்களின் பிரச்சனை (திருமண சமத்துவம் என்று வைத்துக்கொள்வோம்) பற்றிய ஒரு வழக்கு விசாரணையில், சில மதக் குழுக்கள் பால்புதுமையினருக்கு ஆதரவாகவோ எதிராகவோ பேசலாம். இந்த விவரங்களை வழங்கும்போது, குறிப்பாக எதிர்க்குரல்களைப் பதிவு செய்யும்போது அந்த மதத்தைச் சேர்ந்த பால்புதுமையினரின் கருத்துகளையும் தெரிவிக்க வேண்டும். மதக் குழுக்களின் நிலைப்பாடு பற்றிய அவர்களது கருத்தைப் பதிவு செய்யவேண்டும். இது அவர்களின் மத நம்பிக்கையோடு எவ்வாறு பொருந்துகிறது என்பதை கவனிக்கவேண்டும். மத சிறுபான்மையினர் பற்றிய விவகாரங்களில் இது மேலும் அவசியமானதாகும்.

- மதம் மற்றும் நம்பிக்கைகள் பற்றிய செய்திகளை வழங்குவது முக்கியமானது. ஆனாலும் நம்பிக்கை என்ற போர்வையில் பெரும்பான்மைவாதத்தைப் பரப்புவதில் ஒரு எல்லையை வரையறுக்க வேண்டியதும் அவசியம். இந்த எல்லை குறுகியது என்றாலும் உங்களது செய்தியின் தொனி இந்தப் பிரச்சனையை ஓரளவு சமாளிக்க உதவும்.

  - எடுத்துக்காட்டாக, பால்புதுமையினர் அதே மதத்தைச் சேர்ந்த பால்புதுமையினரை விமர்சிக்கும்போது இரண்டு தரப்பிடமும் பேசவேண்டும். இரண்டு தரப்பின் பிற அடையாளங்கள், அதிகாரங்கள் ஆகியவற்றையும் மனதில் கொண்டு செய்தியை வழங்கவேண்டும்.

- பெரும்பாலான அமைப்புரீதியான மதங்கள், குறிப்பாக ஆப்ரகாமிக் மதங்கள், சில கிழக்காசிய மதங்கள் ஆகியவற்றில் மதநூல்களிலேயே பால்புதுமையினர், அவர்களது உரிமைகளுக்கு எதிரான கருத்துகள் இருப்பதான ஒரு புரிதல் முன்வைக்கப்படுகிறது. இந்த மதங்களின் பிரதிநிதிகள் மதநூல்களை மேற்கோள் காட்டி, பால்புதுமையினரின் இருப்பு தங்களது புனிதமான நம்பிக்கைக்கு எதிரானது என்பார்கள். இவர்களைப் போன்றவர்களிடம் பேசும்போது அதே மதத்தைச் சேர்ந்த பால்புதுமையினரிடமும் பேசவும். அதே மதம் இவர்களுக்கு எவ்வாறு ஒரு புகலிடமாக இருக்கிறது, அல்லது தங்களது மதத்தை மறுபுரிதல் மூலம் பால்புது தன்மைக்கு ஏற்றதாக இவர்கள் எப்படி உணர்ந்தனர் என்பதை இதன்மூலம் மையப்படுத்தலாம்.

  - எடுத்துக்காட்டாக, சில ஆண்டுகளுக்கு முன்னால் சென்னையில் நடந்த சுயமரியாதை நிகழ்வின்போது சுயமரியாதைப் பேரணிக்கு எதிராக சில கிறித்தவக் குழுக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். பால்புதுமையினரிடம் பேசாமலேயே பல ஊடகங்கள் இந்த எதிர்ப்பேரணியைப் பற்றிய செய்திகளை வெளியிட்டன. இதுபோன்ற செய்திகளில் முடிந்தவரை பால்புதுமையினரின் குரல்களையும் சேர்ப்பது முக்கியம். எடுத்துக்காட்டாக இந்த நிகழ்வின்போது கிறித்தவ பால்புதுமையினரின் மேற்கோள்களை சேர்த்திருக்கவேண்டும்.

- கடந்த சில ஆண்டுகளாக நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட பால்புது குழுக்கள் அதிகமாக உருவாகி வருகின்றன. ஏற்கனவே இருக்கும் பால்புது குழுக்களும் மெலிதாகவும் அதிகமாகவும் மதங்களின்மீது சாய்வை வெளிப்படுத்துகின்றன. இதுபோன்ற அமைப்புகளைப் பற்றிய செய்திகளை வழங்கும்போது இந்த அமைப்பு

ஏன் தேவைப்பட்டது, பிற நம்பிக்கைசார் குழுக்களுக்கும் இவர்களுக்கும் இருக்கும் வேறுபாடு என்ன போன்றவற்றைப் பற்றிய விவரங்களை சேகரிக்கவும்.

- இந்தியாவில் பல பகுதிகளில் பல நாட்டார் நிகழ்வுகளில் பால்புதுமையினர் பங்கெடுக்கின்றனர். இவற்றில் சில அமைப்புரீதியான மதங்களோடும் சேர்ந்தவையாக இருக்கின்றன. இவற்றை பால்புதுமையினரின் கோணத்தில் அணுகுவது நல்லது. குறிப்பாக கலாச்சார பின்னணி, குயர் மக்களின் வாழ்வில் இந்த நிகழ்வுகள் சேர்க்கும் நன்மைகள் ஆகியவற்றைப் பேசவேண்டும். ஆனால் ஒரேடியாகக் கொண்டாட்ட தொனியை எடுக்கவேண்டாம். இதுபோன்ற விழாக்களில் பங்கெடுப்பதில் குயர் மக்களுக்கு இருக்கும் சிரமங்களையும் மையப்படுத்தவும். (கூடுதல் விவரங்களுக்கு சுயமரியாதை மற்றும் பிற குயர் நிகழ்வுகள் பற்றிய பகுதியைப் பார்க்கவும்)
    - எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டின் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள கூத்தாண்டவர் கோயிலில் சித்திரை மாதத்தில் நடக்கும் வருடாந்திர கூவாகம் திருவிழா பரவலாக செய்திகளில் வருகிறது. இதைப் போலவே பால்புதுமையினர் பங்குபெறும் பல கொண்டாட்ட/துக்க நிகழ்வுகள் உண்டு. ஆனால் நிகழ்வுக்குப் பின்னணியில் உள்ள புராணத்தை மட்டுமே பேசாமல், இதில் பங்கெடுக்கும் பால்புது மக்கள், அவர்களுக்கு அந்த நிகழ்வு ஏன் முக்கியன் என்பது பற்றியும் பற்றியும் பேசவும்.
- மத நம்பிக்கை காரணமாக பால்புதுமையினர் மீது நிகழ்த்தப்படும் வன்முறை பற்றிய செய்திகளில், தனிப்பட்ட நிகழ்வை முன்வைத்து ஒரு முழு மதம் அல்லது குழுவையே பொதுமைப்படுத்தக்கூடாது. இதுபோன்ற வன்முறைகளால் பால்புதுமையினர் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைப் பேசவேண்டும். ஒரு குறிப்பிட்ட மதத்தை சார்ந்தவர்களால் பால்புது மக்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறை அதிகரித்திருப்பதை நீங்கள் சுட்டிக்காட்ட விரும்பினால் அதை நுணுக்கமாக அணுகவேண்டும். பலதரப்பட்ட குரல்களையும் அதில் சேர்க்கவேண்டும். சமகால நிகழ்வுகள், கோணங்களின் காரணங்களைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள், அந்த மதம் அல்லது குழுவை பொதுமைப் படுத்துவதைத் தவிருங்கள்.
    - எடுத்துக்காட்டாக, தங்களைக் கடவுளின் தூதுவர்களாக அறிவித்துக்கொள்ளும் பலர்மீது பாலியல் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. பாலியல் தாக்குதலுக்கு இரு தரப்பினரின் பாலீர்ப்பும் காரணமல்ல என்பதை நினைவில் வைத்துக்கொள்வது அவசியம் (கூடுதல் விவரங்களுக்கு குற்றம் பற்றிய பகுதியைப் பார்க்கவும்). குற்றம் செய்தவர் அந்த மதத்தின் முழுப் பிரதிநிதி அல்ல என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ளவும்.

# பங்களிப்பாளர்கள்

## ஊடகக் கையேடு

- **கிரீஷ்** *(he/ன்) - எழுத்தாளர் & கவிஞர். ஆசிரியர், குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்*
- **மௌலி** *(he/ன்) - நிறுவனர், குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்*
- **ராகமாலிகா கார்த்திகேயன்** *(he/she/ன்/ள்) - மூத்தத் தலைவர் - வருவாய் & முன்னெடுப்புகள், த நியூஸ் மினிட்*
- **நாராயணி சுப்ரமணியன்** *(she/ள்) - எழுத்தாளர் & கடல் சார் ஆய்வாளர்*
- **செந்தில்** *(he/ன்) - திட்ட இயக்குனர், குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்*
- **வை** *(they/ர்) - ஓவியக்கலைஞர்*
- **அசீஃபா ஃபாத்திமா** *(she/ள்) - மூத்த நிருபர், த நியூஸ் மினிட்*
- **ஷிவானி காவா** *(she/ள்) - நிருபர், த நியூஸ் மினிட்*
- **லக்ஷ்மி ப்ரியா M** *(she/ள்) - மூத்த துணை ஆசிரியர், த நியூஸ் மினிட்*
- **ஜானவி** *(she/ள்) - உதவி செய்தி ஆசிரியர், த நியூஸ் மினிட்*
- **ரஞ்சிதா குணசேகரன்** *(she/ள்) - உதவி ஆசிரியர், த நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்*
- **சயந்தன் தத்தா** *(they/ர்) - அறிவியல் பத்திரிக்கையாளர்*
- **சஹானா வேணுகோபால்** *(she/ze/ள்/ர்)*
- **அங்குர் பலிவால்** *(he/they/ன்/ர்) - ஊடகவியலாளர், நிறுவனர் - குயர்பீட்*
- **ராகி குப்தா** *(they/ர்) - Head of Creative Content Management, Pixstory*

- ***ஹிமான்ஷு ஆர்யா** (he/they/ன்/ர்) - பத்திரிகையாளர்*
- ***K சத்யா கீர்த்தி** (he/ன்) - புகைப்பட பத்திரிக்கையாளர்*
- ***விஜயதா லால்வானி** (she/they/ள்/ர்) - ஊடகவியலாளர்*
- ***சேத்னா ஆனந்த்** (she/ள்)*

## சொற்களஞ்சியம்

*குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ், த நியூஸ் மினிட், ஓரினம் மற்றும் தனிநபர்களால் உருவாக்கப்பட்ட சொற்களஞ்சியத்தின் ஒரு பதிப்பு 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 'ஆங்கில மற்றும் தமிழ் ஊடகங்களுக்கான பால்புது பதங்கள்' என்ற பெயரில் வெளியிடப்பட்டு சென்னை உயர்நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி என் ஆனந்த் வெங்கடேஷ் வழங்கிய உத்தரவில் தமிழ்நாடு அரசின் அலுவல் ரீதியான சொற்களஞ்சியத்துக்கு இந்தப் பதங்களை பரிசீலிக்குமாறுத் தெரிவித்திருந்தார்.*

- ***கிரீஷ்** (he/ன்) - எழுத்தாளர் & கவிஞர். ஆசிரியர், குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்*
- ***மௌலி** (he/ன்) - நிறுவனர், குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்*
- ***நாராயணி சுப்ரமணியன்** (she/ள்) - எழுத்தாளர் & கடல் சார் ஆய்வாளர்*
- ***ராகமாலிகா கார்த்திகேயன்** (he/she/ன்/ள்) - மூத்த தலைவர் - வருவாய் & முன்னெடுப்புகள், த நியூஸ் மினிட்*
- ***செந்தில்** (he/ன்) - திட்ட இயக்குனர், குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்*
- ***நாடிகா நாடியா** (she/they/ள்/ர்) - எழுத்தாளர் மற்றும் சம்பூர்ணா பணிக்குழு உறுப்பினர்*

இன்க்ளூஸிவ் நியூஸ்ரூம்ஸ் பால்புதுமையினர் (LGBTQIA+) ஊடகக் கையேடு என்பது குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ் மற்றும் த நியூஸ் மினிட் நிறுவனங்களின் மூலம் கூகிள் நியூஸ் இனிஷியேட்டிவின் ஆதரவுடன் நடத்தப்படும் ஒரு முயற்சியாகும். பால்புது நபர்கள், சமூகங்கள், அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்து பொறுப்புடன் செய்தி வெளியிட விரும்பும் ஊடகங்களுக்கு உதவவே இந்தக் கையேடு உருவாக்கப்பட்டிருக்கிறது. திருநர் நபர்கள் எவ்வாறு அழைக்கப்பட வேண்டும்? ஊடுபால் நபர்கள் என்பவர்கள் யார்? ஒருபால் ஈர்ப்பு கொண்ட பெண் ஒருவர் அரசியலில் நுழையும்போது அது குறித்து எவ்வாறு எழுத வேண்டும்? இந்த கேள்விகளுக்கும் இன்னும் பல கேள்விகளுக்கும் ஊடகக் கையேடு பதிலளிக்கிறது.

அரசியல், கல்வி, ஆரோக்கியம், வணிகம், குற்றம், விளையாட்டு, அறிவியல் மட்டும் தொழில்நுட்பம் உள்ளிட்ட இருபது தலைப்புகளில் பால்புது எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், களச்செயற்பாட்டளர்களால் எழுதப்பட்ட இந்த கையேடு ‘என்ன?’ என்கிற கேள்விக்கு மட்டும் அல்ல, ‘ஏன்?’ எனும் கேள்விக்கும் பதில் அளிக்கிறது.

By

குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்
Queer Chennai Chronicles

The NEWS Minute

Supported by

Google News Initiative

www.news-inq.com